Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

பக்கங்கள் 16


விலை ரூபா 12.00


**வகுப்புக்கள் நடைபெறுகின்றன**

எதிர்வரும் 8ம் மாதம் 11ம் திகதி நடைபெறவுள்ள எழுதுநர் பரீட்சைக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.
சனி, ஞாயிறு மற்றும் ஏனைய நாட்கள் பிற்பகல் 3மணி

**அறிவுடமை கல்வி நிலையம்**
கிளிநொச்சி.

நாதம் 13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஆடி 10 | 26-07-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 158







நிலாந்தன்...
பக்கம் - 03


மு.திருநாவுக்கரசு
கட்டுரை
பக்கம் - 05


தூரனின் பார்வையில்..
பக்கம் - 07


இந்தியாவின் புதிய
சனாதிபதி...
பக்கம் - 12

# அரசின் செயலைக் கண்டித்து ஜே.வி.பி தேசிய ரீதியில் எதிர்ப்பு இயக்கம் நடத்தும்

(கொழும்பு)

சிறிலங்கா அரசிற்கு எதிராக ஜே.வி.பி எதிர்வரும் 31ஆம் திகதி நாடுதழுவிய ரீதியில் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நடத்தவுள்ளது.

சிறிலங்கா அரசின் சமாதான முயற்சிகளைக் கண்டித்தும் அரச உடமைகளை தனியார் மயமாக்குவது மற்றும் விலைவாசி ஏற்றம் என்பவற்றைக் கண்டித்தும் ஜே.வி.பி இவ் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தவுள்ளது.

இந்த எதிர்ப்பு இயக்கத்தில் சுமார் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொள்வார்கள் என ஜே.வி.பி யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 12 ஆம் திகதி எதிர்க் கட்சித்தலைவர் மகிந்த ராஜபகஷவின் தலைமையில் நடைபெறவுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கூட்டுத் தொழிற்சங்க குழு ஆதரவு தெரிவித்துள்ளது.

மேல்மாகாண ஆளுநரும் தொழிற்சங்கவாதியுமான அலவி மௌலானா தலைமையில் நடைபெற்ற தொழிற் சங்கப் பொதுக் கூட்டத்திலேயே இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## அனுமதி அட்டை பெறாதவர் தொடர்பு கொள்ளவும்

(அலுவலக நிருபர்)

கிளி மாவட்டத்திலிருந்து 2001 ஆகஸ்ட் மாதத்திற்கு முன்பதாக விண்ணப்பித்திருந்த மாகாண எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருந்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கிளி வலயக் கல்விப் பணிமனைக்கு வந்து சேர்ந்துள்ளது.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத புரீட்சார்த்திகள் கிளி வலயக் கல்விப் பணிமனையுடன் உடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கிளி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. சின்னராசா வேண்டுகை விடுத்துள்ளார்.(சோ)

## -மொறக்கொட்டாஞ்சேனை- இராமகிருஸ்ண வித்தியாலயத்திலிருந்து விரைவில் படையினர் வெளியேறுவர்

படையினர் நிலைகொண்டிருந்தமையால் பல வருடங்களாக கொட்டகையிலும் 1998ம் ஆண்டு முதல் வேறு இடத்திலும் இயங்கிவந்த மொறக்கொட்டாஞ்சேனை இராமகிருஸ்ணமிசன் பாடசாலையிலிருந்து இராணுவத்தினர் விரைவில் வெளியேறவுள்ளனர்

இதனையடுத்து இவ்வித்தியாலயம் எதிர்வரும் திங்கட்கிழமை கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வைபவரீதியாக கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக 23வது படைப்பிரிவின் கட்டளையதிகாரி கேணல் அன்ரனீஸ் தெரிவித்துள்ளார்.

மொறக்கொட்டாஞ்சேனை இராமகிருஸ்ண வித்தியாலயத்தில் 1990 யூன் மாதம் முதல் படை முகாம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## டெங்கு நோய் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

(அலுவலக நிருபர்)

டெங்கு நோயைப்பரப்பும் நுளம்புகள் தற்போது வன்னிப் பிரதேசத்திலும் இனம் காணப்பட்டுள்ளன. இதையிட்டு கிளிநொச்சி மலேரியா தடை இயக்கம் செய்திக் குறிப்பொன்றை விடுத்துள்ளது.

தென் பகுதியில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்த வண்ணம் இருப்பதுடன் இறப்புக்களும் அதிகரித்த வண்ணம் உள்ளது. இது தொடர்பாக ஊடகங்கள் மூலமாக யர்வரும் அறிந்திருப்பீர்கள்.

வன்னிப்பிரதேசத்திலும் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் என்பது இனம் காணப்பட்டுள்ளது. இந்த டெங்கு நோய் எமது பகுதியில் பரவாமல் தடுப்பதற்கு அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

ஆகவே டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகும் இடங்கள் எனச் சந்தேகிக்கும் இடங்களாகிய சிறிய நீர் தேங்கும் இடங்களில் (ரயர், சிரட்டைகள், கோம்பைகள், மரப் பொந்துகள், பூச்சாடிகள்)டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புக் குடம்பிகள் தென்பட்டால் அந்த மாதிரியை மலேரியா தடை இயக்கப் பணிமனையில் அல்லது கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அல்லது கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரது ஆரம்ப சுகாதார நிலையத்திலோ ஒப்படைப்பதன் மூலம் இந்த மாதிரியை இனம் காண்பதுடன் நாம்மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலகுவாக இருக்கும் என்பதை அறியத்தருகிறோம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சோ)

## காலாவதியான உணவுப் பொருட்கள் குறித்து கொள்வனவாளர்கள் கவனம் செலுத்தவும்

(அலுவலக நிருபர்)

தற்போது தென்பகுதியிலிருந்தும், யாழ் மாவட்டத்திலிருந்தும் பல்வேறுபட்ட நடமாடும் வாகன விற்பனையாளர்கள் பொதியாக்கப்பட்ட திண்ம, திரவ உணவு வகைகளை எமது பகுதிக்குள் கொண்டுவந்து விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்களால் கொண்டுவரப்படும் பொதியாக்கப்பட்ட உணவு வகைகள் சில குறிப்பாக மீன் ரின், பால் ரின், பிஸ்கற் வகைகள், பால்மா வகைகள், மென்பான உற்பத்திகள் முடிவுத் திகதி முடிந்த நிலையில், சிலவற்றில் முடிவுத் திகதி சுரண்டப்பட்டும் அதன் மேல் புதிய முடிவுத் திகதியிட்டுள்ள சுட்டுத்துண்டு (லேபல்) பொருத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே இது தொடர்பில் கொள்வனவு செய்யும் வியாபார நிலைய உரிமையாளர்கள் சுட்டுத்துண்டினை (லேபல்) தெளிவாக அவதானித்து முடிவுத்திகதியை உறுதிப்படுத்தி கொள்வனவு செய்வதுடன் மேற்படி போலிச் சுட்டுத்துண்டு இடப்பட்ட முடிவுத்திகதி முடிந்த, சுரண்டப்பட்ட உணவுப் பொருள் விற்பனையாளர்களின் தெளிவான பெயர், முகவரி என்பவற்றை எமது மாவட்டப் பணிமனைகள், நடுவப்பணியகத்திற்கு தெரியப்படுத்தி எமது மக்களின் சுகாதார மேம்பாட்டிற்கு ஒத்துழைக்குமாறு உணவு கையாளும்நிலைய உரிமையாளர்களுக்கு தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)


### பதவி வெற்றிடம்

கிளிநொச்சியில் இயங்கும் மொத்த சில்லறை வியாபார நிறுவனத்திற்கு கீழ்வரும் பதவிக்கான வெற்றிடங்கள் உண்டு. முன் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது.

பதவிகள்
1. கணக்காளர்
2. விற்பனையாளர்
3. பணிஆட்கள்

தங்களுடைய தகைமைகளுடன் கூடிய சுயவிபரங்களை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
வி/இல:10, ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சி. (6972)


## அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

(அலுவலக நிருபர்)

சுந்தரபுரம் வசாவிளான் ராசன் மணிமன்னன் (732723889V) மருதங்குளம் ஓமந்தை, வேதநாயகம் கலையரசி (786222842V) குஞ்சுக்குளம் மாங்குளம், பாலச்சந்திரன் கருணராஜ் (783284367V) ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (சோ)

## மோட்டார் வாகன உரிமையாளர் கவனத்திற்கு

(அலுவலக நிருபர்)

கிளி. மாவட்டத்திலுள்ள மோட்டார் ஊர்திகளின் பதிவுகள் மற்றும்வரி அட்டை பெறுதல் சம்பந்தமான பதிவுகள் மேற்கொள்வது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

எனவே இம் மாவட்டத்திலுள்ள மோட்டார் வாகன உரிமையாளர்கள் கிளி. மாவட்ட அரச செயலகத்துடன் உடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கிளி. மாவட்ட செயலக கணக்காளர் வேண்டியுள்ளார். (சோ)

நேர்நோக்கு

## பாதிப்பு யாருக்கு?

சனாதிபதியின் அதிகாரத்திற்கும் பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கும் இடையேயான போட்டி மீண்டும் வலுப்பெற ஆரம்பித்துள்ளது."நான் நினைத்தால் முழு அமைச்சரவையையும் வீட்டுக்கு அனுப்பமுடியும்" என சனாதிபதி கூற, "எந்தவொரு அமைச்சரை மாற்றுவதானாலும் பிரதமரின் ஆலோசனைப்படியே அதனைச் செய்யமுடியும். தன் விருப்பப்படி அதனைச் செய்யமுயன்றால், சனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி முடக்கப்படும்" என அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார்.

பன்னிரண்டாவது நாடாளுமன்றமானது சனாதிபதியின் கட்சிக்கு மாறான கட்சியாகிய ஐக்கிய தேசிய முன்னணியின் கைக்குச் சென்றபோதே , இந்த முரண்பாடு ஆரம்பமாகிவிட்டபோதிலும் கடந்த சுமார் ஆறரை மாதங்களாக இவ்விரு சக்திகளும் ஒன்றையொன்று அனுசரித்த போக்கிலேயே நடந்துகொண்டு வருகின்றன. இதற்கு அவை சனநாயகத்திலும்,சிறிலங்காவின் அரசியலமைப்பிலும் . நாட்டின் நலனிலும் கொண்ட பற்று காரணமல்ல என்பது வெளிப்படை. அவையெல்லாவற்றையும் இவ்விரு கட்சிகளும் எப்பொழுதோ கைவிட்டுவிட்டன என்பதும் வெளிப்படையான விடயமாகும்.

உண்மையில் சனநாயகத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பற்றுக் கொண்டவராக இருந்தால். பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்று பதவியிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. ஏனெனில் அவர் இறுதியாக தெரிவு செய்யப்பட்ட சனாதிபதித் தேர்தல் மூலம், அவரது ஆட்சிக்காலத்தில் நடத்தப்பட்ட ஆறு தேர்தல்களும் வன்முறைகள், முறைகேடுகள் என்பவற்றில் நம்பிக்கைவைத்து நடத்தப்பட்ட தேர்தல்களே. 1994இல் எந்த வன்முறையை அவர் கண்டித்தாரோ அதே வன்முறையின் அடிப்படையிலேயே 2000ம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் அவரால் வெற்றிபெற முடிந்தது என்பது அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

எனவே மக்கள் அளித்த தீர்ப்பை மதித்து என்றில்லாமல் தேர்தலில். வெற்றிபெற்ற ஐக்கியதேசியக் கட்சிக்கு உரிய அதிகாரத்தை வழங்காவிட்டால் தான் உலக நாடுகளில் சம்பாதித்து வைத்திருக்கும் "நற்பெயருக்கு" களங்கம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சி அல்லது, உலக நாடுகள் இதனை ஏற்றுக்கொள்ளாது என்பது உணர்த்தப்பட்டே ஐ.தே.முன்னணிக்கு ஆட்சியை வழங்க முன்வந்தார்.

ஏனெனில் சனாதிபதி தனது முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய வெளிவிவகார ஆலோசகருமான லக்ஸ்மன் கதிர்காமரின் ஆலோசனைக்கு இணங்கவே, ஐ.தே.முன்னணிக்கு ஆட்சியை வழங்க முன்வந்தார்.

பின்னரும் கூட ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் " தமக்கு இழைக்கும் கொடுமைகள்" குறித்து பொதுசன ஐக்கிய முன்னணியினர் வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கும் உலக அமைப்புகளுக்குமே முறையிட்டு வருகின்றனர். இவ்வாறே முன்னரும் ஐ.தே.க.வினரும் நடந்துகொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சரவைக் கூட்டத்திற்கு கைப்பையில் ஒளிப்பதிவுக் கருவியைக் கொண்டுவந்த விவகாரமும் ஒரு உள்நோக்கத்துடனேயே எழுப்பப்பட்டிருக்க வேண்டும். அதாவது ரணில் விக்கிரமசிங்கவின் அமெரிக்க பயணம் நெருங்கிவந்த வேளையிலேயே சந்திரிகா குமாதுங்க மீதான ஆடம்பர வாகன மோசடி, றப்பர் தோட்ட மோசடி, ஒளிப்பதிவுக் கருவி கொண்டு சென்ற விவகாரம் தொடர்பான ஐ.தே.முன்னணி அரசாங்கத்தால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. அதற்காக சனாதிபதி சந்திரிகா இக்குற்றச்சாட்டுக்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவரெனக் கூறமுடியாது.

அதாவது முன்னர் தேர்தல் வரும் வேளையெல்லாம், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பட்டலந்தவதை முகாமுக்கும் இடையேயான தொடர்பு குறித்து சந்திரிகா பிரஸ்தாபிப்பார். பின்னர் அதனைக் கைவிட்டுவிடுவார். ஆனால் அதனை நிரூபிக்க அவர் முயலவில்லை. அதே போன்றே வெளிநாடுகளில் சந்திரிகாவுக்கு எதிரான ஒரு விம்பத்தை உருவாக்கும் நோக்கத்தை ஐ.தே முன்னணி கொண்டிருப்பதாக கருதமுடியும். இக்குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க அவர்கள் தீவிரமாக முயல்வார்களா? என்பது கேள்விக்குரியதே.

அதே போலவே சனாதிபதி சந்திரிகாவும் தான் கைப்பைக்குள் குண்டுகளைக் கொண்டு திரிவதாக அமைச்சர் ஒருவர் பொய்க்குற்றம் சுமத்தினார் என்று பிரச்சாரப்படுத்தி தனக்கு உலக அனுதாபம் தேட முயல்கிறார். அவரும் அதற்கு ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் தங்கியிருக்கும் நேரத்தையே தெரிவு செய்திருக்கிறார்.

ஆக மொத்தத்தில் இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் "உலகளாவிய ரீதியில்" சேறுபூசி அதிகாரத்தைக் கைப்பற்றவே முயல்கின்றனர். அதாவது சனாதிபதி சந்திரிகா மீது குற்றவியல் பிரேரணை கொண்டுவர ஐக்கியதேசிய முன்னணி காரணத்தை உருவாக்க முயல்கையில், ஐ.தே.முன்னணி அரசாங்கத்ததை தன் "வீட்டுக்கு அனுப்புவதற்கு" தேவையான காரணங்களை உருவாக்க சந்திரிகா அம்மையார் முயல்கிறார்.

இந்த மோதல் பாராளுமன்ற மோதலாக உருவெடுத்திருக்கிறது. அதாவது "சனநாயகரீதியாகத்" தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சனநாயகத்தின் குறிகாட்டியான பாராளுமன்றத்தில் தம்மிடையே மோதி வன்முறைக் களமொன்றை உருவாக்கியுள்ளனர்.

ஆனால் இவ் அதிகாரப் போட்டியும் ஒத்துழையாமையைப் போக்கும் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வையே பெரிதும் பாதிப்பதாக அமையும். கடந்த பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஐ.தே.க.வின் ஒத்துழைப்பின்மையே இனப் பிரச்சினைத் தீர்வுக்கு தடையாக உள்ளதாக சந்திரிகா அம்மையார் சுட்டிக்காட்டி வந்தார். அதேபோல் எதிர்காலத்தில் ஐக்கியதேசிய முன்னணியும் பொதுசன ஐக்கிய முன்னணி மீது குற்றம் சாட்டும் என நம்பலாம்.

இந்த முரண் நிலையானது சமாதான முயற்சிகளுக்கும் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். அதாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற இருகட்சிகளும் போட்டியில் இறங்கியிருக்கையில் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் ஆளும் கட்சி தீவிரமாக இறங்கப்போவதில்லை. அத்துடன் அம்முயற்சிகளுக்கு எதிர்க்கட்சி ஒத்துழைப்பு வழங்கப்போவதுமில்லை.

இப்பொழுது உள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் சட்டமூலம், சனாதிபதிக்கு உள்ள பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை நீக்கும் சட்டமூலம் என்பவற்றைக் கொண்டுவருவதிலேயே ஆளும்கட்சி முனைப்பாக ஈடுபட்டு வருகிறது. அதாவது ஆட்சியில் நீடிப்பதற்கு தன்னை உறுதிப்படுதிக்கொள்ளும் நடவடிக்கையிலேயே அது ஈடுபட்டு வருகிறது.

அவ்வாறு இல்லாவிடின் ஒரு தேர்தலை எதிர்கொள்ளவேண்டிய நிலை சிறிலங்காவுக்கு ஏற்படுமானால் அதுவும் சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவே இருக்கும்.

வேலவன்

# நோர்வேயின் சமாதானம் பலஸ்தீனமும் தமிழீழமும்

● நிலாந்தன்

நோர்வேயின் சமாதானத்தைச் சிங்களவர்கள் பரவலாகச் சந்தேகிக்கிறார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் பொதுவாகக் கூறப்படுகின்றன.



முதலாவது நோர்வே புலிகளுக்குச் சாய்வானது என்று அவர்கள் நம்புவது
இரண்டாவது பலஸ்தீனத்தில் நோர்வேயின் சமாதானம் முறிந்து போய்விட்டது என்பது அதிலும் குறிப்பாக பலஸ்தீனத்தில் சமாதானத்துக்கு முன்பு இருந்ததைவிடவும் சமாதானம் முறிந்த் பின்பு வந்த யுத்தம் பயங்கரமானது என்றுமவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இன்று இப்பத்தி இந்த இரண்டாவது காரணத்தின் மீதே வாசகரின் கவனத்தைக் குவிக்கிறது.

பலஸ்தீனத்தில் நோர்வேயின் சமாதானம் அதன் ஆரம்பக் கட்டத்தில் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தமை ஒரு மகாதவறு என்று படித்த சிங்களவர் பலர் நம்புகிறார்கள் இங்கேயும் அப்படியேதும் ரகசியங்கள் இருக்கக்கூடும் என்றுமவர்கள் ஊகிக்கிறார்கள் அஞ்சுகிறார்கள்.

மெய்யாகவே பலஸ்தீனத்தில் நோர்வேயின் சமாதானம் ஒரு பரமரகசியமாகத்தான் தொடங்கியது அங்கே அதைத்தவிர வேறுவழியுமிருக்கவில்லை.

இதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள நாம் பலஸ்தீனத்தில் நோர்வே செய்த சமாதானத்தின் முதற்கட்டத்தை சற்று விரிவாகப் பார்க்கவேண்டும். முதலில் ஒரு ஆய்வு நிறுவனம்தான் களத்திலிறங்கியது.

அதுவும் சமாதானம் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டுஅல்ல

அது நோர்வேத் தொழிற் சங்கத்தின் ஒரு அங்கமாயுள்ள ஒரு ஆய்வு நிறுவனம் பலஸ்தீனத்தில் ஆய்வு வேலைக்களுக்காக போன இடத்தில் அங்கே பிரச்சினையின் மெய்விவரங்களைத் துலக்கமாக அறிய முடிந்தது. பக்கச்சார்பின்றிய அறிவு பூர்வமான சாட்சி நிலையில் நின்றபடி பிரச்சினைகளை ஆய்வு செய்த மேற்படி நிறுவனம் ஒரு கட்டத்தில் பிரச்சினையின் மூலவேர்களைக் கண்டுபிடித்தது அப்பொழுதுதான் அவர்களுக்கு இந்தப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஈடுபட்டால் என்ன? என்று தோன்றியது.

இதற்கு மேற்படி ஆய்வு நிறுவனத்தின் தாய்நிறுவனமான நோர்வேத்தொழிற்சங்கம் பலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய தொழிற்சங்கங்களோடு நல்லுறவைக் கொண்டிருந்தமையும் ஒரு பிரதான ஊக்கியாக அமைந்தது.

எனவே நோர்வே சமாதானம் செய்யப்புறப்பட்டது.

முதலில் எல்லாமும் ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. சம்பந்தப்பட்ட சக்திகளைத்தவிர வேறு யாருக்கும் விசயங்கள் கசிந்து விடாதபடி இறுக்கமாக ரகசியம் பேணப்பட்டது.சந்திப்புக்களும் சந்திப்பிடங்களும் அவதானிகளின் கவனத்தை ஈர்த்துவிடாதபடி ரகசியமாக ஒழுங்கு செய்யப்பட்டன

உல்லாசப் பயணிகள் போல தூதுவர்கள் வந்தார்கள் உல்லாசப் பயணத்தலங்களிலேயே சந்தித்தார்கள். இப்படிப் பரஸ்பரம் சந்தித்துக் கதைத்து ஒரு இறுதித்தீர்வு வரப்போகிறது என்றிருந்த ஒரு கட்டத்தில் தான் அமெரிக்கா தலையிட்டது. அவர்களுக்கு எப்படியோ விசயம் கசிந்துவிட்டது.

அல்லது அவர்களுக்கு முன்கூட்டியே இதுபற்றித் தெரிந்திருந்தும் கூட சமாதானம் கனியும் வரை பொறுத்திருந்துவிட்டு தக்க தருணத்தில் அவர்கள் சமாதானத்தின் கனியை சுவீகரிக்க வந்தார்களோ என்னவோ?

அதன் பின் அமெரிக்கா சமாதானத்தின் பிதாவாக மாறியது இதுவரைகாலமும் இஸ்ரேலின் பிதாவாக இருந்து வந்த அமெரிக்கா இப்பொழுது பலஸ்தீனசமாதானத்தின் பிதாவுமென்றாகியது. ஆனால் இங்கேதான் பிசகியது. நீண்ட காலத்துக்கு அமெரிக்காவால் இரட்டை வேஷம் போடமுடியவில்லை.

அமெரிக்கா தொடர்ந்தும் சமாதானத்தின் பாதுகாவலனாக இருக்கவில்லை. அது அதிக மதிகம் இஸ்ரேலின் பாதுகாவலனாகவே காணப்பட்டது. இதுதான் பிரச்சினை இங்கிருந்துதான் குண்டுகள் வெடிக்கத்தொடங்கின.

இங்கே நாமொன்றைக் கவனிக்கவேண்டும். அமெரிக்கா தலையிடும் வரை நோர்வேயின் பங்கு அதிகம் விஞ்ஞானபூர்வமானதாகவே இருந்தது ஏனெனில் தொடக்கமே ஒரு தொழிற்சங்கத்தின் விஞ்ஞானபூர்வ மான ஆய்வுப் பணிதான் எனவே இது விசயத்தில் நோர்வேயைப் பழிகூறமுடியாது பதிலாக அமெரிக்காவைத்தான் விமர்சிக்க வேண்டும்.

மேலும் பலஸ்தீனத்தைப் பொறுத்தவரை சமாதானத்திற்கு முன்பு இருந்ததை விடவும் சமாதானத்திற்கு பின்புதான் அவர்களுடைய ஆயுதபலமும் போராட்டவடிவமும் அடுத்த கட்ட வளர்ச்சிக்குப் போயின என்பதையும் இங்கே கவனிக்க வேண்டும்.

சமாதானத்திற்கு முன்பு பலஸ்தீனர்களின் போராட்டம் அநேகமாக நீர்த்துப்போய்விட்டிருந்த ஒரு விடுதலைப்பிரதேசமோ அல்லது பலம்பொருந்திய படையணிகளோ இன்றி வெறுமனே சிறுவர்களை கற்களோடு தெருவிலிறக்கிப் போராடிக்கொண்டிருந்த காலகட்டம்அது.

பலஸ்தீனர்களின் ஆயுதப்போராட்டத்தை தூர்ந்து போகச்செய்வதில் இஸ்ரேல் கணிசமான அளவு வெற்றிபெற்றுவிட்டிருந்தது இந்நிலையில் இயலாக்கட்டத்தில் அரபாத் சிறுவர்களைக் கற்களோடு தெருவிலிறக்க வேண்டியதாயிற்று இன்ரிபாடா, என்றழைக்கப்பட்ட இப்போராட்ட வடிவம் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் கையறுநிலையின் விளைவே இப்படிப்படைபலம் விடுதலைப் பிரதேசம் போன்றவை இன்றி போராட்டம் நீர்த்துப்போய்க் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் தான் நோர்வே சமாதானம் செய்ய வந்தது.

இப்பொழுது அந்தச் சமாதானம் கொண்டுவந்த வெடி மருந்துகளை வைத்துக்கொண்டுதான் அங்கே யுத்தம் செய்யப்படுகிறது.

உண்மையில் பலஸ்தீனர்களின் பலம் போலத் தோன்றுவது அவர்களுக்குள்ள சர்வதேச ஆதரவுதான். ஆனால் அது வெறும் தோற்றம் மட்டுமே. ஏனெனில் மேற்படி சர்வதேச ஆதரவும் அங்கீகாரமும் ஐ.நா சபையில் இஸ்ரேலுக்குச் சார்பான அமெரிக்காவின் வீற்றோ அதிகாரத்தின் முன் செயலற்றுப் போவதே வழமை.

தவிர, முஸ்லிம் நாடுகளுக்கிடையில் காணப்படும் ஐக்கியமின்மையும் எப்பொழுதும் பலஸ்தீனர்களைப் பலவீனப்படுத்தும் ஓரம்சம்.

இத்தகைய ஒரு பின்னணியில் பலவீனப்பட்டிருந்த அரபாத்திற்கு நோர்வேயின் சமாதானம் ஒரு மீட்சி போல வந்தது.

பிறகந்த சமாதானத்தை அமெரிக்கா வழமைபோல இஸ்ரேலுக்குச் சாதகமாகத் திருப்ப முயன்றபோது அது முறிந்தது. அரபாத் முற்றுகையிடப்பட்டார்.

இப்பொழுது அவர் ஒரு புறம் இஸ்ரேலோடு மோதவேண்டியுள்ளது. இன்னொருபுறம் தீவிர வாதிகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது.

பலஸ்தீனத்தின் இந்த அனுபவத்திற்கூடாக நாம் ஈழப்போரை அணுகுமிடத்து இங்கே முற்றிலும் வித்தியாசமான ஒரு சித்திரத்தைப் பெறுகிறோம்.

முதலாவதாக பலஸ்தீனத்தில் ஒப்பீட்டளவில் மிதவாதியான அரபாத்துடன் சமாதானம் செய்யப்பட்டது. அங்கே தீவிரவாதிகள் ஆரம்பத்திலிருந்தே முரண்பட்டு வந்தார்கள். சமாதானம் முறிக்கப்படுவதற்கு அவர்களும் சிறிதளவு காரணம் தான்.

ஆனால் ஈழப்போரில் புலிகள்தான் தீவிரமான சக்திகள். அவர்களோடுதான் சமாதானம். அதைக் குழப்ப வேறு அதிதீவிர சக்திகள் ஏதும் இல்லை. இது ஒரு முக்கிய வேறுபாடு

மற்றது பலஸ்தீனத்தைப் போலல்ல- இங்கே கட்டுக்குலையாத ஒரு படையும் ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசமும் அதாவது விடுதலைப் பிரதேசமும் உண்டு.

பலஸ்தீனத்தின் சமாதானம் இன்ரிபாடாவின் கனி. ஈழப்போரின் சமாதானம் ஓயாத அலைகள் மூன்றின் கனி. இவைதவிர இன்னுமொன்று முக்கியமானது- அதாவது சர்வதேச ஆதரவு ஒப்பீட்டளவில் ஈழப் போரின் சர்வதேச ஆதரவுத்தளம் பலஸ்தீனத்தைவிடவும் பலவீனமானது போல்த் தோன்றும்.

குறிப்பாக இந்தியா,அமெரிக்கா பிரிட்டன் உட்பட சில நாடுகளில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் இத்தடைகளைப் பற்றிக் கதைக்கும் போது வேறொரு புதிய வளர்ச்சியையும் கவனித்தாக வேண்டும்.

அதாவது இப்பொழுது வெளிநாடுகளில் சுமார் 7 லட்சத்துக்கும் குறையாத தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள் இது மொத்தச் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதி. ஈழப்போரின் நிதிப் பின்பலமாகவும் சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கவல்ல ஒரு சக்தியாகவும் மேற்படி புலம் பெயர்ந்த தமிழர்கள் மாறிவருகிறார்கள். காலப்போக்கில் இவர்கள் தாம் வாழும் நாடுகளில் பிரஜா உரிமை பெற்று மேலும் சக்தி மிக்கவர்களாய் மாறுவர்.

எனவே இவர்கள் வாழும் நாடுகளில் புலிகளின் மீதான தடை எனப்படுவது ஈழப்போரை ஆதரிக்கும் இவர்களது அடிப்படை மனித உரிமைகளோடு மோதுவதாக இருக்கமுடியாது.

அதாவது அந்நாடுகளின் ஜனநாயக அமைப்பிற்குள் அங்குள்ள தமிழர்கள் ஈழப்போரை ஆதரிப்பதைத் தடுக்க புலிகளின் மீதான தடைக்கு நடைமுறையில் வரையறைகள் உண்டு.

எனவே இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்தே புலிகளுக்குள்ள சர்வதேச ஆதரவுத்தளம் பற்றி முடிவு கூறவேண்டும்.

இதில் குறிப்பாக, ஈழப்போர் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடுதான் நெருடலான ஒரு விசயம்.

மற்றும்படி நோர்வேயின் சமாதானத்தைப் பொறுத்தவரை பலஸ்தீனத்தின் கள யதார்த்தம் வேறு. ஈழப்போரின் கள யதார்த்தம் வேறு.

படித்த சிங்களவர் இவை இரண்டையும் வழமைபோல பாதி தெளிவின்றியும் பாதி உள்நோக்கத்துடனும் மாறாட்டம் செய்கிறார்கள்.

இப்பத்தியில் ஏற்கனவே கூறப்பட்டது போல சமாதானத்தை சுவீகரிக்கும் சக்திகளே எங்கேயும் இடறலாயிருக்கின்றன.

இங்கேயும் அத்தகைய சமாதானத்தை சவீகரிக்கக் காத்திருக்கும் சக்திகள் எவ்வளவு தூரம் நோர்வேயை ஒரு கருவியாகக் கையாள முடியும் என்ற ஒரு பிரச்சினையிலிருந்து சமாதானத்தைக் குறித்து எதிர்மறையாக யாராவது சிந்தித்தால் அதில் ஒரு யதார்த்தம் உண்டு.

மாறாக. நோர்வே புலிகளுக்குச் சாய்வான ஒரு நடுவர் என்ற ஆதாரமற்ற ஒரு முற்கற்பிதத்தை வைத்துக்கொண்டு சமாதானத்தைக் குழப்ப முயலும் எவரும் அவர்களே கூறுவதுபோல சமாதானம் முறிந்த பின் வரப்போகும் பயங்கரமான யுத்தத்தில் லாபம் பெறக் காத்திருக்கும் யுத்தவியாபாரிகளே. ❐

## பிறமுக அறிமுகம்

### மிலிந்த மொறகொட
(பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் விஞ்ஞானத் துறை அமைச்சர்)




சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஆரம்பத்தில் ஜனாதிபதியாக பதவியேற்ற புதிதில் பேராசிரியர்.ஜீ.எல் பீரீஸ் அவருக்கு எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்த நபராக விளங்கினாரோ அதே போன்றும்... இப்போது அதே சந்திரிகாவுக்கு லக்ஷ்மன் கதிர்காமர் எந்த அளவுக்கு எல்லாவகையிலும் ஆலோசனை பகரும் முக்கியஸ்தராக விளங்குகின்றாரோ அதேபோன்றும்.. இப்போது ஆட்சி நடத்தும் சிறிலங்காவின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு எல்லாவிதத்திலும் ஆலோசனை கூறுபவராகவும் அறிவுரை கூறுபவராகவும் எல்லாவற்றிலும் மேலாக நம்பிக்கையும் விசுவாசமும் கொண்ட நண்பராகவும் அரசியல் மட்டுமல்லாது பொது வாழ்விலும் கூட மிக நெருக்கமான உறவு கொண்டவராக இருப்பவர்-

**மிலிந்த மொறகொட**

ரணில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்திலேயே அவருடைய பொருளாதார ஆலோசகராக விளங்கிய மிலிந்த மொறகொட அரசியலில் ஆரம்பகாலத்தில் நன்கு அறியப்பட்ட ஒருவராக இருக்கவில்லை

வர்த்தகத் துறையில் மிகவும் பிரபல்யம் பெற்ற முக்கியபுள்ளியாக விளங்கிய இவரை தனது பொருளாதார ஆலோசகராக்கி மெல்ல மெல்ல அரசியலுக்கு கூட்டிவந்தவர் ரணில் விக்கிரமசிங்கதான்.

இன்று ...

வர்த்தகம் தொடர்பான வெளிநாடுகளுடனான ஒப்பந்தமா...
பொருளாதார அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல் நகர்வுகளா..
அபிவிருத்தி தொடர்பான சர்வதேச மாநாடுகளா சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளா...
ஏன், இந்த அரசின் ஆட்சிக்காலம் முடிவடையும் வரையிலான காலப்பகுதிக்குரிய பாதுகாப்பு செயற்பாடுகளுக்கான ஆயுதக் கொள்வனவு சம்பந்தமான முன்னேற்பாடுகளா..

அனைத்திற்கும் 'கூப்பிடு மிலிந்த மொறகொடவை' என்று ரணில் கூறுவது ரகசியமான ஆனால் தெளிவான விடயமாகும். அந்த அளவுக்கு ரணிலுக்கு மொற கொட ஒரு அந்தரங்க ஆலோசகராகிவிட்டார்.

ரணிலைச் சந்திக்க வேண்டிய விடயங்களுக்கு மொறகொடவைப் பிடித்தால் போதும் என்ற கருத்து ஐக்கிய தேசிய முன்னணியில் பிரபலமான ஒன்றாகும்.

இனப்பிரச்சினைத் தீவுக்கான சமாதான நடடிவக்கைகளுக்கான ஒருங்கிணைப்புக் குழுவின் முக்கியஸ்தராக கிட்டத்தட்ட ரணிலின் பேச்சாளராகவே செயற்பட்டு வரும் மொறகொட, அடுத்த மூன்றாண்டுகளுக்கான பாதுகாப்பு படைகளுக்கு தேவையான ஆயுததளபாடக் கொள்வனவுக் குழுவிலும் முக்கியஸ்தராக விளங்குவது தான் முரண்நகையான விடயமாகும்.

அதிகம் ஆதாரமற்ற பேர்வழி ஆனால் அழுத்தமான திட்டங்களுடன் செயற்படும் நபர். பரபரப்பான அரசியலை விடவும் சுறுசுறுப்பான செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டவரான மொறகொடஐக்கிய தேசிய முன்னணியில் ரணிலுக்கு மூலபலமாக மட்டுமல்ல - மூளைப்பலமாகவும் விளங்கி வருகின்றார்.

எந்தப் பிரச்சினையும் பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் அணுகும் மிலிந்த மொறகொட இப்போதைய சமாதான நடவடிக்கை நகர்வுகளைப் பற்றிக் கேட்டபோது
'பொறுத்திருந்து பாருங்கள்' என்று நறுக்குத்தெறித்தாற் போன்று நழுவும் நோக்கிலான பதிலைக் கூறியுள்ளார்

இதே மாதிரியான கேள்வியொன்றிற்கு இதே தன்மையிலான - இதேவார்த்தைகளைக் கொண்ட ஒரு பதிலையே அப்போதைய சந்திரிகா அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகம் சுற்றி மெத்தப்படிப்பு படித்தவரான இவர் இன்று ஒரு உலகம் சுற்றும் வாலிபன்..
ரணிலை நிழல்போல தொடர்பவர்
அதேபோன்று ரணிலின் நிஜத்தையும் புரிந்து கொண்டவர் ☆

# இன்னொரு போர்முகம்


தூயவன்

இவர்கள் விஜயரூபனைத் தூக்கிக்கொண்டு ஒருவர் தோளில் ஒருவர் பற்றியபடி தங்கள் உயிர்கள் உள்ளங்கையில் இருப்பதாக உணர்ந்த வண்ணம் பாதங்களைப் பற்றிப்பிடிக்கும் பற்றைகளையோ குத்திக் கிழிக்கும் முட்களையோ பொருட்படுத் தாது வேகம் ஒன்றே தப்ப வழியென விரைவாக பின் வாங்குகின்றனர்.

இப்பொழுது தளபதி சுதாகர் நிற்கும் இடம் வந்து சேர்ந்துவிட்டனர். இவர்க ளுக்கு 50 மீற்றர் தூரத்தில் புக்காரா போட்ட குண் டொன்று வெடிக்கின்றது. அதன் அதிர்வு இவர்களைத் தூக்கி எறிகின்றது. பற்றைகளும் மரங்களும் இவர்களைச் சுற்றியிருப்பதால் குண்டு சிதறல்களிலிருந்து தப்பிக் கொள்கின்றனர். எவ்வளவு வேகமாக இவ்விடம் விட்டு ஓடவேண்டுமோ அவ்வளவு வேகமாக ஓடினால்தான் இவர்கள் உயிர் இவர்களுக்குச் சொந்தமாக இருக்கும் இப்பொழுது அருண் சொல்கின்றான் " கொஞ்ச நேரத்திற்குள்ள கப்பல் துறை றோட். விளாங்குள றோட். கொழும்பு றோட் மூன்றையும் கடந்தாக வேண்டும். இதில் ஏதாவதொன்றை நிச்சயம் அவன் குளோஸ் பண்ணு வான். அப்படிச் செய்தால் எல்லாரும் சாகவேண்டிவரும். இவன் கூறவும் நிலைமையைப் புரிந்துகொண்டு விஜயரூபன் ''நான் எழும்பி ஓடிவாறேன்'' எனக்கூறி ஓடத்தொடங்கு கின்றான். சிறிது தூரத்தில் விழுந்துவிட்டான். அப்போது சொர்ணம் அண்ணை வோக்கியில் கேட்கின்றார்.

"என்னமாதிரி சுதாகர்" இவர் சொல்லுகிறார் எல்லாம் முடிந்துவிட்டது.... இந்தா வந்துகொண்டிருக்கின்றோம். ஆனால் இங்கு நிலை மையோ வேறுவிதம். எந்தக்கணமும் தாக்குதலுக்கோ அல்லது சுற்றி வளைப்பிற்கோ உள்ளாகலாம்.

இப்படி இவர்கள் இழுபட்டு இழுபட்டு எகதியா... வா என்ன செய்வதென்று தெரியவில்லை. நிலைமையை சொர்ணம் அண்ணைக்கு அறிவிக்க அவர் நிலமைக்கேற்ப முடிவெடுங்கள் என்கின்றார். தூக்கிக்கொண்டும் ஓடஇயலாது... நேரம் காணாது. இன்னும் சொற்ப நேரத்தில் பாதையை மூடிப்போடுவான். இவனைக் காயத்துடன் விட்டுப்போட்டு போக இயலாது முடிவெடுக்கமுடியாமல் திண்டாடுகின்றனர். படீர்... படீர்... டுமீல்... சட.. சட என கேட்கும் சத்தங்களும் காயப்பட்டவரின் அவலக் குரல்களும் கந்தக நொடியும் வெடிகுண்டு புயையும் விமானங்களின் இரைச்சல் என்பன இன்னதென்று கூற முடியாத சூழலை பிரசவிக் கப்பட்டுள்ளது. சுய உணர்வு பெற்ற விஜயரூபன் நிலை மையை விளங்கியிருக்க வேண்டும்" சுபேசன்... எனனை சுட்டுப்போட்டு .... தப்புங்கள் என கூறுகின்றான். இவர்கள் எதுவும் செய்ய முடியாது தடுமாறு கின்றனர். ஒவ்வொரு கணங்களும் யுகங்களாகக் கழிவதாய் உணர்கின்றார்கள்.

சுபேசன் டோச் அடித்து புலிக்குட்டி எனக் கூப்பிட புலிக்குட்டி விரைந்து தனது ரி-81 துப் பாக்கியினால் டுமீல்...டுமீல் என இரு ரவைகளை விஜயரூபன: தலையினுள் செலுத்து கின்றான். எவ்வித அசைவு மின்றி அவன் மூச்சடங்கிப் போகின்றது. மற்றவர்கள் அனைவரும் அசையாது நிசப்தமாக நிற்கின்றனர். தொடரும் யுத்த நேர ஓசை அகோரமான பின்னணியை வழங்கிக் கொண்டிருக்கின்றது. நிலவு மெல்ல மெல்ல மேல் வானிற்கு வந்து மர இடுக்குகளினூடு இங்கு என்ன நடக்கின்றது என கணக்கெடுக்க முயல்கிறது.

உடனே புலிக்குட்டி விஜயரூபன் உடலை இழுத்து நேராக்கி கைகளை அருகில் வைத்து குத்திட்டு நிற்கும் கண் இமைகளை இழுத்து மூடிவிட்டு அவனது தொப்பியை எடுத்து முகத்தையும் மூடுகின்றான். பின் சாதாரணமாக மற்றவர்களை நிமிர்ந்து பார்க்கின்றான். எல்லோரும் அந்த யுத்த வெம்மையிலும் துருவப் பனியில் உறைந்த சடலங்களாய் காட்சியளிக் கின்றனர். சரி போவோம் என சாதாரணமாகவே சுபேசன் கூறுகின்றான் இப்பொழுது இவர்கள் மீண்டும் ஓடுகின் றனர். ஒவ்வொரு வீதியாகக் கடக்கின்றனர். உயிரைத் தக்க வைக்க வேண்டும், தாக்குத லில் என்ன நடந்தது என்பத னைச் சொல்ல வேண்டும், மீண்டும் இலக்கு கள் தேட வேண்டும். மீண்டும் எதிரியை அழிக்க வேண்டும் என எண்ணிக் கொண்டு ஓடுகின்றார்கள். மூச்சிரைக்க மூச்சிரைக்க..... மூட்டுக்கள் வலியெடுக்க.... தசைகள் நார் நாராக வலியில் துடிக்க தாகம் நாக்கை வரட்ட எல்லா வற்றையும் உதாசீனம் செய்தபடி அடிபட்ட மிருகமொன்றின் மூர்க்கமுடன் ஓடுகின்றார்கள்.

இவர்கள் கொழும்பு வீதிக்கு கிட்ட வந்த பொழுது நில்லுங்கள் என்னும் சுதாகரின் குரல் அனைவரையும் கட்டிப் போடுகின்றது. அவர் சொல்கின்றார் எப்படியும் இதில் அவங்கள் அடிப்பாங்கள் நாங்கள் சண்டை பிடிச்சுத்தான் போக வேண்டும் பி.கே.எல்.எம்.ஜி அங்கால போ.. ரெஜி இங்கால போ.... கரும்புலிகளை நடுவில் விடுங்க இப்படியே பரவலாக மூவ் பண்ணுவோம் முடியுமான வரையும் அடிபடுவோம்.

மிச்சாக்கள் எவ்வளவு பேர் செத்தாலும் பரவாயில்லை.... மிஞ்சின கரும்புலிகளை அங்காலை கொண்டு போய் விட வேண்டும் உரத்த குரலில் ஆணைகளை இட்டவர். முன்னேறும்படி சொல்ல தங்களை மீள ஒழுங்கமைத்தவர்கள் மீண்டும ஓடத் தொடங்கி விட்டனர்.

இவர்கள் அவ்வீதிக்கு வரும் போது இவர்களுக்கு வலப்பக்கம் வீதி ஒரு குன்றிலிருந்து இறங்கி வருகின்றது. குன்றிற்கு அப்பால் பேரிரைச்சலுடன் வரும் இராணுவ வாகனங் களின் ஒளி இப்பொழுது வான் நோக்கி அடிக்கின்றது. இன்னும் சில கணங்களில் குன்றிலிருந்து கீழ் நோக்கி இறங்கத் தொடங்கி விடும். ஆபத்தை சரியாகக் கணித்தவர்கள் மிக மிக வேகமாக எல்லோரும் தடை தாண்டும் குதிரைகள் போல் பாய்ந்து பாய்ந்து அவ் வீதியைக் கடக்கின்றனர்.

எல்லோரும் வீதியைக் கடந்து விட்டார்கள் என்பதை உறுதி செய்த சுதாகர் இறுதியாகப் பாய்கின்றார். வீதிக்கங்கால் இருக்கும் காட்டினுள் சென்று மறைந்து சில மீற்றர் தூரம் தான் சென்றிருப்பார்கள்.

இவர்களின் பின்னால் பேரிரைச்சலுடன் வந்த இராணுவ வாகனங்கள் திடீர் பிரேக் அடிக்க அதில் இருந்து குதிக்கும் இராணுவ வீரர்கள் பலத்த சத்தமிட்ட படியே வீதியை மூடுகின்றனர்.

ஆபத்தின் அண்மையா விரட்டப்பட்டவர்கள் தங்கள் மீதமிருந்த சக்திகளை எல்லாம் ஒன்று சேர்த்து சுமார் 200 மீற்றர் ஓடி இருப்பார்கள் அப்படி அப்படியே விழுந்து விழுந்து கிடக்கின்றார்கள். பலர் நித்திரையாகி விட்டார்கள். ஒரு அரைமணி நேரம் அப்படியே அவர்களை பார்த்துக் கொண்டிருந்த தளபதி சுதாகர் இப்பொழுது ஒவ்வொருவராக போய் எழுப்புகின்றார். வாங்கள் போவம்.... இன்னும் கொஞ்சத் தூரத்தில் இடத்திற்குப் போயிரலாம்.



[முற்றும்]



# மனக்கதவைத் திறந்து வைப்போம்

அற்புதமான குணங்களுடைய மனிதனாக நான் வெளி வரவேண்டும். என்ற எண்ணம் நம் எல்லோரிடமும் இருக்கிறது. இது நியாயமான ஆசை; நிறைவு தரும் ஆசை: புனிதமான ஆசை: நமக்கு பூரிப்புத் தரும் ஆசை!

அந்தச் சமயத்தில் நம்மை நாமே அலசுகிறோம். நாம் செய்த தவறுகள் என்ன? எந்தச்சந்தர்ப்பத்தில் எப்படி நடந்து கொண்டிருக்க வேண்டும்? நாம் அப்படி அப்போது நடந்து கொண்டதன் உள் நோக்கம் என்ன? நமக்குள் எத்தகைய மனிதன் எத்தகைய மனம் ஒளிந்து கொண்டிருக்கிறது என்பவற்றைப் பற்றி எண்ணுகிறோம். முக்கால் வாசி நேரம் நம்மை நாமே அதட்டுகிறோம். குற்றம் சாட்டுகின்றோம் அதட்டுகின்றோம் தண்டிக்கிறோம்.

நமது உணர்வுகள் தான் நம்மை ஆட்டுவிக்கின்றன. நமது உணர்வுகள் நம் ஆழ்மனதில் பதிந்து போய் நமக்கு நிரந்தரத் தொல்லை தரலாம்.நமது உணர்வுகள் நமது மனநிலையையும் உடல் நிலையையும் மாற்றி நம்மை வேறு மனிதனாகச் சில சமயம் நிறுத்தி விடுகின்றன.

காம எண்ணங்களை மனதில் தேக்க த்தேக்க காம உணர்வாக அது மாறுகிறது வஞ்ச எண்ணம் வெறுப்பு உணர்வாக மாறுகிறது. கஞ்சத்தனமான எண்ணம் சுய நல உணர்வாக வெளிப்படுகிறது. பகைவனைப் பற்றிய எண்ணங்கள் பயத்தை, கவலையை, ஆணவத்தை, சினத்தை நம் முள் எழுப்புகின்றன.

உங்களுக்குப் பிடிக்காத ஒரு விஷயத்தைப் பற்றி அல்லது ஒரு சம்பவத்தைப் பற்றிக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். மனதை அதில் திரிய விடுங்கள். உங்கள் மனநிலையும் உடல்நிலையும் எப்படி அதனால் மாறுகின்றன என்பதை உணர்வீர்கள்.

மாறாக ஒரு பச்சிளங் குழந்தையின் முகத்தை மனக் கண்முன் கொண்டு வாருங்கள். அதனுடன் சிறிது நேரம் கொஞ்சுங்கள்: பேசுங்கள்: சிரியுங்கள்: கண்ணா மூச்சி காட்டி விளையாடுங்கள். இப்போது உங்கள் மனநிலையும் உடல்நிலையும் இதன் விளைவாக எப்படி மாறி இருக்கிறதேன்று கவனியுங்கள். அதே போல ஒரு ஞானியின் முன் நிற்கும் அனுபவத்தை ஒரு புதுமலரை நுகரும் ரசானுபவத்தை மனதில் விரிய விடுங்கள். இத்தகைய எண்ணங்கள் நம்மை எப்படி புனிதப் படுத்துகின்றன. புல்லரிக்கச் செய்கின்றன. என்று விளங்கும் நினைவில்கொள் ளுங்கள். உணர்வுகள் நம்மைப் பாதிக்கின்றன ஆனால் உணர்வுகள் சாதாரண எண்ணங்களிலிருந்து சாதாரண நிலைகளிலிருந்து புலப்படு கின்றன. அதாவது, எண்ணங்கள் தான் உணர்வுகளின் மூலம், இவ்வுலகில் நமது அலைக் கழிப்புக்கெல்லாம் காரணம் நமது மனதில் எழும் அல்லது ஆழப்பதிந்து போயிருக்கும் தீய உணர்வுகள் தான் . காமம், கோபம், வஞ்சகம்,பொறாமை, ஆணவம், பயம், கவலை என்ற உணர்வுகள் நம் தலைக்குள் புகுந்து ஆழ் மனதில் கீறல் விழுந்த இசைத் தட்டைப்போல அதையே பாடிக் கொண்டிருக்கின்றன.

அதே போல் வறுமை வாய்ப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் பயமும், கவலையும், உலகின் மீது ஏற்படும் கோபமும் வஞ்சகமும் பொறாமையும் அளவிட முடியாதவை. ஆகவே, வறுமையும் ஒரு பொல்லாத உணர்வுதான். நீங்கள் ஒரு மாளிகையின் அறையில் உட்கார்ந்திருக்கிறீர்கள். அந்த அறையில் எட்டு ஜன்னல்கள் இருக்கின்றன. அவற்றின் வழியாக தென்றலும் சூரிய ஒளியும் இதமும் மகிழ்ச்சியும் நம்மை மயக்கும் ஒலியும் ஜீவனும் வருகின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள்....? உங்களை அறியா மல் கோபம், காமம், பொறாமை போன்ற உணர்வுகளால் அந்த அழகிய ஜன்னல்களை எல்லாம் மூடி விடுகிறீர்கள். இப்போது மாலைக் காட்சி தெரிவதில்லை. அது தெம்பு தருவ தில்லை. ஓடும் நதியின் காட்சி புலப்படவில்லை: அது தெளிவு தருவதில்லை. காற்றில்லை, ஒரே புழுக்கம். ஒளியில்லை, உள்ளே ஒரே இருட்டு, காற்றினிலே வந்த கீதத்தை இப்போது காது கேட்க முடியவில்லை: ஒரே பயங்கர நிசப்தம்.

சிலர் எல்லா ஜன்னல்களையும் இப்படி மூடிவிட்டு வாழ்கிறார்கள், பிறகு தங்கள் வாழ்க்கையைப் பற்றிக் குறைப்படுகிறார்கள். பலர் சில ஜன்னல்களை இப்படி மூடிவிட்டு அதைப் புரிந்து கொள்ளாமல், ஏன் இன்று ஒளியில்லை? ஏன் இன்று காற்றில்லை? ஏன் இன்று குயில் பாடக் காணோம்? என்று தெரியாது வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

எண்ணங்களைப் பற்றித் துருவித் துருவித் தேடிக் கொண்டு கடைசி வரைக்கும் போனால், நல்லெண்ணம் என்ற ஒரு சொல்தான் மிஞ்சுகின்றது. அந்த ஒரு சொல் தான் வாழ்விக்கிறது. அந்த ஒரு சொல்தான் நம்மையும் இப் பிரபஞ்சத்தையும் இணைக்கிறது. அந்த ஒரு சொல்தான் நமது மாளிகையின் எல்லா ஜன்னல்களையும் திறந்து விடுகிறது.

எனது நண்பர் ஒருவர் இருக்கிறார். வாயார ஒன்று பேசுவார். மனதிலோ வேறு எண்ணம் இருக்கும். அவரை பொய்யனென்றும் திருடனென்றும் உலகம் புரிந்து கொள்ள அதிக காலம் ஆகவில்லை. சில சமயங்களில் நாம் மிகப் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு வருகிறோம் எனறு இறுமாந்திருப்போம். ஆனால் உலகில் நம்மைவிடப் புத்திசாலிகள் நிறையப்பேர் இருக்கிறார்கள் என்பது நமக்கு மறந்து விடுகிறது.

தவறு செய்யும் போது கூட உள்ளதை உள்ளபடியே கூறுங்கள். நமக்கு அப் போது தவறைத் திருத்திக் கொள்ளும் வாய்ப்பு கொஞ்சம் இருக்கிறது. ஆனால், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் போது, நமக்குத் திருத்திக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறதென்பதே புலப்படுவதில்லை. ஏனெனில் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம். ஆகவே தான் சொன்னார் வள்ளுவர் தன்னெஞ்சறிவது பொய்யற்க' என்றும் மேலும் சொன்னார். தன்னெஞ்சே தன்னைச் சுடும்'' என்று நமது முன்னோர்களின் வாக்குகள் முக்காலும் பொய்க்காதவை. அனுபவத்திலிருந்து பிறந்தவை.

நம்மிடம் மன்னிக்கிற மனோபாவம் இருந்தால்தான் நமது தீய உணர்வுகள் நம்மை விட்டகலும். மன அளவில் திரும்பத் திரும்ப எண்ணி மன்னிக்க முயல வேண்டும். எதிரியை ஒளிப்பேன் என்று எதிர்க்கட்சிக் காரர்களை ஒடுக்கியவர் தானே ஒளிந்து போனார். உலகையும் எதிரிகளையும் நண்பர்களையும் தன் மனைவியையுமே சந்தேகப்பட்ட ஒரு ம்னிதர் எல்லா இன்பங்களையும் இழந்தார். சந்தேகத்தைப் போன்ற கொடிய நோய் வேறில்லை.

வாழ்வில் நாம் கவனிக்க வேண்டிய மற்றோர் உண்மை இருக்கிறது. அதாவது வாழ்க்கை ஒரு தொடர் முயற்சி என்பது.

நேற்று வரை ஞானியாக, துறவியாக இருந்த ஒரு மகான் காலப் போக்கில் பண வரவால், புகழால் செல்வாக்கினால் ஈர்க்கப்பட்டுச் சுக போகங்களில் மூழ் கினார். கண்களின் அடியே கருவட்டம் தோன்றி முக ஒளி மாறியது. அவரது பிரச்சினைகள், துன்பங்கள் உடல் நோய்கள் அதிகமாயின. 'நேற்றுவரை நான் நல்லவனாக இருந்தேன்' என்னும் புலம்பல் எடுபடவில்லை. குணமும் ஒழுக்கமும் சேமிப்புபாங்கில் போட்டுக் கொள்ளும் பொருட்கள் அல்ல, ஆகவே நாம் பழம் பெருமையில்- நான் நல்லவ னாக இருந்தேன்- இருந்திருக்கின்றேன்- என்ற எண்ணங்களில் காலந்தள்ள முடியாது. வாழ்க்கை ஒரு தொடர் முயற்சி, தொடர்ந்து நம் எண்ணங்களைக் கண் காணிக்க வேண்டும். இத்தகைய ஒரு மன வெளியில்- ஜன்னல்களை திறந்த நிலையில்- மனதில் ஆக்க பூர்வமான சிந்தனைகளை பணம் சேர்க்கும் சிந்தனைகளையோ, சாதனை புரியும் சிந்தனைகளையோ, ஆத்ம வளர்ச்சி பற்றிய எண்ணங்களையோ விதைக்கும் போது மனிதன் அதி மனித னாகின்றான். அவன் ஆக்க சக்தியாக ஒளி விடுகிறான். அந்த ஆத்ம ஒளி சக்தியை திறந்த ஜன்னல்கள் வழியே அவன் மனதில் ஈர்க்கிறது.

மன ஜன்னல்களை திறந்து வைப் போம். ஆதவனை உள்ளே அழைப்போம்.

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

**மு-திருநாவுக்கரசு**

# யாப்புச் சீர்திருத்தம்: முஸ்லிம்களை ,மலையகத் தமிழரை , தமிழரை பாதிக்கும்

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் சினம், கோபம், கண்டனம், பரஸ்பரம் சூடான அறிக்கைகள் என்பன ஒருபுறம்.

ஜனாதிபதியுடனான பிரதமரின் சந்திப்பு, ஜனாதிபதியிடம் பிரதமர் தனது திட்டங்களை எடுத்து விளக்குதல், ஜனாதிபதியுடன் பிரதமர் ஆலோசித்தல் என்பன மறுபுறம்.

இவற்றிற்கப்பால் அமைச்சர்கள் ஜனாதிபதியை குறைகூறி வருவதாகவும் கண்டித்து வருவதாகவும் "எல்லாம்வல்ல", "நிறைவேற்றதிகாரம்" கொண்ட ஜனாதிபதி விசனப்பட்டு தனக்குக் கீழான பிரதமரிடம் முறையீடு செய்கின்றமை இன்னொருபுறமாக இலங்கையின் அரசியல் இப்போது ஒரு விசித்திர வடிவம் பெற்றுள்ளது.

பிரித்தானியாவின் நாடாளுமன்ற ஆட்சிமுறையின் கீழ் அரசாங்கத்தின் தலைவரை அமைச்சர்கள் வசைபாடவோ அன்றிக் குறைந்த பட்சம் குறைகூறக்கூட முடியாது. அங்கு ஓர் அமைச்சரை கூட இன்னோர் அமைச்சர் குறைகூற முடியாது.

அமெரிக்காவின் ஜனாதிபதி முறையின் கீழ் ஆட்சித்தலைவரை (ஜனாதிபதியை) செயலாளர் எனப்படும் அமைச்சர்கள் குறைகூற முடியாது.

ஆனால் இலங்கையில் அரசின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவருமான ஜனாதிபதியை அவரின் கீழ் பணியாற்றும் அவருக்கு மிகவும் கீழ்நிலையிலுள்ள அமைச்சர்கள் வசைபாடக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பது உலகிலுள்ள எந்தவொரு யாப்பு முறைகளிலுமில்லாத ஒரு விசித்திரமாகும்.


உலகிலுள்ள சராசரியான யாப்பு முறைகளுக்கு வெளியே இலங்கையில் ஜனாதிபதியை அமைச்சர்களினால் எப்படி வசைபாட முடிகின்றது? "சகல வல்லமையும்'' பொருந்திய ஜனாதிபதி தனக்குக் கீழான பிரதமரிடம் ஏன் முறையிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

> பிரிட்டன், ஜேர்மன், பிரான்ஸ், அமெரிக்கா(யு .எஸ்.) ஆகிய நான்கு நாடுகளுடையதும் ஜே.ஆரினது நரித்தந்திரத் தேவைகளினதுமான ஐமுனைக் கலப்புச் சாம்பாறுதான் இப்போதைய இலங்கை யாப்பு. இத்தகைய சாம்பாறின் ஐமுனை அம்சங்களிடையேயான மோதலின் வெளிப்பாடு தான் இத்தகைய விசித்திரமும் குளறுபடியும் நிறைந்த இன்றைய அரசியல் நிலவரமாகும்.

பிரிட்டன், ஜேர்மன், பிரான்ஸ், அமெரிக்கா(யூ.எஸ்.) ஆகிய நான்கு நாடுகளுடையதும் ஜே.ஆரினது நரித்தந்திரத் தேவைகளினதுமான ஐமுனைக் கலப்புச் சாம்பாறுதான் இப்போதைய இலங்கை யாப்பு. இத்தகைய சாம்பாறின் ஐமுனை அம்சங்களிடையேயான மோதலின் வெளிப்பாடுதான் இத்தகைய விசித்திரமும் குளறுபடியும் நிறைந்த இன்றைய அரசியல் நிலவரமாகும்.

இத்தகைய முரண்பாடுகளின் முதலாவது வளர்ச்சிக் காலகட்டமான 1994ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஆட்சிமுறையானது மரணப்படுக்கைக்குப் போனது. ஜனாதிபதியாக இருந்த டி.பி.விஜெயதுங்க தனக்கு யாப்பு ரீதியாக இருந்த அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியாத நிலையில் மாற்றுக் கட்சியினரான சந்திரிகாவை பிரதமராக நியமிக்க நேர்ந்தது.

தான் பதவியேற்று ஓர்



ஆண்டுக்குள் ஜனாதிபதி முறைமையை ஒழிக்கப்போவதாகச் சூழுரைத்தார். ஆனால் தான் ஜனாதிபதியானதும் மரணப்படுக்கையில் இருந்த ஜனாதிபதி முறைமைக்கு இனவாத இரத்தமேற்றி புத்துயிரளித்தார். குற்றுயிராயிருந்த ஜனாதிபதி முறைமையும் அந்தயாப்பும் உயிர்வாழ்வதற்குத் தேவையான இரத்தத்தை தமிழரிலிருந்து அது கறந்தெடுத்தமைக்கான பெயர்தான் சந்திரிக்காவின் "சமாதானத்திற்கான போர்".

இப்போது இரண்டாவது தடவையாக ஜனாதிபதி முறைமையும் யாப்பும் மரணப்படுக்கைக்குப் போயுள்ளன. யாப்புரீதியாகத் தனக்குள்ள அதிகாரங்களைப் பிரயோகிக்க முடியாத நிலையில் ஜனாதிபதி சந்திரிகா மாற்றுக் கட்சியினரான ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்க நேர்ந்தது.

இவ்வாறாக, யாப்பின் தர்க்கபூர்வ முரண்பாட்டு வளர்ச்சியின் நிமித்தம் ஜனாதிபதி முறைமை மரணப்படுக்கையில் உள்ள சூழலில் பிரமதரும், அமைச்சர்களும் ஜனாதிபதிக்கு எதிராக சீனடி- சிலம்படி நடாத்தத்தொடங்கி விட்டனர். இந்நிலையில் மரணபடுக்கையிலுள்ள ஜனாதிபதி சந்திரிகா அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை பார்த்து உனக்கு ஒரு குண்டல்ல குண்டுத் துகளே போதும்" என்றும், பிரதமர் ரணிலைப் பார்த்து "உன் கழுத்துக்குப் பாய்வேன்" என்றும் செயலிழந்து திட்டித்தீர்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தன்னிகாரற்ற, மாட்சிமைதங்கிய, மேன்மைதங்கிய அதிஉத்தமர் அல்லது அதிஉத்தமி என யாப்பு ரீதியாக முதன்மைப் படுத்தப்பட்டு புகழ்ச்சி கூறப்படும் ஜனாதிபதியை அவரிற்கு கீழான பிரதமரும் அமைச்சர்களும் வசைபாடுதல் மட்டுமன்றி அவரைச் சீண்டி இகழ்ந்துரைக்கும் நிலைக்கான அரசியல் விளக்கமும் யதார்த்தமும் இதுதான்.

ரணிலை பிரதமராக நியமிக்க சந்திரிகா விரும்பவில்லை. ஆயினும் யதார்த்தரீதியான அரசியல் முரண்பாட்டில் ரணில் பக்கம் காணப்பட்ட பலம் ரணிலை பிரதமராக்குவதைத் தவிர வேறு மாற்றுவழிகளைச் சந்திரிகாவிற்கு கொடுக்கவில்லை. இத்தகைய நெருக்கடியான சூழலில் ரணில் பிரதமராக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் பதவியிருப்பு பிரதமருக்கு தொடர்ந்தும் சவாலானதே ஆதலால் தூய தர்க்கப்படி ஜனாதிபதி முறைமையை பிரதமர் ஒழிக்கவிரும்ப வேண்டியது இயல்பு.

ஆனால் இத்தூய தர்க்கத்திற்கு வெளியே ஓர் உபதர்க்கமுண்டு. அதன்படி பார்க்கையில் அடுத்தமுறை, அதாவது மூன்றாவது தடவை சந்திரிகா ஜனாதிபதியாக முடியாது. ஆதலால் அந்தக் கதிரை அடுத்த முறை தன்னையே எதிர்பார்த்துக் காத்திருப்பதாக ரணில் நம்புகிறார். எனவே தனக்கு வரவிருக்கும் அந்தச் சொகுசான கதிரைக்கு ரணில் குண்டுவைக்கத் தயாரில்லை.

இதில் ரணிலினுடைய தேவை இருதலைப்பட்டது. ஒன்று இப்போதிருக்கும் தனது பிரதமர் பதவியை ஜனாதிபதியின் வாள் வீச்சுக்குப் பலியாகாது பாதுகாக்க வேண்டியது, மற்றயது தனக்கு அடுத்தமுறை வரவிருக்கும் சொகுசுமிகு ஜனாதிபதிக் கதிரையை பேணவேண்டி இருப்பது. எனவே இத்தகைய இருதலைத் தேவையின் மத்தியில் ஜனாதிபதி முறைமையைச் சாகவிட ரணில் தயாராய் இல்லை.

ஆதலால் ஜனாதிபதி-பிரதமர் ஆகிய இரு பதவி நிலைகளுக்கும் இடையில் ஒரு சமரசத்தைக்காண ரணில் விளைகிறார். அதன்படி தனது பிரதமர் பதவி மீது ஜனாதிபதியால் கைவைக்க முடியாதவாறும், அதேவேளை ஜனாதிபதி முறைமை நீடிக்கக்கூடியவாறுமான ஓர் அரசியல் யாப்புத் திருத்தத்தை ரணில் பிரேரிக்கின்றார். அதாவது பிரதமரின் ஆலோசனையின்றியோ அல்லது நாடாளுமன்றத்தின் சம்மதமின்றியோ ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாதென்பது. இது நிறைவேற்றப்படுமிடத்து ரணிலினுடைய இப்போதைய பிரதமர் பதவியும் பாதுகாக்கப்படும், அடுத்து அவருக்கு கிடைக்கவுள்ளதாக அவர் நம்பும் ஜனாதிபதிக் கதிரையும் பேணப்படும். மீண்டும் மரணப்படுக்கையிலுள்ள ஜனாதிபதி முறைக்கு புத்துயிர் கொடுக்கும் புதுவழியே இந்த யாப்புச் சீர்திருத்தத்தின் முதல் நோக்கமாகும்.

விடுதலைப் புலிகளையோ அல்லது வடக்கிலோ அன்றித் தெற்கிலோ எழக்கூடிய எந்தவொரு ஆயுதப் போராட்டத்தையும் கையாள ஜனாதிபதி முறைமை சிறந்தது என வாதிடும் சிங்கள இனவாதிகளுக்கும், எதேச்சதிகார வாதிகளுக்கும் தீனிபோடவல்ல சமரசவழியிது.

வெறும் நலன்களுக்கப்பால் இதனை அரசியற் தத்துவார்த்தரீதியில் பார்த்தால் ஜனாதிபதி-பிரதமர் ஆகிய இரு பெரும் பதவி நிலைகளுக்கிடையேயான இழுபறி நிலையின் மத்தியில், அவர்கள் இருவரும் ஒடுக்க விளையும் அவர்களின் "பொதுஎதிரி" தப்பிப் போகாமல் பார்த்துக் கொள்வதற்கேற்ற முறையில் இவ்விரு பெரும் பதவிகளுக்குமிடையேயான ஒரு வலுப்பங்கீட்டு நிலைக்கான ஒரு சமரசத்தை ஒடுக்குமுறை அரசயந்திரம் கோரி நிற்கின்றது. இத்தேவைக்கும் சமரசத்திற்கும் பெயர்தான் ரணிலின் யாப்புச் சீர்திருத்தம்.

அடுத்து இரண்டாவது முக்கிய அம்சம் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பற்றியது. ஐ.தே.க., சு.க. ஆகிய இரு கட்சிகளும் தனிக்கட்சியாக இனிமேல் அரச கட்டிலேற முடியாதென்பதை பெருமளவு சுமூகமாய் நிகழ்ந்த கடந்த கால விகிதாசாரத் தேர்தல் முறைகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துவிட்டன.

பதவிக்கு வரவல்ல இவ்விரு பெரும் கட்சிகளும் தமிழர், முஸ்லீம்கள், மலையகத்தமிழர் சார்ந்த கட்சிகளது தனித்தோ அன்றி கூட்டானதோ ஆன ஆதரவும் அனுசரணையுமின்றி விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் பதவிக்கு வரமுடியாதென்பது நிரூபணமாகிவிட்டது இந்த இடத்தில் இரு பெரும் சிங்கள இனவாதக் கட்சிகளும் இந்த விகிதாசார முறையில் மாற்றமேற்படுத்த விரும்புகின்றன. இதனால் நாடாளுமன்ற மொத்த ஆசனங்களில் 125 ஆசனங்கள் தொகுதிவாரியாகவும், 100 ஆசனங்கள் விகிதாசார ரீதியாகவுமென விகிதாசார முறைக்கும், தொகுதிவாரி முறைக்கும் இடையே ஒரு சமரசங்காண விளைகின்றனர். இது பௌத்த சிங்களவரல்லாத ஏனைய இனங்களின் நலன்களையும் அரசியற் பேரம் பேசும் சக்தியையும் வெகுவாகப் பாதிக்கும். குறிப்பாக இது முஸ்லீம்களையும் மலையகத் தமிழரையும் கூடுதலாகப் பாதிக்கும். அடுத்து ஈழத்தமிழரைப் பாதிக்கும். எனவே நடப்பிலுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை ஒழிக்க இம்மூன்று இனங்களும் ஆதரவளிப்பது தற்கொலைக்கொப்பானது.

> ரணிலினுடைய தேவை இருதலைப்பட்டது. ஒன்று இப்போதிருக்கும் தனது பிரதமர் பதவியை ஜனாதிபதியின் வாள் வீச்சுக்குப் பலியாகாது பாதுகாக்க வேண்டியது, மற்றயது தனக்கு அடுத்தமுறை வரவிருக்கும் சொகுசுமிகு ஜனாதிபதிக் கதிரையை பேணவேண்டி இருப்பது. எனவே இத்தகைய இருதலைத் தேவையின் மத்தியில் ஜனாதிபதி முறைமையைச் சாகவிட ரணில் தயாராய் இல்லை.

அடுத்து மூன்றாவது முக்கிய சீர்திருத்தம் கட்சிதாவாத் தடைச் சட்டத்தை நீக்கிவிடுவது. கட்சிமாறாத் தடைச்சட்டம் என்பது எந்தவொரு கட்சியினதும் தலைமைப் பீடத்திற்குச் சாதகமானது. இது மரபுவழிக் கொடுங்கோண்மைமிக்க ஆசியச் சமூகங்களிலுள்ள கட்சிகளுக்கு ஜே.ஆர். கொடுத்த ஒரு முதுசமாகும். ஜே.ஆரை பின்பற்றியே பின்பு இந்தியாவும்



இச்சட்டத்தை கொண்டுவந்தது. ரணிலுக்கும் நடைமுறையிலுள்ள இச்சட்டம் நீண்ட காலத்திற் சாதகமானதுதான். ஆனால் ரணிலுக்கு உடனடியாக வுள்ள பிரச்சினை என்னவென்றால் நாடாளுமன்றத்தைக் கலைக்கவல்ல ஜனாதிபதியின் அதிகாரத்தை தடுக்கவும் அவரது வேறு சில அதிகாரங்களை மட்டுப்படுத்தவும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை. இதற்கான பலம் அவரது கட்சிக்கு நாடாளுமன்றத்திற் தற போதில்லை. எனவே கட்சிதாவாத் தடைச் சட்டத்தை நீக்குவதன் மூலமே சு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரைத் தம்பக்கம் கவர்ந்திழுத்து மூன்றில் இரண்டு பங்கு பலத்தை பெறமுடியும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் மாற்றம் கொண்டு வருவதை சந்திரிகாவினால் ஏற்கமுடி யுமாயினும் ஜனாதிபதியின் அதிகாரத்தில் கைவைப்பதும், கட்சிதாவாக் கட்டத்தில் கைவைப்பதுமான திருத்தங்களில் சந்திரிகா முற்றிலும் எதிர்நிலையே எடுக்க முடியும். ஆதலால் அரசியல் வாதிகளிடை யேயான பேரநாடகத்தின் பெறு பேற்றில்தான் ரணிலின் சீர்திருத்த முயற்சிகள் தங்கி நிற்கும்.

உண்மையான அர்த்தத்தில் ஜனாதிபதி முறைமை தற் போதில்லை. மரணப்படுக்கையிற் கிடந்து கொண்டு இனவாதத்திற் குள்ளால் உறும மட்டுமே அதால் முடிகின்றது.

இனப்பிரச்சினை என்றொரு விவகாரம் இல்லையேல் ஜனாதிபதியால் உறுமக்கூட முடியாது. இந்த வகையில் குற்றுயிராய் கிடக்கும் ஜனாதிபதி முறைமைக்கு உயிரூட்டவும், சிங்கள பௌத்த கட்சி ஒன்று தனித்து பதவிக்கு வரக்கூடியதற்கான அரசியல் யாப்பு மாற்றத்தைச் செய்வதும் தான் இப்போதைய அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் பிரதான இலக்குகளாகும்.

# அமைதி யாருக்காக?

எடி பிள்ளை உந்தக் கைலாம்பு ஊடுபத்துது-எப்புன் "எண்ணை கொணந்து விடு.." ணேய் பத்து மணியாப் போச்சு நூத்திட்டு படணை எண்டுறாள் அவள்.எப்பன் எண்ணை விட்டாக்குறைஞ்சு போவளே வரவர எண்ணை விலையளும் கூடுதாம்மெய்தானோ நாங்கள் தமிழீழத்துக்க...

100ரூவா 150ரூவா குடுத்து எண்ணை வாங்கின எங்களுக்கு இப்பத்தயில் விலை கொள்ளை மலிவுதான்.

ஆனாப் பாருங்கோ உந்த எண்ணைவிலை ஏன் உப்பிடி மலையில ஏறுது. ஆ...எண்ணைக் கென்ன விலையெண்டத ஆர் சொல்லுற எல்லாம் அரசியல் பாருங்கோ அரசியல்-முன்னம் ஈரான் ஈராக் சண்டை நடந்ததில யிருந்து வளைகுடாப்போர் தொடர்ந்து இண்டைய ஆபுகான் போர் வரையிலும் என்ன காரணம்ம்... என்ன காரணம் எண்ணை காரணம், பின்னக் கதையோட கதை சோவியத் ரசியா உடைஞ்சதுக்கும் அது எங்க பாருங்கோ உடைஞ்சது உடைச்சது எண்டதுதான் சரி இதுக்கும் எண்ணைதான் காரணம்.

முந்தின காலத்தில் இந்த எண்ணைய நிலத்துக்கால எடுத்தாலும் கப்பலிலதான் பாருங்கோ மற்ற நாடுகளுக்கு அனுப்பினவை. வழி வழியாக் காசும் பொருளுங் குடுத்து எண்ணை வாங்கினவை அதை குத்தகைக்கு ஒட்டுமொத்தமா தாங்களே அப்பிக் கொள்ளப் போட்ட திட்டங்கள் தான் பாருங்கோ இண்டைக்கு நாடுகள்ள நடக்கிற விடாப்பிடியான குடுமிபிடி சண்டையளுக்கும் காரணமாப் போச்சு பின்ன வல்லடி வழக் கெண்டு போகாம, மத்திய ஆசியாவில உள்ள எண்ணை வயலுகளையெல்லாம் தங்கட கையுக்க போட இவை போடுற திட்டங்களுக்க பாவம் அந்த நாடுகள் ஆப்பிட்டு சம்பலாப் போகுது.

எங்கட உலகப் பொலிசுக்காறர் எல்லாற்ற சண்டைக்கையும் தலையப்போட்டு நான்தான் எண்டு காட்டுறதுக்கு ரசியாவை உடைக்க வேண்டியதாப் போச்சு இதோட இந்த வளைகுடாப்போர் ஒண்டு நடந்ததெல்லே ஏதோ குவைத் மன்னருக்கும் மக்களுக்கும் உருகி பாசப் பெருக்கில போய் செய்த சண்டையில லாவம் இல்லாமலே ஈராக்கிலயிருந்து மிக பிரமாண் டமான ருமைலா எண்ணை வயலுகளை நைசா குவைத்தோட இணைச்சாச்சு பிறகு பிரிட்டிசும் அம்மேரிக்காவும் பங்கா இந்த நிறுவனங்களை எடுத்துப்போட் டினம் கண்டியளோ.

தன்ர பண்டம் அரிசி தங்கச்சிபண்டம் தவிடாம் ஆறாயிரம் அம்மேரிக்க வீரர்கள் செத்தது சும்மாவே இவயட அரசாங்கத்தைப் பற்றி கேட்டியளெண்டா தென்னிந்திய சினிமாக்கள் தோத்துப்போம். இப்ப இருக்கிறாரெல்லே சனாதிபதி இவர்தான் பாருங்கோ துவக்கைக் காட்டி கறுப்பினத்தாரை வோட்டுப் போட விடாமமறிச்சு மயிரிழையில பதவிக்கு வந்தவர். துணை அதிபரா இருக்கிற டிக் செனி ஹொலிபேட்டன் எண்ட அம்மேரிக்க எண்ணை நிறுவனத் துக்கு தலைவர் மட்டுமில்ல ராணுவத்துறைக்கும் செயலாளராம் இந்தளவிலேயே தேசிய பாதுகாப்பு ஆலோசகர் 'கண்டோசலா ரைஸ்' அம்மா கூட ஒரு எண்ணெய்க் கம்பனி இயக்குனராம் இப்பத்தயில் ராணுவத்துறைச் செயலாளர் டொனாட் ரம்ஸ்பீல்ட் இவர் பன்னாட்டு நிறுவனத்திற்கு தலைமையதிகாரியாவும் இருக்கிறார் இதை விடுங்கோ இண்டைய அரசுச்செயலர் காலின் பாவெல் என்ன கேள்விப்பட்ட பேராக்கிடக்கே அ பிடிச்சிட்டியள் ஈராக் போரைத் தலைமையேற்று நடத்தினவர் ஆ... ராணுவ தளபதி உப்பிடியோ கதை எண்ணுறியள் இஞ்சால காதைத் தாங்கோ ஒரு சின்ன ரகசியம்.

செப்டம்பர் 11 ஞாபகமிருக்கே உலக வர்த்தக மையத்தில நடந்த பிரச்சனை இது தானாம் அம்மேரிக்கா ஆப்கானில பாயக்கா ரணமெண்டும், ஒசாமா பின்லேடனை ஒழிச்சுக்கட்டுறதே லட்சியமெண்டும் வெளிக்கிட்டு ஆப்கானைச் சம்பல் போடுகினமெல்லே ஆனா இந்த அம்மேரிக்க முன்னைநாளதிபர் அதுதான் இப்ப இருக்கற புஸ்ஸின்ர தேப்பன் புஸ் ஏராளமான எண்ணை நிறுவனங்களில முதல் போட்டிருக்கிறார் இவர் முன்ன(C.I.A) சீ,ஐ,ஏ யின்ர இயக்குனராகவும் இருந்தவர் பாருங்கோ உந்த.. ஆயுத கம்பனியொண்டிருக்கெல்லே கார் லைசெண்டு அதின்ர அதிகாரங் கொண்ட தரகர் இந்த புஸ்ஸப்பா - புஸ் மகன்ர அரசாங்கத்தில உள்ள கன செல் வந்தர்கள் இதில பங்காளியளாம் ஜோர்ஜ் சோரோஸ் எண்ட யூத முதலாளியும் இதில பங்காளி தானாம் இதில்லப் பாருங்கோ ரகசியம் இந்த பங்காளியள்ள ஒஸ்சாமா பின்லேடன் குடும்பத்தினரும் இருக்கினமாம்- எப்பி டிக்கதை.



மோன் தேடுதல் வேட்டையில தேப்பன் பங்கு யாவாரத்தில எங்கட நாட்டிலயும் மோள் சனாதிபதி அம்மா பிரதமர் மாமா ராணுவத்தலைமை தம்பி சபாநாயகர் எண்டு நடக்கேல்லயே ஒண்டுக்கொண்டு சரி விரலுக்கேத்த வீக்கம்

இந்த ஆப்கானச்சுத்தி எத்தின நாடுகள் வலை வீசினது இண்டைக்கோ நேற்றைக்கோ ஆப்கானையும் மத்தியஆசியாவையும் பிடிச்சுப்போட ரசியா கொஞ்சமே முட்டிப்பாத்தது. பிரிட்டிஷ் கொஞ்சமோ முட்டிப் பார்த்தது.இப்ப அம்மேரிக்கா- இதெல்லாம் ஏன்,ஏன்? எண்ணெய்க்காக- எரிவாயுவுக்காக, தங்கத்துக்காக எண்டு சொல்லிக் கொண்டே போகலாம் பாருங்கோ.

உந்த உலகப்படத்தையொருக்கா எடுத்து விரிச்சுப் பிடியுங்கோ சொல்லுறன் இஞ்ச கிழக்கயிருந்து தெற்கெ வரைக்கும் பாகிஸ்தான் வச்சிருக்கிற நாடுதான் பாருங்களன்-மேற்கால ஈரான் கிடக்கு வடமேற்கால துர்க்மெனித்தான்-வடக்க பிடியுங்கோ-என்ன- உஸ்பெகிஸ்தான்-தாஜகிசுத்தான் இஞ்சால வடகிழக்க ஒட்டினாப் போல 'ஜின்ஜியாஸ்' இது சீனாத்துண்டு நடுவ கிடக்கிற ஆப்கானில இண்டைக்கு நேற்றில்ல எப்பவோ அம்மேரிக்க நிறுவனங்கள் படையெடுக்கத் துவங்கீட்டுது.

உலகத்திலயே மிகப்பெரிய தங்கச்சுரங்கம் உஸ்பெக்கித்தானில கிடக்கு தெரியாமச் சொல்லிப் போட்டன் எங்கட பெண்டுகள் அங்கயும் படையெடுக்கப் போகினம். உலகத்தில அதிகமான வெள்ளி தஜகிசுத்தான் மண்ணில புதைஞ்சு கிடக்கு உலகத்தின்ர நாலிலொரு பங்கு யுரேனியம் கஜாகஸ்தானில கிடக்காம். இது மட்டுமே அதிகமான எண்ணெய் இருப்பும் இஞ்சகிடக்கு இந்த எரிவாயு இருக்கெல்லே. அறுவத்தாறு லச்சங்கோடி கனமீட்டர் எரிவாயு இந்த நாடுகள்ள இருக்கு.

அப்ப இதெல்லாம் ரசியாவா இருந்தா எப்பிடி எடுக்கிற அதாலதான் பாருங்கோ இதைத் தந்திரமா உடைச்சுத் துண்டுதுண்டா எடுத்தது. இந்த நாடுகள் உடைஞ்சது தான் தாமதம் என்ரான், பிரிட்டிஸ் பெற்றோலியம், மொபில், எக்ஸான், அமோகோ, செவ்ரான், யூனோகால் எண்டு சொல்லப்படுகிற ப(ன்)னாட்டு நிறுவனங்கள் பறந்து போய் பேரம் பேசினவை- ஆர் தர்கு தெரியுமே பேந்தார் இண்டய அம்மேரிக்கத் துணையதிபர் டிக்செனிதான்.

இப்பதான் பாருங்கோ மெயின் பிரச்சனை வருது. சாமானெல்லாம் வாங்கியாச்சு கொண்டு போற வழி? இதெல்லாம் கொண்டுபோற நிலத்தடி குழாயள் ரசியாவுக்கால யெல்லே போகுது. இப்ப எண்ணை எரிவாயுவெல்லாம் இதுக்காலதான் கொண்டு போகோணுமெண்டா ரசியாவுக்கு வரிகட்ட வேணுமே (இப்ப A.9பாதைக்கு கட்டவே எங்களுக்கு நாரியுளையுது இதில எத்தினயாயிரம் போராளியளின்ர ரத்தமும் சதையும் சேர்த்துக்கலந்து போட்டிருக்குதெண்டு விளங்கவேணும்) வரி கட்டாட்டி- எடுக்கிற சாமானுகளை அவைக்குத்தான் விக்கவேணும்.

கேட்டியளே இப்பிடி இதெல்லாம் இவைக்கு வித்தா-8.74 டொலர்தானாம் கிடைக்கும் ஆயிரம் கன மீட்டர் எரிவாயுவுக்கு இதையே உலகச் சந்தைக்கு கொண்டு போனா எண்பதுடொலர் கிடைக்குமாம் எப்பிடிக் கொள்ளை.

இதை எப்பிடிச்சமாளிக்கிறதெண்டு இந்த செவ்ரான் கம்பனி கஜகஸ்தானில பெருமளவு எண்ணெய் வாங்க ஒப்பந்தஞ் செய்தாரோ... ரசியாப் பிள்ளையார் கஜாகஸ்தானில இருந்து கருங்கடலுக்கு வரும்படி புதுக்குழாயளப் போட்டார்.

செவ்ரான்ர திட்டம் பணால் இப்ப அம்மேரிக்க அதிபர் ஒரு அட்டகாசம் போட்டார். என்ன ஆற்ற செல்வாக்கு மண்டலத்தையும் அம்மேரிக்கா ஏற்காது அம்மேரிக்க நிறுவனங் களின்ர வர்த்தக உரிமைய அம்மேரிக்கா அரசு பாதுகாக்கும். சொல்லி யென்ன புடுங்கியடுக்கிறதே.


அய்ரோப்பாவுக்கு குழாய்ப் பாதை வேணுமெண்டா ஈரான் அல்லது ஜார்ஜியா வழியா துருக்கியையும் சேர்த்தாத்தானே பாதை போடலாம். செய்யலாமோ... செய்துவிட்டா பிரச்சனை எப்பிடிவரும். பிள்ளையார் பிடிக்க குரங்காப்போகும் பின்ன ஈரானுக்கு இவை பொருளாதாரத்தடை போட்டிருக்கினம் ஏனெண்டா இவையைத் தனிய வச்சிருக்கிறதுதான் இவற்ற நோக்கம். பேந்து ஈரானையும் துருக்கியையும் குழாயால இணைச்சுவிட்டா... இவை கையக்கோத்திட்டினமெண்டா... இது இஸ்ரேலுக்கும் ஆபத்து அம்மேரிக்காவுக்கும் ஆபத்து அப்பஎன்ன செய்யலாம் எண்டு மண்டையக் குழப்பி கண்ட வழிதான். ஆப்கானித்தான்.

பிரச்சனைப்படக்கூடிய நாடுகளுக்கால கஸ்பியன் கடலுக்கால குறுக்கால போகாம, தூரமும் குறைஞ்ச செலவும் குறைஞ்ச பாதை ஆப்கானித்தான், பாகிஸ்தான், அரபிக்கடல் பாதை.

இப்ப பாருங்கோ பிரச்சனையை இந்த எடுக்கிற சாமானுகள் விக்கிற சந்தைக்கு நேரா வரப்போகுது. அரபிக் கடல்லயிருந்து இந்தியாவையும் பல ஆசிய நாடுகளையும் வளைகுடாவையும் அய்ரோப்பாவையும் கூட சுகமாப் போய்ச்சேரலாம். அதுக்கு அசகாயசூர வழி ஒண்டும் அவசியம் எது ஆப்கானில அமைதி துவங்காம குழாய் பதிக்கிற வேலை துவங்கேலாது. இப்ப விளங்குதோ அமைதி ஆருக் கெண்டு

— மாயா —

(அடுத்த இதழில் முடியும)



## மதவடி மயிலர்

**செய்தி: 'வன்னிக்கு எரிபொருள் எடுத்துவர வவுனியாவில் இராணுவம் அனுமதி மறுப்பு'**

**மயிலர்:** பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பாட்டை மீண்டும் பாடத்தொடங்கீட்டினம் போலை... பாதுகாப்பு அமைச்சு அனுமதித்து விட்டதை தீடிரென மறந்து போகக் காரணம் என்ன? இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் எரியும் பிரச்சினையாக இருக்கவேண்டுமெண்டு தான் இராணுவம் நினைக்கிறது போலும்...

சமாதானம் என்கிறது சாண் ஏற முழம் சறுக்கிற கதையாகத்தான் இருக்கறது பாருங்கோ...!

**செய்தி: அமைச்சர்கள் சிலரின் நடவடிக்கைகளில் சனாதிபதி சந்திரிகா அதிருப்தி...**

**மயிலர்:** கைவிட்டுப் போன அதிகாரங்கள் சிலவற்றை மீளக்கைப்பற்ற நினைக்கும் தந்திரோபாயத்தின் வெளிப்பாடு தான் இந்த 'அதிருப்தி' குரல் பாருங்கோ... ஆனால் வந்து கொண்டிருக்கிற ஊழல் மோசடி செய்திகளின் தொகையைப்பார்த்தால் அம்மணி மீது அனைத்து தென்பகுதி மக்களும் அதிருப்தி கொள்ள வேண்டிய நிலையெல்லே வளர்ந்து கொண்டு வருகுது.

**செய்தி. போர்க் குற்றங்களில் இருந்து அமெரிக்கப்படையினருக்கு விலக்கு. அமெரிக்கா விடுத்த மிரட்டலுக்கு ஐ.நா.பாதுகாப்பு சபை பணிந்தது...**

**மயிலர்:** இனி ஐ.நா.சபை என்பதை அ.ஐ.நா சபை என்று மாத்திறதுதான் நல்லது... அதுதான் அமெரிக்க ஐக்கிய நாடுகள் சபையெண்டு தான் அதைக் கூறவேண்டும்... அமெரிக்கா ஐக்கியமான நாடுகளுக்கு சாதகமாகத்தானே அந்தச் சபை பெருமளவு செயற்பட்டு வருகுது பாருங்கோ... தட்டிக்கேட்க சரியான ஆளில்லாட்டி எல்லாம் இப்படித்தான் நடக்கும் பாருங்கோ...

**செய்தி: புலிகளின் இடைக்கால அரசில் தமிழ்ச்சமூகம் இராணுவமயமாகுமாம். ஈ.பி.டி.பி, புளொட் ஜஸ்வந்த் சின்காவிடம் முறைப்பாடு.**

**மயிலர்:** ஏன் இதையும் அவை சின்காவிடம் சொல்லியிருக்கலாமே...அதாவது சிறிலங்காவின் முன்னாள் அரசில் தாங்கள் இராணுவமயமானது பற்றியும் தமிழ்மக்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டதையும் கூட சொல்லிப் பெருமைப்பட்டிருக்கலாம் தானே...அவையின்ரை காலத்திலை தமிழ்ப்பிரதேசங்கள் இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களாக இருந்ததையும் கூட கூறியிருக்கலாமே... நடந்ததைச் சொல்லக் கூச்சம் ஆனால் நடக்காததை சொல்லிறத்திலை பொச்சமே தீராது பாருங்கோ..

**செய்தி. ரத்வத்தை - அவரின் பிள்ளைகள் மீது மொத்தம் 75 குற்றச்சாட்டுகள்.**


**மயிலர்:** ஒரு வழக்கிலேயே இவ்வளவு குற்றச்சாட்டுகள் என்றால் உள்ள வழக்குகள் எல்லாம் ஒழுங்காக விசாரிக்கப் பட்டால் எத்தனை குற்றச் சாட்டுகள் வருமோ... சந்திரிகாவுக்கே வெளிச்சம் ரத்வத்தை ரத்தவத்தையில் தான் பாதுகாப்பு பதவி பயணத்தை செய்திருக்கிறார் பாருங்கோ...

# தூரனின் பார்வையில்...

சனாதிபதியின் ஆலோசகராக அவரது சகோதரர் அநுரா பண்டாரநாயக்கவை சனாதிபதியே நியமனம் செய்துள்ளார்.

சனாதிபதியைப் பொறுத்த வரைக்கும் இது ஒரு பாதுகாப்பான நடவடிக்கையாக இருக்கலாம். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரையில் இது ஒரு அபத்தமான நடவடிக்கையாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏற்கனவே அடுத்த சனாதிபதி



பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட பிரச்சினைகளுள் இதுவும் முக்கியமானதாகவே உள்ளது.

கட்சிக்குள் - அதுவும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் அநுராவுக்கு சனாதிபதியின் தம்பி என்ற வகையில் ஒரு மரியாதை உண்டு... ஆனால் செல்வாக்கில்லை... நம்பிக்கையில்லை. கடந்த காலங்களில் அவர் ஐ.தே கட்சியிடன் சேர்ந்து கொண்டு தனது பரம்பரை உரித்தாக இருக்கவேண்டிய கட்சியையும், தந்தை-தாயார் காலத்திலிருந்தே கட்சியை கட்டி வளர்த்த சிரேஷ்ட தலைவர்களையும், தன் சொந்தத் தமக்கையான சந்திரிகாவையும் எப்படியெல்லாம் கிண்டல் செய்தார் என்பதை சந்திரிகா மறந்து மன்னித்து

-தனது பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படின் ரணிலின் கழுத்தை தாக்குவேன் என்றார்.

-நினைத்தால் அமைச்சர்களை பதவி நீக்குவேன் என்றார்.

-எந்த நடவடிக்கையாலும் தன்னை அசைக்க முடியாது என்றார்.

இவைகள் ஒரு பண்பாடுமிக்க சனாதிபதியின் வார்த்தைகளாக இல்லை தமிழ்மக்களை மிரட்டி அச்சுறுத்தி அவர்களைப்பீதியுற வைத்த அரசியல் பாரம்பரியத்தில் வந்த ஒருவரின் குரலாகவே இது தென்படுகின்றது.

இப்போது அவரது மிரட்டல் அவரது சமூகத்தவரையே நோக்கி விடுக்கப்படுகிறது. அவ்வளவுதான் சட்டியில் உள்ளது தானே அகப்பையில் வரும்.

தேர்தல்களில் பொ.ஜ முன்னணிக்கு கிடைத்த பலத்த அடியை மரண அடியாக மாற்றும் நன்கு திட்டமிட்ட செயற்பாடாகவே தெரிகிறது.

பொ.ஜ முன்னணிக்கு இப்போது முன்வைக்கக்கூடிய தேர்தல்கால பிரசார விடயமாக சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் தடைநீக்கத்திற்கு எதிரான, இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரான பேரினவாத கொள்கைகள் மட்டுமே கைவசம் உள்ளன. பொ.ஜ.முன்னணியில் புதிய கூட்டுக்கட்சியாக அரைகுறை நிலையில் இயங்கும் ஜே.வி.பிக்கும் தமிழர் விரோத அமைப்பான ஈ.பி.டி.பிக்கும் இருக்கும் கொள்கைகளாகவும் இவைதான்

## சந்திரிகா எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், ரணில் எதிர்கொள்ளவுள்ள சவால்களும்....

வேட்பாளர் யார் என்பது குறித்த சர்ச்சையில் கட்சி மெல்ல மெல்ல சிதறுண்டு போய்க்கொண்டிருக்கிறது. பாரம்பரியம்-பரம்பரை ஆட்சி உரிமை என்ற கோதாவில் தானே அடுத்த சனாதிபதி வேட்பாளர் என மார்தட்டி நிற்கும் அநுராவை எதிர்க்கட்சித் தலைவர் என்ற சிறிலங்காவின் மூன்றாவது முக்கியத்துவம் மிக்க பதவிக் கதிரையிலிருந்து ரட்ணசிறி விக்கிரமநாயக்க என்ற பெரும் தடையைத் தள்ளிவிட்டு அமர்ந்திருக்கும் மகிந்தராஜபக்ஷ கட்சியில் சனாதிபதிக்கு அடுத்த நிலையில் தானே இருப்பதால் முறைப்படி தானே அடுத்த சனாதிபதி வேட்பாளர் என அறிக்கை விட்டு மிரட்டிக்கொண்டிருக்கிறார்.

சனாதிபதியின் நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி ஆளும் ரணிலையும் அவர் கட்சியினரையும் மிரட்டும் சந்திரிகாவினால் தனது சொந்தக்கட்சி தொடர்பான குழப்பங்களுள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வலுவற்றவராகவே உள்ளார்.

பரம்பரை ஆட்சியுரிமை அதிகாரத்தை (!?) கட்டிக்காக்க அநுராவை கட்சியின் தலைவராக்கி பின் சனாதிபதி வேட்பாளராக்குவதா அல்லது கட்சி சிதைவடையாமல் பாதுகாத்து மகிந்தராஜபக்ஷவை அங்கீகரித்து அவரை சனாதிபதி வேட்பாளராக்குவதா?
தம்பியை இழப்பதா?
கட்சியை பிளவுறச் செய்வதா?
சந்திரிகாவினை குழப்பி அச்சுறுத்தும்

விட்டாரென்றாலும், ஏனைய கட்சிமுன் சிரேஷ்ட உறுப்பினர்கள் மன்னிக்கவோ மறக்கவோ தயாராக இல்லை.

இந்த நிலையில் ரணிலின்-ஐ.தே.முன்னணி ஆட்சியினர் சந்திரிகாவை பன்முகப் பரிமாணங்களில் அம்பலப்படுத்தும் நடவடிக்கைகளை தீவிரமாக்கி மிகவும் நுட்பமாக அவர் மீதான மக்களின் நம்பிக்கையை சிதைக்கும் நகர்வுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் மீதான குறிப்பாக அந்தப்பிரிவின் இயக்குநரான நிஹால் கருணாரத்ன மீதான நடவடிக்கைகளால் ஆரம்பித்து ஆடம்பர வாகனக் கொள்வனவு மோசடிஎனத்தொடர்ந்து, பாதுகாப்பு கைப்பைக் கொள்வனவு செயற்பாடு எனத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சந்திரிகா மீதான குற்றச்சாட்டுக்கள் அவரை கிட்டத்தட்ட ஒரு மனநோயாளிக்குரிய புலம்பல் செயற்பாட்டுக்கே கொண்டுவந்து விட்டுள்ளன.

எதை எங்கே எப்படி பேசுவது என்ற நிதானமின்றி கோபமும் பீதியும், வெறுப்பும், சலிப்பும் எல்லாவற்றிற்கும் மேலாக குழப்பமும் மிகுந்த தொனியில் அவர்விடுக்கும் அறிக்கைகள், மிரட்டல்கள், மற்றும் அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் , அவரின் பலவீனமான இயலாத் தன்மையை பகிரங்கப் படுத்துவன வாக அமைந்து வருகின்றன.

-கட்சி மாறுவோரின் தோலையுரிப்பேன் என்றார்.

ஒரு பத்திரிகையுலக நண்பர் கூறியது போன்று ,
chandrika is playing her last innings with much tension and fear "anyway she is going to out."

அதாவது சந்திரிகா தனது கடைசி ஆட்டத்தை மிகவும் பதற்றத்துடனும் பயத்துடனும் ஆடிக்கொண்டிருக்கிறார். எப்படியும் அவர் அவுட்ட ாகத்தான் போகிறார் என்பதே அவர் கூறிய ஆங்கில வாக்கியத்தின் தமிழாக்கமாகும்.

அது இருக்கட்டும் இதுவரை காலமும் சகலவகையிலும் சந்திரிகாவின் ஆலோசகராக இருந்த கதிர்காமரின் கதிஎன்ன?

அவரின் பதவி குறைக்கப்பட்டுள்ளதா, அல்லது முழுமையாகவே பறிக்கப்படப்போகின்றதா?

□□□□

சிறிலங்காவில் மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை சந்திப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் மிகத்தீவிரமாக ஈடுபட்டுவருவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

சனாதிபதி மீதான குற்றச்சாட்டுகள் ஆளுங்கட்சியினரால் அடுக்கடுக்காக, அடுத்தடுத்து முன் வைக்கப்படும் வேகத்தையும் விதத்தையும் பார்த்தால் மக்கள் மத்தியில் சனாதிபதி குறித்தும் அவரது கட்சியினரின் கடந்த கால நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் பிரமிக்கத்தக்கவகையிலான ஊழல் மோசடிகள் குறித்தும் பெருமளவில் மக்கள்மத்தியில் வெளிக்கொணர்ந்து பிரசாரம் செய்வதன் மூலம் ஏற்கனவே கடந்த பொதுத்தேர்தலிலும் அதன் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சித்

இருக்கும்.

இந்நிலையில் ஒரு தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய அரசியல் கள நிலவரம் தவிர்க்கமுடியாத ஒன்றாக அமையவும் கூடும்.

சமாதான நகர்வுகளுக்கோ,அல்லது அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கோ மற்றும் ஐக்கியதேசியமுன்னணியின்

### கேள்விக்குறியாகிநிற்கும் சமாதான நகர்வுகளின் எதிர்காலம்

சுதந்திரமான செயற்பாட்டிற்கோ ரணிலின் அரசுக்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை பலம் தவிர்க்கமுடியாத தேவையாக உள்ளது.

இதே சமயம் முன்னணி அரசு சனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன் மூலம் ஜனாதிபதியை பதவியிலிருந்து நீக்கத் தேவையான மூன்றிலிரண்டுபங்கு பலத்தைப்பெற எதிர்க்கட்சியினரில் குறைந்தது இருபது பேரின் ஆதரவைப் பெறவேண்டியது அவசியமாகும். இது சாத்தியமாகும் போல் தெரிந்தாலும் கடைசி நேரத்தில் நடைபெறக்கூடிய குத்துக்கரணங்களை நம்பி ரணில் இதில் கால்வைக்கமாட்டார். ஆனால் இதற்கானதிரை மறைவு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருவதையும் நிராகரிக்கமுடியாது.

இதேவேளை ஆட்சிப்பொறுப்பேற்ற ஓராண்டின் பின்னர் ஏதாவது மொட்டைக் காரணங்களைக் காட்டியாவது ஆட்சியைக் கலைக்கும் தனது நிறைவேற்று அதிகார

வன்மையை சந்திரிகா புயன்படுத்துவார் என்பதில் ஐயமில்லை. சந்திரிகா தான் அப்படிச்செய்யப் போவதில்லை என்று கூறினாலும் கூட, அப்படிச் செய்யவேண்டிய அவசியத்திற்கான சூழல் இப்போதே அவருக்கு ஏற்பட்டுவிட்டது என்றே கூறவேண்டும்.



எனவே சனாதிபதி தனது அதிகாரபலத்தின் மூலம் ஆட்சியைக் கலைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்காது, அதற்கு முன்னர் தானே அரசைக் கலைத்துவிட்டு மீண்டும் சமாதானதிற்கான மூன்றிலிரண்டு பங்கு ஆதரவைக் கோரி, இந்த சமாதான சூழ்நிலை நிலவும்போதே, மக்கள் முன் செல்வதென்பது ரணிலுக்கு சாதகமான அம்சமாகவே அமையும்.

இதன் மூலம் சமாதானத்தை எட்டுவதற்கான தடைக்கல்லாக சந்திரிகா ஜே.வி.பி. கூட்டணி இயங்குகின்றது என்பதையே மக்கள் முன் ரணில் முன்வைப்பார்

சந்திரிகா தலைமையிலான அணி புலி-யானை கூட்டணி என்ற பேரினவாத கோஷ்டியைத்தான் பிரதானமாக மக்கள் முன்னர் ஒலிக்கச் செய்வர். ஆகவே இந்த தேர்தல் மூலோபாயம் ரணிலுக்கு சாதகமானால் சந்திரிகாவின் பொ.ஜ.முன்னணியின் இறுதி அத்தியாயம் எழுதப்பட்டதாகிவிடும்.

சந்திரிக்காவுக்கு சாதகமானால் மீண்டும் பழிவாங்கல் ஜனநாயக உத்திகளை தனது நிறைவேற்று அதிகாரப் பலத்துடன் பயன்படுத்தி ரணிலை அரசியலில் அநாமதேயமாக்க முயல்வார்.
எது நடக்கப் போகிறது?

அடுத்து வரும் சில வாரங்கள் ரணிலுக்குச்சிக்கலானவையாகவும், அவரை இனம் காட்டுவதாகவும், சமாதா னமுயற்சிகளுக்கு சவாலானதாகவும் அமையப் போகின்றன. ❑

# ஜுலையில் நடந்தேறிய ரணகளங்கள் இரண்டு



கடந்த வருடம் யூலை 25ஆம் திகதி கட்டு நாயக்க சர்வதேச விமான நிலை. யத்தில் நடந்தேறிய மிகப் பெரும் தாக்குதலின் ஒரு வருடம் பூர்த்தி யாகியுள்ளது. இதே வேளை 1983ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மீது கட்ட விழ்த்து விடப்பட்டவன்முறை பத்தொன்பதாவது ஆண்டும் பூர்த்தியாகின்றது.

சிறிலங்காவின் வரலாற்றில் 1983ஆம் ஆண்டு கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரத்தின் விளைவு சிறிலங்காவில் தமிழ்மக்களுக்கான நிரந்தர விடிவு ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் மூலம் மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும் என்பதை பறைசாற்றியது.

இதே வேளை கடந்த வருடம் கட்டுநாயக்காவில் நடந்தேறிய தாக்குதல் சிங்கள தேசம் சமாதானப் பேச்சுக்கள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணாத பட்சத்தில்சிறிலங்கா நிரந்தரமாகவே அழிவிற்குள், அமிழ்ந்து போய்விடுமென்பதை பறைசாற்றிற்று.

பதினெட்டு வருடங்களிற்கு முன்பு தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்களின் உயிர்களையும் சொத்துக்களையும் அழித்து அவர்களை ஏதிலிகளாக ஓட ஓட சிங்கள தேசம் விரட்டியது.

அன்று தமிழ்மக்கள் தமது பெரும் தேட்டங்களை இழந்து நின்றபோது தமிழ் மக்கள் மீது சிங்கள தேசம் போர்க்குரல் எழுப்பி நின்றது. இதனால் தமிழ்இளைஞர்களும் யுவதிகளும் வன்முறை சார்ந்த போராட்டத்தை தெரிவுசெய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அத்தோடு தமிழ் மக்களை நோக்கி சிங்கள தேசம் போரைத் தவிர வேறெந்த மாற்றுத் தீர்வையும் முன்வைக்கவில்லை.

ஆனால் கடந்த வருடம் கட்டுநாயக்கா சர்வதேச மற்றும் ஒருங்கிணைந்த விமானப்படைத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது ஒரு வித்தியாசமான இராணுவ அரசியல் நிலையை சிறிலங்காவில் தோற்றுவித்தது.

பெரும் இராணுவ வலயமாகவும் அதிமுக்கியத்துவம் மிக்க கேந்திர நிலையமாகவும் இருந்த இவ்விமானத்தளத்தின்மீது குறிவைத்த தாக்குதலாளர்கள் இராணுவ இழப்பு மற்றும் பொருளாதார இழப்பு என்ற வகையில் மிக நுட்பமாக தாக்குதலை நடத்தி வியப்பிற்குள்ளாக்கினார்கள்.

அங்கு தரித்து நிறுத்தப்பட்டிருந்த இராணுவ விமானங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மூலம் சிறிலங்கா வான்படையின் தாக்குதிறனை செயலிழக்க வைக்கும் அளவிற்கு மாற்றியிருந்தார்கள்.

அத்தோடு வடக்கு கிழக்குப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவத்திற்கு திகைப்பூட்டும் பெரும் சக்தியாக இருந்த வான்படை தான் சந்தித்த இழப்பின் மூலம் இராணுவத்தினர் மத்தியில் பெரும் உளவியல் மனச்சிதைவையும் தோற்றுவித்திருந்தது.மேலும் சிறிலங்காவில் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக எந்தப் பிரதேசமும் பாதுகாப்பாக இல்லை என்பதையும் சிறிலங்காப் படைத்தரப்பு எந்தவொரு பகுதியையும் பாதுகாக்கக்கூடிய நிலையில் இல்லை என்பதையும் தெளிவுற வெளிப்படுத்தியது.

இது இவ்வாறிருக்க சிறிலங்காவின் தலைவாசலாகவும் வருவாயின் வரவேற்பு மையமாகவும் திகழ்ந்த இவ்விமானத் தளத்தின் வாசலிலேயே பெரும் தீ மூண்டதனால் சிங்கள தேசத்தில் வருவாய்ச்சுரங்கம் யாவும் சுருங்கு நிலைக்கு மாறியது.

முதலீட்டாளர்களும் உல்லாசப் பயணிகளும் தலைதெறிக்க சிறிலங்காவைவிட்டு எவ்வளவு வேகமாக வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவாக வெளியேறினார்கள். அதுவரை பெரும் போர்

**சிறி.இந்திரகுமார்**

முழக்கம் கொட்டிய சிங்களத் தேசம் தவிர்க்க முடியாது சமாதான சமிக்ஞைகளை வெளிப்படுத்தத் தொடங்கியது.

இங்கேதான் 1983ஆம் ஆண்டு யூலை இனக்கலவரமும் 2001ஆம் ஆண்டு யூலை கட்டுநாயக்கா விமானத்தள தாக்குதலும் ஒற்றுமையாகி இரு வேறுபட்ட முடிவுகளைத் தோற்றுவித்தது.

அன்று தமிழ் மக்களிற்குச்சிங்கள தேசம் போர் என்றால் போர் என்ற ஒரே வழியைத் திறந்துவிட்டு தமிழ் மக்களைப் போரின் மூலம் வெல்லும் முயற்சியில் இறங்கியது.

ஆனால் சிங்களத் தேசம் எதிர்பார்த்ததற்கு மாறாக பதினேழு வருடங்கள் கடந்த நிலையில் 2001ஆம் ஆண்டு யூலை 25ஆம் திகதி உலக நாடெங்கணும் அலைந்து திரிந்து பேச்சுக்கான வாசலைத் தேடவைத்தது.

ஓயாத அலைகள் மூன்றோடு இராணுவ வல்லமையை இழந்து போயிருந்த சிங்களத் தேசம் நோர்வேயின் அனுசரணையோடு தொடங்கப்பட்ட சமாதான நடவடிக்கையினை மேலெழுந்த வகையில் நோக்கிக்கொண்டிருந்தது.

கட்டுநாயக்காவில் நடந்த தாக்குதலோடு அதற்கு ஏற்பட்ட பொருளாதார சீரழிவு என்பது இன்றுவரையான சமாதான முயற்சிக்கு அடிநாதமாக இருந்து வருகின்றது. இதனையே கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறிலங்காவின் பொருளாதார நிலைகுறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது கட்டுநாயக்கா தாக்குதலின் விளைவு குறித்தும் பேசினார்.

இவ்வாறு யூலை மாதம் நடந்தேறிய இவ்விரு தாக்குதல்களும் சிறிலங்காவின் வரலாற்றில் பெரும் பதிவை தமதாக்கிக் கொண்டது

அத்தோடு கட்டுநாயக்கா விமானத்தள தாக்குதலானது சிறிலங்காவின் வான் படைக்குத் தனது படைவலுவைப் பெருக்க விமானக் கொள்வனவிற்கான தேவையை அவசியமாக்கிய அதேவேளை கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களை பாதுகாக்க வேண்டிய நிலையையும் தோற்றுவித்தது. இது சிங்களத் தேசத்திற்கு முள்ளுக்குத்திய வலி பாதி முள்ளெடுத்த வலி மீதி என்கின்ற நிலையதைத் தோற்றுவித்திருந்தது. ●



## சிறுகதை




அலெக்ஸ் பரந்தாமன்

"மரியசீலி நீ இந்த ஊராக்களோடை தாட்சிக்கு நிண்டு சீட்டுப்பிடிக்காதை. உதாலை ஏதும் பிரச்சினை வருமெண்டால் நான் சும்மாயிருக்க மாட்டன்"

செபமாலை குடிசையின் தாழ்வார மண்திண்ணையில் அமர்ந்திருந்தவாறே கூறுகிறான் அவனது கைவிரல் இடுக்கினுள் குறைச் சுருட்டொன்று புகைந்து கொண்டிருந்தது.

"ஒரு நல்லகாரியம் தொடங்க முன்னமே இந்த மனிசன் நச்சு வார்த்தையைக் கொட்டிப் போட்டுது. இனி என்னெண்டு உருப்படுகிறது"

மரியசீலி குசினிக்கொட்டிலுக்குள்ளிருந்து மெலிதான குரலில் கூறிக்கொண்டது, வெளியே இருந்த செபமாலைக்குக் கேட்டுவிட்டது.

"என்னடி உனக்குள்ள புறுபுறுக்கிறாய்? சீட்டுப்பிடிக்கிறது சும்மா விளையாட்டல்ல. யாராவது சீட்டுக்காசை எடுத்துக் கொண்டு, இந்த ஊரைவிட்டு ஓடிப்போனால், நீ என்னடி செய் யப்போறாய்? இடம்பெயர்ந்து வந்த நிலையில், இந்த ஊர் சனத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் நீ உந்தக் காரி யத்திலை இறங்காதை"

செபமாலை அவளை மீண்டும் எச்சரிக்கும் தொனியில் கூறிவிட்டு, குறைச்சுருட்டைத் தூர வீசியெறிந்தான். பின்னர் எழுந்து தெருப்படலையைத் திறந்து கொண்டு தெருவிலே இறங்கி நடக்கத்தொடங்கினான்.

அவன் போவதை குசினிக் கொட்டிலிலுள்ள பனை மட்டை வரிச்சுகளின் இடுக்குகள் ஊடாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் மரியசீலி. அவள் மனம் இருப்புக்கொள்ளாத நிலையில், ஆத்திரத்தில் தகித்துக் கொண்டிருந்தது.

'மற்றதுகள் வாழ்க்கையிலை எப்படியெப்படியெல்லாம் நிமிர்ந்து முன்னுக்கு வருகுதுகள். எங்களுக்கத்தான் நெடுகிலும் பட்டினிப்பானையும், பழஞ் சோத்துத்தண்ணியும்...'

மன ஆற்றாமையின் நிமித்தம் அவள் தனக்குள் சினந்து கொள்கிறாள்.

மரியசீலிக்கு இடம்பெயர்ந்து வந்த நிலையிலும், ஊரிலே வசதியாக வாழ்ந்தது போன்று வாழ வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கியிருந்தது. இதன் நிமித்தம் அவள் பணத்தைத் தேடிக்கொள்வதற்கான வழி வகைகளைத் தேடினாள். ஆடுகள் வளர்த்தாள், கோழி கள் வளர்த்து அதன் இனத்தைப் பெருக்கி பணத்துக்கு விற்றுக் கொண்டாள்.

அவளிடம் பணம் சிறிது சேர்த்துக் கொள்ள மேலும், பணத்தைத் தேடுவதிலேயே அவளது மனம் நாட்டம் கொண்டது. இதன் நிமித்தம், செலவுகளையும் சிக்கனப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

"இஞ்சரப்பா! எப்பன் தேத் தண்ணி வாத்துத் தாவன் குடிப்பம்..."

மாலைநேரம்! செபமாலை வேலை முடிந்து வீடு வந்தபின், உடல் அனுப்பினால் ஏற்படும் சோர்வினைப் போக்க தன் மனைவியிடம் கேட்பான்.

"மணி இப்பதானே ஆறாகுது. இன்னும் கொஞ்ச நேரத்திலை சாப்பிடலாம்தானே. பிறகென்ன இப்ப தேத்தண்ணி? பேசாமல் இருங்கோ..."

ஏதோ கைவேலையில் மூழ்கியிருப்பது போன்ற பாவனையில், மரியசீலி அவனை நிமிர்ந்து பார்க்காது கூறுவாள். அவளின் செய்கையும் பேச்சும் செபமாலைக்கு மிகுந்த எரிச்சலைக் கொடுக்கும். வீணாக அவளோடு தர்க்கப்பட விரும்பாது திடீரென எழுந்து, படலையைத் திறந்து கொண்டு வெளியே சென்று விடுவான். கைச் செலவுக்கென, தான் ஒதுக்கிவைத்திருக்கும் பணத் தில்ஒரு சில ரூபாய்களை எடுத்துக் கொண்டு, சந்தியில் உள்ள தேநீர்க் கடைக்குச் செல்வான். தேநீரைக் குடித்து முடித்ததும், தன்னை அமைதிப்படுத்திக்கொண்டு, வாயிலே சுருட்டொன்றைப் புகைத்தபடி வீடு வந்து சேருவான்.

'எனது பிள்ளைகள் நல்ல தொரு இடத்திலை வாழ்க்கைப்பட்டு, எந்த வித பிரச்சினைகளும் இல்லாது வாழ்கின்ற இந்த நேரத்தில, இவள் எதற் காக பணம், பொருள் பண்டமென்று பேராசைப்படுகிறாள். பேராசை பெரும் தரித்திரமென் பதை இவள் அறியவில்லையா? நான் கொடுக்கின்ற மூவாயிரம் ரூபா காசைக்கொண்டு குடும்பத்தை வழி நடாத்தத் தெரியவில்லையா? இப்போது தாட் சிக்கு நிண்டு சீட்டு வேறு பிடிக்க ஆரம்பித்துவிட்டாளே. இது எங்கை போய் முடியப் போகுதோ? ஆண்டவரே!

மரியசிலீயின் போக்குக் குறித்து செபமாலை தனக் குள்ளே பயப்படவும், கவலைப் படவும் தொடங்கினான்.

□□

ஆகாயத்தில் மேகங்களின் ஆக்கிரமிப்பு இல்லாததினால் ஆனந்தமாக உலாப்போய்க் கொண் டிருந்தது வானத்து வெண்ணிலவு. அதன் வெண்கல ஒளி பூமியைத் தழுவி முத்தமிட்டுக் கொண்டிருக்க, தூரத்தே நாயொன்று காரணம் புரியாது ஊளையிட்டுக் கொண் டிருந்தது.

மாயசீலிக்கு இன்னும் உறக்கம் வரவில்லை. படுக்கை யில் புரண்டு கொண் டிருந் தாள். அவளது சிநதனைகள் உள்ளத் தில் பரந்து விரிந்து கொண்டிருந்தன. வீட்டு அறையி னுள் பூட்டப்பட்ட நிலையில் இருக்கும் சூட்கேஸ் பெட்டிக்குள் பதினைந்தாயிரம் ரூபா அவள் மனக்கண்ணில் நின்று கொண்டு எண்ணங்களை மேலும் கற்பனைகளாக விரிவடையச் செய்து கொண்டிருந்தன.

செபமாலையின் அறிவுரைகளையும் மீறி அவள் சீட்டுப்பிடிக்க ஆரம்பித்திருந்தாள் அதன் நிமித்தம் தானே தாட்சியாக நின்றதில் தாட்சிக்காசு ரூபா பதினைந்தாயிரம் அவளின் கைகளிலே சேர்ந்திருந்தது. பெரும் முதலீடாகச் சேர்ந்து விட்ட அந்தப்பணத்தைக் கொண்டு, அதன் மூலம் மேலும் எப்படிப் பொருள் தேடலாம்? எந்த விதமாகப் பணம் சம்பாதிக்கலாம்..? என்ற சிந்தனையிலேயே அவளின் அன்றைய இராப்பொழுது கழிந்து கொண்டிருந்தது.

இந் நிலையில்-

ஆறு மாதங்கள் வரை எந்தவித பிரச்சினைகளும் இல்லாது சீட்டில் ஏலம் கூறும் நிகழ்வுகள் கழிந்து விட்டன.

கிடைத்த தாட்சிக்காசில ஒரு பகுதியை யாரிடமோ வட்டிக்குக் கொடுத்திருந்தாள் மரியசீலி. அதற்கு அத்தாட்சியாக நம்பிக்கையின் நிமித்தம் வாங்கப்பட்ட ஒரு தங்கச்சங்கிலியும், இரண்டு சோடி காப்பும் அவளது கழுத்தினையும்,கைகளையும் அலங்கரித்துக் கொண்டிருந்தன.

செபமாலையோ இதைக் கண்டும் காணாதவன் போல இருந்தான்.'குடும்பத்திற்கு எந்தவித அபகீர்த்தியும் ஏற்படாத வகையில் நடந்து கொண்டால் சரி' என்ற எண்ணத்தோடு அவன் ஒதுங்கியிருந்தான்.

□□

பொழுது மதிய வேளையாகியிருந்தது.சூரியனின் சுடர்களால் நிலம் தகித்துக்கொண்டிருந்த நிலையில் வீசும் காற்றுக்கூட அனலாய் இருந்த அவ்வேளையில், செபமாலையின் வீட்டு முற்றத்தில் இருந்து அந்தக்குரல் கேட்டது.

"மரியசீலி... மரியசீலி..."

"ஆரது...?"

மரியசீலி குடிசைக்குள்ளிருந்து வெளியே முற்றத்துக்கு வந்தாள்.

"என்ன மரியசீலி, பத்தாம் திகதி தாற சீட்டுக்காசு இண்டைக்கு பதினைந்தாச்சு இன்னும் ஏன் தரேல்லை.?'

ஏலத்தில் சீட்டுக்கூறி, தனக்கெனச் சீட்டை எடுத்தவள், கழிவுக்காசு போக, மிகுதித் தொகையை வாங்கிக்கொண்டு செல்வதற்காக வந்து நின்றாள்.

"நான் என்னக்கா செய்யுறது? சீட்டுக்காரர் இன்னும் தருகினமில்லை."

மரியசீலி அவளுக்கு முன்பாக ஒருவாறு சமாளிக்க முனைந்தார்.

சீட்டு எடுத்தவளோ அவளை விடுவதாக இல்லை காரசாரமாக வாயில் வந்தபடி ஏசத் தொடங்கினாள்.

"சீட்டுக்காசுகளை வாங்கிச் செலவழிச்சுப்போட்டு, எனக்கிப்ப தவணை சொல்லுறியே இண்டைக்குப் பின்னேரம் எப்படியும் காசைத்தந்து போட வேணும் இல்லாட்டி நடக்கிறதே வேறை..." வந்தவள் கூறிவிட்டுத் திரும்புகையில் எதிரே கோபத்தில் கண்கள்சிவந்த நிலையில் செபமாலை நிற்பதைக் கண்டாள்.

□□

சாப்பாட்டுக் கோப்பையில் தீட்டுப்பச்சை அரிசிச்சோற்றுக்கு திருக்கைமீன் கறியும், பசளிக்கீரையும் பரிமாறப்பட்டிருந்தன. பக்கத்தில் சில்வர் செம்பில் தண்ணீர் நிறைந்திருந்தது.

திருக்கைமீன் கறி செபமாலைக்கு நன்கு பிடித்த உணவாக இருந்தபோதிலும் இன்று அவனால் நிதானமாகச் சாப்பிடமுடியவில்லை. அடிக்கடி விக்கல் எடுக்கத்தொடங்கியது. பக்கத்திலே கிடந்த தண்ணீரை எடுத்துக் குடிக்க விருப்பமில்லாதவனாக அவன் சோற்றை வில்லங்கமாக விழுங்கிக் கொண்டிருந்தான். பின்பு,அவளோடு எதுவும் கூறாது,திரும்பவும் வேலைக்குச் சென்று விட்டான்.

அவனது மௌனமும், ஒதுங்கி நிற்கும் தன்மையும் மரியசீலியைச் சித்திரவதை செய்யத் தொடங்கின. செபமாலையின் புறக்கணிப்பைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில்,அவள் இப்போது அழத்தொடங்கினாள் தனக்குள்ளே.

குசினிக் கொட்டிலுக்குள் அடுப்புக்கு முன்னால் குந்திக்கொண்டிருந்தபடி... எரியும் தீச்சுவாலையை வெறிக்கப்பார்த்துக் கொண்டிருந்தவளின் முகம் இருண்டு போய்க்கிடந்தது. இப்போது சிரிக்கவும் முடியாமல் அழவும் முடியாமல் இரண்டும் கெட்ட மன நிலைக்குள் ஆட்பட்டவளாக அவலப்பட்டுக்கொண்டிருந்தாள்.

கடந்து போன இரு மாதத்திலும் ஏலம்கூறி சீட்டு எடுத்தவர்கள், காசை வாங்கிக் கொண்டு திடீரெனத்தலை மறைவாகியதும், மரியசீலிக்கு மரண அடி விழுந்தது போலாகி விட்டது. இந்நிலையில், அடுத்து வரும் மாதங்களில் ஏலம் கூறி சீட்டு எடுப்பவர்களுக்குரிய பணத்தை எங்கே தேடுவது? யாரிடம் கைமாத்தாக வாங்குவது? என்ற சிந்தனை அவளது உள்ளத்தில் தோன்றிய போது,ஏதோ அடி வயிற்றுக்குள் பிசைந்தெடுப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது அவளுக்கு.

'ஐயோ! நம்பிக்கெட்டுப்போனனே...?

மரியசீலி அடிக்கடி தனக்குள்ளே அரற்றிக்கொள்ளத் தொடங்கினாள். ஆரம்பத்தில் கணவரின் அறிவுரைகளைப் புறக்கணித்ததன் விளைவை இப்போது நினைத்துப்பார்க்கிறாள்.

தொடர்ந்து, தனது கணவரும், தன் குடும்பமும் இந்தச்சீட்டுப் பிரச்சனையால் அவமானம் படக் கூடாது என்ற முடிவுக்கு வந்த அவள், தீர்க்கமாக ஒரு முடிவை எடுத்தாள்.

அந்த முடிவு...?

மாலைக்கருக்கலுக்குள் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். மேய்ச்சல் மாடுகள் தம்பணி முடித்து தெருவழியே திரும்பிக்கொண்டிருந்தன. அவைகளைப் போலவே அன்றாட ஜீவனோபாயத்துக்காக இயங்கிய மனிதர்களும் தங்கள் இவ்விடம் நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களுள் செபமாலையும் ஒருவனாக தனது வீடுநோக்கித் திரும்பிக்கொண்டிருந்தான்.மதியம் வீட்டுக்குச் சாப்பிடச் சென்ற போது சீட்டு எடுத்தவள்,குடிசையின் முற்றத்தில் நின்று பேசிய பேச்சுக்கள் அவன் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

'பாவம் அவள்.என்னை நம்பி இருக்கிறாள். ஏதோ ஆசைப்பட்டு சீட்டுப்பிடிக்கத் தொடங்கி, இப்படி நம்பிக்கெட்டுப் போனாள். இந்த நிலையில் நானும் அவளை வெறுத்து ஒதுக்கினால்...? பாவம் அவள்.'

செபமாலைக்கு கண்கள் கலங்கிவிட்டன. அவன் வேலியோரப்படலையைத்திறந்து கொண்டு உள்ளே சென்ற போது...

வீட்டுக்குள் மரியசீலி தற்கொலை செய்வதற்காக சேலை ஒன்றை குடிசையின் முகட்டு வளையில் கட்டி விட்டு,தூக்குப்போட்டு இறக்கும் முயற்சியில் ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள்.

அவ்வளவுதான்!

செபமாலை ஓடிப்போய் அவள் கன்னத்தில் அறைந்தான்.

அந்த நேரத்தில் தன் கணவனை எதிர் பாராமல் கண்டதில் வெலவெலத்துப் போன மரியசீலி,செபமாலையின் கால்களை கட்டிக்கொண்டு கதறத் தொடங்கினாள். "என்னாலை இனியும் தாங்கேலாது. அந்த நேரம் உங்கடைபேச்சைக் கேட்காமல் நடந்ததாலை இப்ப நான் படுகிற அவமானம் போதும்..."

வாயைமூடடி அக்கம்பக்கத்துச் சனமெல்லாம் ஓடி வரப்போகுது. இப்ப நீ தூக்குப்போட்டுச் செத்தால் சீட்டு பிரச்சனை தீர்ந்திடுமா? எனக்கு இன்னும் எவ்வளவு சிலவு சித்தானம் தெரியுமா? மன ஓர்மம் இல்லாத நீ ஏன் சீட்டுப்பிடிக்க வெளிக்கிட்டனி. உன்னை புரிஞ்சிகொண்டவன் என்றபடியால் தான் ஆரம்பத்திலை சீட்டுப்பிடிக்க வேண்டாமென்று சொன்னனான் கேட்டியா...?'

அவனும் அழத்தொடங்கினான்,

"இப்ப என்னப்பா செய்கிறது...?

மரியசீலி அழுதாள்.

இந்தா இதிலை பத்தாயிரம் ரூபா காசு கிடக்குது. நான் இதுவரை சேர்த்து வைச்ச காசு பிறகு காணாட்டி வேலை செய்கிற இடத்திலை கடன் எடுத்துத்தாறன். நீ அழாதை"


செபமாலை அவளின் கண்ணீரை ஆதரவாகத் துடைத்தபடி... தனது பொக்கெற்றுக்குள் இருந்த காசை எடுத்துக் கொடுத்தான்.

ஒருகணம் திகைத்துப்போனாள் மரியசிலீ "உனக்குத்தெரியாமல் நான் வேலை செய்யத் தொடங்கின காலத்தில இருந்து மிச்சம் பிடித்து சேர்த்தபணம்."


மரியசீலியால் அதை நம்ப முடியவில்லை.

மனதுள் கிடந்து உறுத்திய உவத்திரவப்படுத்திய சோகங்கள் துன்பங்கள் யாவும் ஒரு வினாடி விடுபட்டுப் போன நிலையில்... நடுங்கும் கரங்களினால் அப்பணத்தை வாங்கி,தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள் அவள். நீண்ட நாட்களுக்குப் பிறகு, அக்குடிசையில் குப்பிவிளக்கொன்று நன்கு பிரகாசத்துடன் சுடர்விட்டு எரியத் தொடங்கியது.

# நூல் நோக்கு



நூலின் பெயர்:-
அணிதிரளும் சிறு அலைகள்
எழுதியவர்:- தேவி பரமலிங்கம்
வெளியீடு:-
யாழ்மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்
30,நவீன சந்தை மேல் மாடி,
யாழ்ப்பாணம்
பக்கங்கள்:- 96
விலை ரூபா:- 110




ஒடுக்கு முறைகளின் வேர்களை அறுத்து தம்மீது நிகழ்த்தப்படும் உழைப்புச்சுரண்டலை ஓரளவேனும் குறைக்க முயன்ற மீனவத் தொழிலாளிகளை, அவர்களின் போராட்ட முறைகளை இந்நாவல் விளக்க முனைகிறது. சாதிய ஒடுக்குமுறை தலைவிரித்தாடிய ஒரு காலக்கட்டத்தில் ஒரு குறித்த சாதியக் கூட்டமைப்புக்குள்ளேயே நிகழ்த்தப்பட்ட மிக மோசமான உழைப்புச்சுரண்டலுக்கு எதிரான போராட்டமொன்றையும் அதற்கான வழி காட்டுதலை ·இன்னொரு சாதியக் கட்டமைப்பச் சேர்ந்த நாவிதத் தொழிலாளி வழக்குவதுமான இந்த நாவல் யாழ்ப்பாணச் சமூகத்தின் இறுக்கங்களை வெளிச்சமிடும் ஒரு வரலாற்று ஆவணமாகவும் அமைகிறது.

இந்த நாவலின் நிகழ்காலம் என்பது இன்றைக்கு ஏறக்குறைய முப்பது ஆண்டுகட்கு முன்னாக அமைகிறது என்பதுடன் இன்றைய பொருண்மியக் கட்டமைப்பில் நின்று பாரிய வேறுபாட்டுடனான பொருண்மிய கட்டமைப்பு அப்போது காணப்பட்டது. அன்றைய காலக் பொருண்மியக் கட்டமைப்பைப் பற்றிய புரிதல் இன்றி ஒரு வாசகனால் இந்நாவலை இன்று புரிந்து கொள்ள முடியுமா எனும் கேள்வி எழுகிறது.

மனித நேசம் மிக்க படைப்பாளியான இந் நாவலாசிரியர் முற்போக்குத்தடத்தில் தனது சிந்தனையை நெறிப்படுத்தியுள்ளார். இந்த வகையில் இன்றைய காலகட்டத்திலும் அவருடைய கருத்துக்கள் வலுவுடையனவாக இருக்கின்றன.

ச்சா.... அதுதான் கூடாது. இப்படியான ஒரு போராட்டத்தை நாங்க நடத்த எத்தனிக்கும் போது எதிராளி எங்களை அந்தப் போராட்டத்தில் ஈடுபட முடியாதளவுக்கு பலவீனப் படுத்துவதிலேயே கண்ணாய் இருப்பான். அந்த வழிகளில் ஒன்றுதான் இதுவும் பயந்தாங் கொள்ளிகளால் போராட்டத்தை தொடர்ந்து நடத்த முடியாமல் போய்விடும் நீங்கள் பயந்தாங்கொள்ளிகளாகக் கூடாது.இனித்தான் நீங்கள் மும்முரமாக உங்களால் போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு போராட்டங்கள் எல்லாவற்றிலும் ஒத்த தன்மையும் அவை ஒடுக்கப்படும் முறைகளிலும் ஒத்த தன்மையும் காணப்படுவதை இந்நாவல் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. கணந்தோறும் பிரபஞ்சம் மாறிக்கொண்டேயிருக்கும் இந்த இயக்கத்தினூடேயும் சில பொதுமைகள் மனித வரலாற்றுக்கு எப்போதும் இருக்கும்.இவற்றில் இருந்தே மனித வாழ்வுக்கான தத்துவம்,விடுதலைக்கான போராட்டம்,அதற்கான வரலாறு என்பன ஊற்றெடுக்கும். இந்த வகையில் தெளிவானதும், சரியானதுமான ஒரு தத்துவார்த்த தளத்தை இந்நாவல் கொண்டிருக்கிறது.

தமது உழைப்பில் நீதியான பங்கு தமக்கு வேண்டும் என நடத்தப்பட்ட போராட்டத்தில் அதன் விளைவாக தனது குழந்தை இறந்து போய்விட்ட பின்பும், அந்த குழந்தையின் உடல் வீட்டில் இருக்கும் போதே போராட்டத்தில் இணைந்து கொண்டதால் பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படும் நிலைமை,அதன் உறுதி இந்த நாவலின் பலமாக அமைகிறது.

எனினும் கதையின் நிகழ்காலமான மீனவக்கிராமம், கணபதியின் சிகை ஒப்பனை நிலையம், என்பன நிகழ்காலத்துடன் பரீச்சயமற்ற ஒரு வாசகனால் புரிந்துகொள்ளக் கூடியதாக விபரிப்பு, படிம எழுச்சி மனங்களில் ஏற்படுத்தவில்லை. நாவல் புனைகதைகளில் இவ்விடயம் முக்கிய இடத்தைப் பெறும். அது மட்டுமல்ல கதையின் போக்கு பாத்திரங்கள் மூலம் அவர்களுடைய பேச்சுக்கள், நடத்தைகள் மூலம் நாவலின் போக்கு அதன் கருத்துக்கள் உணர்த்தப்பட்டிருக்க வேண்டும். இவ்விடயம் மிகப் பலவீனமாகவே இந்நாவலில் உணரப்படுகிறது. கதை சொல்லியின் விவரணம் மூலம் நாவல் நகர்த்தப்பட்டிருத்தல் தவிர்க்கப்பட்டிருந்தால் இந் நாவல் சிறப்பாக அமைந்திருக்கும்.

மீன்வாடியின் நாளாந்த செயற்பாடு மூவாயிரம் ரூபாவிற்கு மீன்விற்றல் எழுபத்தைந்து ரூபா மட்டுமே கூலியாக ப் பெறும் தொழிலாளியின் வாழ்கைச் சூழல், தொழிலாளி வாழ்வதற்காகவே தாம் கஸ்ரப்படுவதாக தம்பட்டம் அடிக்கும் சம்மாட்டிகள், தொழிலாளியின் உழைப்பில் சுரண்டிய முதலில் இருந்தே தொழிலாளிக்கு கடன் கொடுத்து அவனுடைய சிறு துண்டு நிலத்தையும் அபகரிக்கும் நயவஞ்சகம், சிறு தொழில் செய்யும் தொழிலாளிகளுக் கிடையேயான வலை களவெடுத்தல், கள்ளப்பட்டிருத்தல், உடல் நெளித்து, கைதட்டி, அபிநயத்து, வசைபாடித்தீர்க்கும் மீனவப் பெண்களின் சண்டைகள், தரையில் மனிதர்களோடு மட்டுமல்ல, கடலில் இயற்கையோடும் போராடும் மீனவர்களின் வாழ்வு, இயற்கையின் சீற்றங்களில் சிக்கிக்கொள்ளும் போது அவர்கள் அனுபவிக்கும் அவலங்கள் என பல சம்பவங்கள் நுட்பமாகவும் அழகியல் உணர்வோடும், அர்த்தச் செறிவோடும் விபரிக்கப்பட்டிருக்குமா்யின் இந் நாவல் தமிழில் சிறந்த நாவல்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கும் என எண்ணத் தோன்றுகிறது.

நாவல்கள் நமக்குள் ஒரு விரிவான பார்வையை ஏற்படுத்த வேண்டும். சிக்கல்களின் முரண்களை சரியாகவும், தெளிவாகவும் கையாளுதல் என்பது மட்டுமல்ல, படைப்பின் வடிவம் சிறப்பான உத்திகள் என்பவற்றோடு அழகான, கவித்துவமான மொழிநடையும் அவசியமாகிறது. ○

## மாத்திரைக் கதைகள் - மூன்று

உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தன்



### சூடு

இரவு.

புற்றில் இருந்து வெளியே வந்த ஈசல்-வெளிச்சத்தைத் தன் உடலில் தூக்கிப் பறந்த மின்மினியைப் பார்த்தது.

அதன் அழகைப் புற்றீசலால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''மின்மினியைப்போல் வெளிச்சத்தைத் தூக்கிப் பறக்க என்னாலும் முடியும்...' என்று கூறிக்கொண்டே குடிசையில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கின் வெளிச்சத்தைத் தூக்கப் போனது புற்றீசல்.

பாவம்.

ஒரு நொடியில் அது எரிந்து கருகிப் போனது. குப்பி விளக்கு சொன்னது:-'பொறாமை எரிந்து போகும் புற்றீசல் கரிந்து போகும்.




### சக்கை

எலும்பும் தோலுமாய்க் கிழட்டுப் பசு ஒதுக்குப் புறத்தில் கவனிப்பாரற்றுப் படுத்திருந்ததை வெள்ளாடு கவலையோடு நோக்கியது.

பசுவைப் பார்த்து, 'முன்பெல்லாம் உன்னை வீட்டுக்காரன் நாள் தவறாமல் குளிப்பாட்டுவானே- புல்லும் வைக்கோலும் போட்டுத் தடவிக் கொடுப்பானே-இப்போது திரும்பிக் கூடப் பார்ப்பதில்லையே-ஏன் ?' என்று கேட்டது ஆடு.

பசு பெருமூச்சு விட்டது.

'பயனில்லை-அதனால் பார்ப்பதில்லை' என்றது பசு.சுருக்கமாக அது சொன்னது:-மடியில் பாலும் இல்லை மதிக்க ஆளும் இல்லை.



### பணிவு

மண்ணை நோக்கிக் குனிந்திருந்தது தெருவிளக்கு.

இந்தத் தெரு விளக்கு கோழையாய்க் கைகட்டிக் குனிந்து நிற்பதைப் பார்த்தால் வெட்கமாக இல்லையா? என்றது காக்கை.

நீண்ட காலமாகத் தெருவின் ஓரத்திலேயே நின்ற தென்னை நெருப்பானது.

கூர்ந்து கவனி தெருவில் ஒளியைப் பாய்ச்சி- தொண்டாற்றிக் கொண்டே- பெருமையால் தலை வீங்கிப் போகாமல் அடக்கத்தோடு நிற்கிறது தெருவிளக்கு. என்றது தென்னை.

மீண்டும் புரிகிறதா என்று காக்கையைப் பார்த்து அது கேட்டது.

பிறகு சொன்னது:-
பணிவு வேறு.
குனிவு வேறு.



## உன்னிடம் இருப்பதெல்லாம் பசி மட்டுமே...

- சேகுவேரா -

அவ்வளவுதான் மரியா, அன்பு மூதாட்டியே!
உன் வாழ்வு இடைவிடாத
மெலிவுற்ற துன்பங்களை கொண்டிருந்தது.,
நீ நேசித்த ஒரு மனிதனில்லாமல்
ஆரோக்கியமும் சந்தோசமுமில்லாமல்
பகிர்ந்துகொள்வதற்கு
உன்னிடமிருந்ததெல்லாம் பசிமட்டுமே.

உன் வாழ்வு துயரமானது
மரியா, அன்பு மூதாட்டியே!
நிலையான ஓய்வின் சமீபம்
உன் கண்மணிகளின் வலியை மூடும் போது
ஓய்வில்லாமல் துடைத்துக் கழுவிய
உன் கைகள்
கபடமற்ற வருடலைக் கடைசியாக
உணரும் போது
நீ அவர்களை நினைப்பாய்,
புலம்புவாய்.

பரிதாபமான மரியா, என் அன்பு
மூதாட்டியே,
வேண்டாம்
அதைச் செய்யவே செய்யாதே!
உன் வாழ்நாள் முழுவதும்
உன் நம்பிக்கைக்குப் பொய்யுரைத்த
அந்தச் சோம்பேறிக் கடவுளை
வழிபடாதே.
சாவின் கருணையை நீ வேண்டாதே
உன் வாழ்வு கொடூரமான பசியால்
போர்த்தப்பட்டிருந்தது.
ஆஸ்த்மா போர்த்திய முடிவாகிறது.

ஆனால் நான் உனக்குச் சொல்ல
விரும்புகிறேன்.
பணிவும், வீரமுமுள்ள ஒரு நம்பிக்கையின்
குரலில்
மிக அதிகமான சிவப்பும் வீரமுள்ள
பழிவாங்குதல்பற்றி–


என் இலட்சியங்களின் சரியான
பரிமாணங்களின்படி
நான் சத்தியமாகச் சொல்கிறேன்.

ஒரு குழந்தையின் கையைப் போன்ற
இந்த மனிதனின் கையை
சலவைக் கட்டி தளர்ச்சியுறவைத்த
உன் கைகளால் பற்றிக் கொள்.

அமைதியாக ஓய்வுகொள்.
மரியா,
அன்பு மூதாட்டியே!
அமைதியாக ஓய்வுகொள்.
நீ அதிகமாகப் போராடிவிட்டாய்.
உன் எல்லாப் பேரப்பிள்ளைகளும்
இந்த விடியலைக் கண்டு வாழ்வார்கள்.

இதை நான்
சத்தியமாய்ச் சொல்கிறேன்.

## அழகு



இரவு
என் மேசையில் இருந்து விரிந்த
விளக்கொளியில்
என் கண்களுக்குத் தெரிகிறது
சுவரில்
வழி தவறிவந்து
விடியும் வரை
அடைக்கலம் நாடுகின்ற
வண்ணத்துப் பூச்சி
அது அழகாய் இருந்தது.

இன்னும் சுவரில்
வாலை வளைத்தபடி
ஒட்டி இருக்கும்
ஒரு பல்லியும் தெரிகிறது
அது அழகாய் இருந்தது.

பல்லி
வண்ணத்துப் பூச்சியை நோக்கி
அசைந்து அசைந்து செல்கிறது
அதுவும் மிகவும் அழகாய் இருந்தது.

ஓ!
வண்ணத்துப் பூச்சி
பல்லியின் வாய்க்குள்
துடிக்க துடிக்க
ஓ!
என் கண்கள்
அழகானதே இல்லை இல்லையே !

- பொன். காந்தன்

## வரிவிளம்பரம்

### இடமாற்றம் L.K.S

இதுவரை காலமும் துணுக்காயில் இயங்கிவந்த L.K.S. மெடிக்கல் சென்ரர் மீசாலையில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக இயங்குகிறது என்பதனை அறியத்தருகின்றோம்.


(1792)

### விற்பனைக்குண்டு

எம்மிடம் 5நூல் 1/2 இஞ்சி, முறுக்குகம்பிகள், முறுக்கு அல்லாத கம்பிகள் 20அடி நீளத்திலும் துண்டுகளாகவும் அத்துடன் இசுசு லொறி (26ஸ்ரீ4882) விற்பனைக்குண்டு தொடர்புகொள்ள வெற்றியள் இரும்பகம், 2ம் கட்டை, முரசுமோட்டை.

(2096)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



மலர்வு 05 - 05 - 1942

உதிர்வு 06 - 08 - 2001

திதி– 26–07–2002

### அமரர் சின்னக்குட்டி தியாகராசா (தியாகு)

(பிரபல அரசாங்க ஒப்பந்தகாரரும் கர்ணன் வாணிப உரிமையாளரும்)

மல்லாவி கண்டதொரு- அன்பன்- இங்கு
மக்களின் மனம் பிடித்த நண்பன்-
சொல்லும் செயலுமிரு திறன்கள்- எமைச்
சேர்த்து அணைத்திடுமே கரங்கள்
அல்லும் பகலும் அவர் உழைப்பு- பல
ஆக்கம் புரிந்து வந்த களைப்பு
நெல்லில் உமி நீக்கல் போல- அவர்
உயிர் நீங்க உடல் தீயில் போச்சே.

இல-330,
பாரதிநகர்,
யோகபுரம்.

இவ்வண்ணம்.
(குடும்பத்தினர்)

(2097)

## புதிய பேருந்துப்பணி

### மல்லாவி - முகமாலை

ஒவ்வொருவெள்ளியில் மல்லாவியில் இருந்தும் திங்களில் முகமாலையில் இருந்தும் அரச பணியாளரின் நலன்கருதி இப்பேருந்துப்பணி 26-07-2002 வெள்ளி தொடக்கம் நடைபெறும்.

தெருவிரிப்பு:
மல்லாவியிலிருந்து தொடங்கி துணுக்காய், வேட்டையடைப்புச்சந்தி, உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், அம்பலப்பெருமாள் சந்தி ஊடாக கந்தபுரம் அடைந்து, அங்கிருந்து கோணாவில் வீதியால் யூனியன்குளம், கோணாவில், முறிப்பு, சேவியர்கடைச் சந்தி, கிளிநொச்சி அடைந்து அங்கிருந்து யாழ். வீதியால் பரந்தன், உமையாள்புரம், இயக்கச்சி ஊடாக முகமாலை சென்றடையும்.

மல்லாவியில் இருந்து நேர விரிப்பு (ஒவ்வொரு வெள்ளியிலும்)

| | | |
|---|---|---|
| மல்லாவி | பகல் | 1-00 |
| துணுக்காய் | 1-10 | 1-10 |
| அம்பலப்பெருமாள்சந்தி | 2-10 | 2-10 |
| கந்தபுரம் | 2-25 | 2-25 |
| கோணாவில் | 2-55 | 2-55 |
| கிளிநொச்சி | 3-20 | 3-30 |
| பரந்தன் | 3-35 | 3-35 |
| இயக்கச்சி | 3-45 | 3-45 |
| முகமாலை | 4-00 | (மாலை) |

முகமாலையில் இருந்து நேர விரிப்பு (ஒவ்வொரு திங்களிலும்)

| | | |
|---|---|---|
| முகமாலை | (காலை) | 7-30 |
| இயக்கச்சி | 7-45 | 7-45 |
| பரந்தன் | 7-55 | 7-55 |
| கிளிநொச்சி | 8-00 | 8-10 |
| கோணாவில் | 8-35 | 8-35 |
| கந்தபுரம் | 9-05 | 9-05 |
| அம்பலப்பெருமாள்சந்தி | 9-20 | 9-20 |
| துணுக்காய் | 10-20 | 10-20 |
| மல்லாவி | 10-30 | (காலை) |

தமிழீழ போக்குவரவுக்கழகம், நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி-7020)

## Mouse (pvt) Ltd

K.K.S. Road Inuvil

கொழும்பில் இயங்கும் எமது நிறுவனம் யாழ். வன்னி மாணவர்களை கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் இணுவில் K.K.S. வீதியில் எமது கிளை நிறுவனத்தை ஆரம்பித்துள்ளோம்.

எமது நிறுவனத்தால் பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றது.

1. Dip in Tesk top Publishing
2. Dip in Graphic Design
3. Dip in Marketing



போரினால் தாய் தந்தையை இழந்த மாணவர்களுக்கு இலவசமாக கற்பிக்கப்படும்

–நிர்வாகம்–

K.K.S. Road, (Inuvil Central College இற்கு அருகில்) Inuvil.

(சி.6963)

ஸ்ரீராம ஜெயம்

## வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயில் மண்டலாபிஷேகப் பூர்த்தி சங்காபிஷேகப் பெருவிழா



கடந்த 13.06.2002 நடைபெற்ற கும்பாவிஷேகத்தின் போது மூலஸ்தான தூபிகளுக்கு கும்பாவிஷேகம் நடைபெறும் காட்சி



காலம்:- 28-07-2002
ஞாயிற்றுக்கிழமை
காலை 9மணிக்கு
ஆரம்பமாகும்.

மாலை 4 மணிக்கு ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீரங்கநாதருக்கு திருக்கல்யாணம் இடம்பெற்று திருஊஞ்சல் பாடப்பெற்றுச் சுவாமி பூந்தண்டிகையில் வெளிவீதி உலாவரும் திருக்காட்சியும் இடம்பெறும். இப்பெருவிழாவில் கண்ணனடியாவர்கள் யாவரும் ஆலயத்திற்கு வருகை தந்து எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'நன்றி'

இவ்வண்ணம்
பரிபாலனசபை.

(2099)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். கேணல் சரா

[சின்னத்துரை ஜீவராசா]

கல்வியங்காடு

உங்கள் இலட்சிய கனவு நிறைவேறி
ஆனையிறவில் அசைந்தாடுது புலிக்கொடி
இறுதி இலட்சியம் தொலைவில் இல்லை.
உறுதி! உறுதி!!

ஜனனம்: 19 - 04 - 1962
வீரச்சாவு : 27 - 07 -1991

மானா குடும்பத்தினர்
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு

(2251)

## பிரதேச சுகாதார இணைப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - 2002

பிரதேச சுகாதார இணைப்பாளர் பயிலுநர்களை சேர்த்துக் கொள்ள ஆர்வமுள்ள திருமணமாகாத ஆண்கள் மட்டும் - விண்ணப்பிக்கலாம்.

தகுதி: 01. வன்னிப் பெருநிலப்பரப்பிலும், வன்னிக்கு -வெளியேயான பகுதிகளிலும் கடமையாற்றுதல் வேண்டும்.

02. க.பொ.த. சா/தரப் பரீட்சையில் தமிழ், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பார்டங்களில் சித்திகளுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

வயது: 21 - 28 வரை.

மேற்படி தகமை உள்ளோர் தமது சுய விபரங்கள் அடங்கிய மாதிரி விண்ணப்பங்களை 10-08-2002ற்கு முன்பாக தமிழீழ சுகாதாரசேவைகள், நடுவப்பணியகம், கிளிநொச்சி. எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பொறுப்பாளர்,
தமிழீழ சுகாதாரசேவைகள்.

(6969)

## பணிநிலை வேண்டுகை

பணியின் வகை :- அலுவலக எழுதுநர்.
வயதெல்லை :- 40 - 50 வயதிற்குட்பட்டவர்கள்.
கல்வித்தகமை :- (க.பொ.த) சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
பிறதகமை :- 10 வருடத்திற்கு மேற்பட்ட மேற்படி பணி அனுபவம் உள்ளவர்கள். அல்லது ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் விரும்பத்தக்கது. அத்துடன் ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருத்தல் நன்று.
சம்பளம் :- நேரில் பேசிதீர்மானிக்கப்படும் .
குறிப்பு :- கிளிநொச்சியில் பணியாற்றக்கூடியவராக இருத்தல்வேண்டும்

மேற்படி தகமையுடையவர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய மாதிரி விண்ணப்பப்படிவங்களை 05-08-2002ற்கு முன்னதாக தமிழீழ சுகாதாரசேவைகள், நடுவப்பணியகம், கிளிநொச்சி. எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி.6968)

பொறுப்பாளர், தமிழீழ சுகாதாரசேவைகள்.

## உதயமாகிவிட்டது நிலா பதிப்பகம்

பிரதானசாலை , கிளிநொச்சி.

வாடிக்கையாளர்களே!

அதி நவீன அச்சு இயந்திரங்கள் (ஓவ்செற் - கெஸ்ரெனர்) மூலம் உங்கள் தேவைகளை அழகாகவும் நேர்த்தியாகவும் விரைவாகவும் நிறைவேற்றிக் கொள்ள குறித்த மணி நேரத்தில் உங்கள் வேலைகள் எதுவாயினும் செய்து கொள்ள நாடுங்கள்.

கிளைகள்:
வவுனியா வடக்கு ப.நோ.கூ.ச.பதிப்பகம்
புதுக்குடியிருப்பு

மாறன் பதிப்பகம்
முல்லைசாலை தருமபுரம்

நிலாபதிப்பகம்
பிரதான சாலை, கிளிநொச்சி
முருகன் கோயிலுக்கு
அருகாமையில்

(சி.6956)



# தம்பிமுத்து ஆங்கிலக் கவிதை உலகில் ஒரு நட்சத்திரம்

சுரேஸ் கனகராஜா

இரண்டாம் உலகப் போர் மூண்டிருந்த இருண்ட நாட்களில் லண்டனில் ஒரு புரட்சிகரமான ஆங்கிலக் கவிதைச் சஞ்சிகையைப் பிரசுரித்துப் பலரது கவனத் தையும் ஈர்த்தவர். பின்னர் பெயர்பெற்ற கவிஞர்களான Stephen Spender, Dylon Thomas, Lawrence Durrell போன்றவர்களின் எழுத்து வன்மையை முதன்முதலாக அடையாளங்கண்டு அவர்களை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர். பிரபல்யமான எழுத்தாளர்களான T.S Eliot, George Orwell போன்றவர்களோடு நெருங்கிய நண்பராகப் பழகியவர். சிறு கதை,கவிதை, விமர்சனம் பல எழுதி அமெரிக்காவிலும் இங்கிலாந்திலுமிருந்து வெளிவரும் முன்னணிச் சஞ்சிகைகளில் பிரசுரங்கள் கண்டவர். இவர்தான் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து. 1938இல் தான் 23வயதாக இருக்கும் போது லண்டனில் வந்திறங்கி சிலமாதங்களுக் - குள்ளேயே Poetry London என்ற தன் சஞ்சிகையைப் பிரசுரித்து இலக்கிய வரலாற்றில் தனது தனி அடையாளத்தை விட்டுச் சென்ற தம்பிமுத்துவின் வாழ்க்கை தமிழரால் மேலும் ஆராயப்படவேண்டும்.

தம்பிமுத்துவின் சஞ்சிகை பிரபல்யமடையப் பல காரணங்கள் இருந்தன. ‘‘எல்லோருக்குள்ளேயும் கவிதை இருக்கிறது’’ என்ற சுலோகத்தோடு பல புதிய இளைய கவிஞர்களுக்குத் தம்பிமுத்து வாசலைத் திறந்தார். கோஷ்டி ஆதிக்கம் செலுத்தப்பட்ட கவிதை உலகில் ஜனநாயக ரீதியான பிரசுரத்தை ஏற்படுத்தி வைத்தார். மேலும் கவிதையோடு கூட அவற்றுக்குப் பொருத்தமான சித்திரங்களையும் தன் சஞ்சிகையில் பிரசுரித்தார். இத்தகைய பன்முகப்படுத்தப்பட்ட கலை ரீதியான சஞ்சிகை அன்றைய நாட்களில் புதுமையானதாகவே இருந்தது. மேலும் இலக்கிய வரம்புகளைக் கடந்து வித்தியாசமான கலைப்போக்கு களைச் சார்ந்த கவிஞர்களுக் கும் இது களம் அமைத்தது.

தம்பிமுத்துவின் தனிப்பட்ட வாழ்க்கை சோகமானது. இளமையில் பிரமிக்கத்தக்க பல வெற்றிகளை இவர் சாதித்தாலும் பின்னர் (கிட்டத்தட்ட 35 வய துக்குப் பின்னர்) நிவாரணமின்மை, தனிமை,விரக்தி என்பன அடிக்கடி இவரை வாட்டின. இவரது பின்வாழ்க் கையில் ஏற்பட்ட தோல்விகளுக்கு இவரையே பலர் குற்றம் கூறியிக் கிறார்கள். அதாவது குடிப்பழக்கம், கோபம், திடீர்த் தீர்மானமெடுக்கும் பழக்கம் என்பவற்றைக் காரணம் காட்டுகிறார்கள். வேறு பலர் மாறிவரும் சமூகசூழ் நிலை, புலம்பெயர்ந்த வாழ்க்கை, ஐரோப்பாவிலும் அமெரிக்கா விலும் நிலவிய இனவாதம் என்பவற்றைக் காரணம் காட்டுகிறார்கள். தம்பிமுத் துவின் நண்பரும் அவருடைய இலக்கிய உடைமைகளுக் குப் பொறுப்பாளருமான ஜேன் வில்லியம்ஸ் 1989இல் அவருடைய சமகாலத்தவரின் கட்டுரைகளைத் தொகுத்து Tambimuttu. Bridge Between Two Worlds என்ற தலைப்பில் வெளியிட்ட புத்தகம் அவரது வாழ்க்கையைப் பற்றி பல அந்தரங்கமான தகவல்களைத் தருவதோடு, அவரது சாதனைகளையும் நன்றாகச் சித்தரிக்கின்றது.

• ஆகஸ்ட் 15ஆம் திகதி 1915 இல் பிறந்த தம்பிமுத்து பெயர்பெற்றசுவாமி ஞானப் பிரகாசரின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆரம்பத்தில் திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய நகரங்களில் கத்தோலிக்க பாடசாலைகளில் ஆங்கில மூலம் கல்வி கற்றார். இளமையிலே தன் தாயை இழந்ததால் முதிர் வயதில் சந்தித்த பல பெண்மணிகள் தங்களில் ஒரு தாயை இவர் தேடியதாகக் கூறுகிறார்கள். இங்கிலாந்துக்குப் பயணஞ்செய்ய முதலே தன் கவிதைகள் அடங்கிய மூன்று தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறார். இவற்றைத் தன் குடும்பத்தினர் வைத்திருந்த அச்சகத்தில் தானே அச்சுக் கோத்திருக்கிறார். இந்த ஆரம்ப அனுபவம் பின்னர் இங்கிலாந்தில் பிரசுரித்த வெளியீடுகளில் இவருக்குப் பெரிதும் உதவியிருக்கிறது.

சிறுகதை,கவிதை, விமர்சனம் பல எழுதி அமெரிக்காவிலும் இங்கிலாந்திலுமிருந்து வெளிவரும் முன்னணிச் சஞ்சிகைகளில் பிரசுரங்கள் கண்டவர். இவர்தான் அச்சு வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து. 1938இல் தான் 23வயதாக இருக்கும் போது லண்டனில் வந்திறங்கி சிலமாதங்களுக்குள்ளேயே Poetry London என்ற தன் சஞ்சிகையைப் பிரசுரித்து இலக்கிய வரலாற்றில் தனது தனி அடையாளத்தை விட்டுச் சென்றர்

கப்பலிலிருந்து இறங்கிய மூன்றாம் நாளே லண்டனில் Fitzroy வீதி Howland வீதி பகுதிகளில் இருந்த மதுசாலைகளுக்கு (pubs) சென்றதையும் அங்கு பல எழுத்தாளரைச் சந்தித்ததையும் பற்றிப் பின்னர் எழுதுகிறார். இவரது இள வயது வாழ்க்கை மதுசாலைகளிலேயே Dylan Thomas போன்ற பல இலக்கிய நண்பர்களோடு கழிந்திருக்கிறது. 1949 வரை Poetry London இன் 14 மலர்களை வெற்றிகரமாக வெளியிட்டார். ஆனால் இவருடைய முயற்சிகளுக்கு நிதி உதவி செய்த Richard March வெளியிட்டாலும் பின்னர் முழுமுயற்சியையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சி செய்த போது அந்தக் கூட்டத்திலிருந்து தம்பிமுத்து வெளிநடப்புச் செய்தார். Poetry London இன் ஏனைய ஒன்பது மலர்களையும் Richard March தம்பி முத்துவின் வெளியீடுகளுக்கு கிடைத்த கீர்த்தியை அவை பெறவில்லை. அதன் பின் விரக்தியடைந் தவராய் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் விஜயம் செய்த

தம்பிமுத்து பம்பாயைச் சேர்ந்த Safia Tyabjee என்பரை மணம் முடித்திருக் கிறார். (இவரது முதல் மனைவியான பிரித்தானியர் jacgveline Stanley சில வருடங்களில் பிரிந்திருக்கிறார்.) Safia வும் தம்பிமுத்துவும் 1952 இல் நியூயோர்க்குக்கு வந்திறங்கிதம் புதிய வாழ்க்கையைத் தொடங்கி இருக்கிறார்கள். இங்கு தம்பிமுத்து எழுதிய சிறுகதைகள் New Yorker சஞ்சிகையில் பிரசுரமாயின. இவரது சிறுகதைத் தொகுப்பொன்றை வெளியிடப் பல முன்னணிப் பதிப்பாளர்கள் முன் வந்திருக்கிறார்கள்.

எனினும் தம்பிமுத்துவின் அக்கறை கவிதையிலேயே குவிந்திருந்தது. .. எனவே Poetry London New York என்ற சஞ்சிகையைத் தொடங்கி, நாலு மலர்களை வெளியிட்டிருக்கிறார். எனினும் அமெரிக்காவில் தம்பி முத்துவுக்கு நல்ல நிதி உதவியோ பெருமையோ கிட்டவில்லை. ஏழ்மையிலும் குடியிலும் இவர் மூழ்கிப் போக Safia 1958 இல் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்று விட்டார். இதன் பின் பார்சி இனத்தவரான Esta Busi என்பவரை இவர் மணம் முடித்து சகுந்தலா என்ற குழந்தையையும் பெற்றெடுத்தார். எனினும் இந்தத் திருமணமும் பல காலம் நீடிக்கவில்லை. எழுபதுகளில் அமெரிக்காவில் எழுந்த இளைஞர் கலாசாரம் (Beat Generation, Hippie Cult) இவரைக் கவர்ந்திருக்கிறது. போதை, தியானம் என்பவற்றை முன்வைத்து தொடக்கப்பட்ட Timothy Learya யின் ஆச்சிரமம் ஒன்றில் இவர் “குரு” வாக அழைக்கப்பட்டு இந்து மதத்தைப் பற்றி இங்கே போதனைகள் நிகழ்த்தியிருக்கிறார்.

1970இல் இவர் லண்டனுக்குத் திரும்பி Poetry London . Apple Magazine என்ற சஞ்சிகையின் இரு மலர்களை பெருஞ் சிரமத்தோடு வெளிக் கொணர்ந்தார். 1982இல் பெரும் வரவேற்பின் மத்தியில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். பிரதமர் இந்திரா காந்தியின் நிதி உதவியோடு இந்தியா பூராவும் ஒரு கலாசார உலாவை மேற் கொண்டு பின்னர் Indian Arts Council (iac) எனும் கலாசார அமைப்பினை புதுடெல்லியிலும் லண்டனிலும் தாபித்தார். இரு கலாசாரங்களுக்கிடையிலும் புரிந்துணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் இது தொடங்கப் பெட்ட சில மாதங்களிலேயே ( ஜீன் 1983இல்) மாரடைப்பால் தம்பிமுத்து மரித்தாலும் IAC இன்றும் Marchmont Street. Bloomsburyapy தம்பிமுத்து இளைஞனாக வந்திறங்கி நடமாடிய பகுதியில் இயங்குகிறது.

தம்பிமுத்துவின் புலம் பெயர்ந்த வாழ்க்கையைப் பற்றி ஓர் ஆழமான ஆராய்ச்சிக்கு இடமுண்டு. ஜேன் வில்லியம்சின் புத்தகத்தில் அவரது நண்பர்களின் ஒரு சில வரிகளிலிருந்து அவரின் வாழ்க்கையை நாம் பூரணமாக விளங்கிக் கொள்ள முடியாது. அவர் பிரசுர வாழ்க்கையில் ஈடுபட்ட போது அவருக்கு ஏற்பட்ட சவால்கள் அவற்றை அவர் சமாளித்த விதங்கள் அவருடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இலக்கிய வாழ்க்கைக்கும் இடையான ஊடாட்டம் என்பன ஆராயப்பட்டு ஒரு வாழ்க்கை வரலாறு எழுதப்பட வேண்டும். இன்றைய புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் பெருமளவில் வந்து சேர முன்னர் தனியாக இங்கே காலடி எடுத்து வைத்து இலக்கிய உலகில் சாதனை படைத்த இந்த மனிதரைப் பற்றித் தமிழர் அறிந்திருக்க வேண்டும்.

இவருடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பல சிக்கலான கேள்விகள் ஆழமாக ஆராயப் பட வேண்டும். முதலாவதாக புலம் பெயர்ந்த தமிழராக மேற்குலகில் வாழ்ந்த இவருக்கு ஒரு அடையாளப் பிரச்சினை இருந்திருக்க வேண்டும். ஜேம்ஸ் மியரி (James Meary) என்ற முதற் பெயர்களை பிறப்பு முதல் பிரயோகித்து வந்த தம்பிமுத்து பின்னர் “தியாக ராஜா தம்பிமுத்து’’ என்று தன்னை அழைக்கத் தொடங்குகிறார். இவருக்கு மரணச் சடங்குகள் கத்தோலிக்க மதரீதியிலும் இந்துமத ரீதியாகவும் வெவ்வேறாக நடைபெற்றிருக்கின்றன. இவரது மரணத்தின் பின்னர் தான் இவருக்குக் கத்தோலிக்க மதச் சார்பும் ஆங்கிலப் பெயர்களும் எங்கிருந்து வந்தன. என்று இவருடைய பிரித்தானிய நண்பர்கள் வியக்கிறார்கள். தன் பின்நாட்களில் இந்து மத்தவராகத் தன்னைக் காட்டிக் கொண்டது. பிரித்தானியர் மத்தியில் ஒரு மதிப்பை ஏற்படுத்திக் கொள்ளவோ என்று எம்மைத் சிந்திக்கத் தூண்டுகிறது. அதேநேரம் இளமையிலேயே தன் குடும்பத்தின் கத்தோலிக்க மதத்திற்கும் தன்னைச் சுற்றியிருந்த இந்துமதக் கலாசாரத்திற்குமிடையில் ஒரு போராட்டத்தைத் தனக்குள்ளேயே அனுபவித்ததாக அவரே எழுதியிருக்கிறார். இதை விட தான் யாழ்ப்பாண அரசர்களின் குலத்தைச் சேர்ந்தவர். என்று தன்னை அடிக்கடி அறிமுகப்படுத்தி பிரித்தானியரிடையே Prince என்ற பட்டத்தைப் பெற்று ஒருவகையான அபூர்வமான (exotic) அடையாளத்தை அனுபவித்தணிருக்கிறார். இந்த யுக்திகள் எவ்வகையில் இவருக்கு இங்கிருந்த அடையாளப் பிரச்சினைகளால் உருவாக்கப்பட்டவை என்று நாம் கேட்க வேண்டும்.

மேலும் இவருடைய இலக்கிய கலைரீதியான நிலைப்பாடு எத்தகைய கலாசார ஊற்றிலிருந்து வந்தது என நாம் ஆராய வேண்டும். இவர் ஆங்கிலத்திலேயே முற்று முழுதாக எழுதினாலும் சமஸ்கிருத, இந்திய சிந்தனை களைத் தன் கட்டுரைகளில் மேற்கோள் காட்டுகிறார். கவிதையை ஆன்மீகத்தோடு தொடர்புபடுத்தியமை எல்லோருக்குள்ளேயும் கலை ரீதியான ஊற்றை எதிர்பார்த்தமை எல்லாம் இக்கால மேற்கத்தைய கலையுலகில் புதிய சிந்தனைகள் என இவரது நண்பர்கள் கூறியிருக்கிறார்கள். அதே நேரம் இந்நாட்களில் மூன்றாம் உலக நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருந்த காலனித்துவத் திற்கெதிரான போராட்டம், காந்தீயம், போன்றவற்றிலிருந்து இவர் அந்நியப்பட்டிருக்கிறார். இவருக்கு அரசியல் சமூக நாட்டம் குறைவாகவே இருந்த தென்று இவரது நண்பரும் இந்திய எழுத்தாளருமான Mulk Raj Anand ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்றாவதாக அன்றைய சமூக சரித்திரப் பின்னணி எவ்வாறு தம்பிமுதுவின் இலக்கிய வாழ்க்கையைப் பாதித்தது. என நாம் ஆராய வேண்டும். அவர் வெளியிட்ட சஞ்சிகைகளில் இன்னுமொரு வெள்ளையரின் பெயரைத் தனக்கு மேலாக அல்லது தன் சக தொகுப்பாளராகக் குறிப்பிட வேண்டியிருந்தமை எம்மை ஆச்சரியப் படுத்து கிறது. இறுதியில் இவரது தகைமைகள் எள்ளளவும் இல்லாத சகா Richard March சஞ்சிகையைத் தன் கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வந்து தம்பிமுத்து அலுவலகத்திற்கு வரவே கூடாது என்று கட்ட ளையிடமை பிரித்தானியருக்கே அநீதியாகப்பட்டிருக்கிறது. இவை இன வாதத்தின் வடிவங்களாக இருக்கலாம். எனினும் பிரித்தானியாவில் இவருக்கு ஆரம்பத்தில இருந்து மதிப்பு பின்னர் ஏன் நீயூயோர்க்கில் கிட்டவில்லை என்பது வேறொரு கேள்வி. அமெரிக்காவில் அந்நாட்களில் பிரித்தானியாவிலும் பார்க்கக் கூடுதலான வெளிக்கலாசார எழுத்தாளரும் புத்தி ஜீவிகளும் இருந்தமை இவருக்குக் கிடைத்திருக்கக் கூடிய தனித்துவத்தை மழுங்கடித்தன என சில சாரார் சிந்தி கிறார்கள். ❖


ஆழ்ந்த சிந்தனையில் அணுவிஞ்ஞானி

# அணுவிஞ்ஞானியை சனாதிபதி ஆக்கியதன் மூலம் இந்தியா சாதிக்க நினைப்பது எதனை?

✦ அன்பன்

இந்தியாவின் பொக்ரான் அணுகுண்டு வெடிப்பின் பின் இந்தியாவிலும் உலக நாடுகளிலும் பரபரப்பாக பேசப்பட்ட அணுவிஞ்ஞானியான அப்துல் கலாம் என்கின்ற மனிதரைப் பற்றி மீண்டும் இந்தியாவும் உலகநாடுகளும் பரபரப்பாக பேசத்தொடங்கி விட்டது.

லஞ்சமும் ஊழலும் வறுமையும் கொண்ட ஒரு வல்லரசு நாடு என்ற பெயரைக் கொண்ட இந்தியாவை பொக்ரான் அணுகுண்டு வெடிப்பின் மூலம் உலகில் இந்தியாவை ஒரு அணு வல்லரசு நாடு நிலைக்கு கொண்டு வந்த பெருமை தமிழ்நாட்டின் பிரமச்சாரி விஞ்ஞானியான ஏ. பி.ஜே. அப்துல்கலாமிற்கு உண்டு.

ஆனால் இந்த அணுவிஞ்ஞானியான அப்துல்கலாமை இந்தியாவின் ஆளும்பாரதீய ஜனதாக்கட்சி பன்னிரண்டாவது குடியரசுத்தலைவர் பதவியின் வேட்பாளராக நிறுத்தி வெற்றி கொள்ளச் செய்வதன் மூலம் அவரை அரசியல் சாக்கடைக்குள் இழுத்துவிட்டுள்ளது.

இதன் மூலம் அப்துல்கலாம் இன்று ஒரு அரசியல்வாதியாக எல்லோராலும் பேசப்படத் தொடங்கிவிட்டார் இதன் மூலம் அப்துல்கலாம் அணுவிஞ்ஞானி என்ற நிலையிலிருந்து மாறி இந்திய குடியரசுத் தலைவர் என இன்று மாறிவிட்டார்.

இந்தியா. சீனா,பாகிஸ்தான் ஆகிய நாடுகளை தனது எல்லை நாடுகளாக கொண்டுள்ளது அத்துடன் இவ்விரு நாடுகளுடனும் தீராத பகைமையையும் பாராட்டி வருகின்றது. இவ்விரு நாடுகளும் அணுவல்லரசுகளாகவும் திகழ்கின்றன. இவற்றினூடாக இந்தியா எப்போதும் ஒரு அச்சுறுத்தலை எதிர்கொண்டபடியே உள்ளது.

இந்த நிலையில் அப்துல்கலாமிற்கு இந்திய குடியரசுத்தலைவர் பதவியை வழங்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்போகும் நன்மைகளை விட அணுவிஞ்ஞானி அப்துல் கலாம் மூலம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளே அதிகமாக இருக்கும்.

ஏனெனில் இந்தியாவின் குடியரசுத் தலைவர் பதவி என்பது வெறும் மதிப்பிற்குரிய பதவி மட்டுமேயொழிய எந்தவித அதிகாரங்களுமற்ற வெற்று பதவி மட்டுமே அதிகாரங்கள் யாவும் இந்திய பிரதமரிடமும் இந்திய நாடாளுமன்றுடமுமே உள்ளது.

அப்துல் கலாம் இனிவரும் ஐந்து வருடகாலமும் அலுவலக கோவைகளோடும் இந்திய பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் செய்யப்போகும் கைங்கரியங்களுக்கு தனது விருப்பு வெறுப்புகளிற்கு அப்பால் கையெழுத்து போடும் வெறும் பொம்மையாக இருக்கப்போகின்றார்.

இதற்கு பதிலாக அப்துல் கலாம் ஒரு விஞ்ஞானியாக ஆய்வு கூடத்திற்குள் இந்த ஐந்து வருடகாலத்தை செலவழிப்பாரேயானால் அதன் மூலம் இந்தியா பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் ஏராளமானவையாக இருக்கும்.

அயல் நாடுகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் இந்தியா தன்னை இராணுவ விஞ்ஞான ரீதியாக பலப்படுத்திக் கொள்ளவும் முடியும் இன்னும் பல புதிய இளம் விஞ்ஞானிகளையும் உருவாக்கிக்கொள்ளவும் முடியும். ஆனால் இந்த நன்மைகளை விட அப்துல் கலாமை இந்தியாவின் சனாதிபதியாக நியமித்தற்கூடாக எதனை பெற்றுவிட இந்தியா எண்ணுகின்றது என்ற கேள்வி எழுகின்றது.

இதற்கு தற்போது மத்தியில் ஆட்சிபுரிகின்ற பாரதீய ஜனதாக்கட்சி சந்திக்கின்ற நெருக்கடிகளும் அது இனி சந்திக்கப் போகின்ற நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு முயற்சிப்பதுமே யாகும்.

ஆளும் பாரதீய ஜனதாக்கட்சியின் போக்கு எது எவ்வளவுதான் முயன்றாலும் தன்னை ஒரு மதசார்பற்ற கட்சி என்ற வகையில் நிரூபித்துக்கொள்ள முடியவில்லை.மாறாக குஜராத்திலும் ஏனைய மாநிலங்களிலும் முஸ்லிம் மக்கள் மீது இந்த வெறியர்களால் ஏவிவிடப்பட்டவன்முறைகளால் மேலும் ஒரு மதவாத கட்சி என்ற பெயரையே பெற்றுக்கொண்டது.

அத்தோடு இந்திய நாடாளுமன்றில் அங்கம்வகிக்கின்ற உறுப்பினர்கள் பலரும் சிறிய பிராந்திய கட்சிகள் பலவும் பாரதீய ஜனதாக்கட்சி மீது அதிருப்தி கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்தியாவின் பன்னிரண்டாவது குடியரசு தலைவரிற்காக தெரிவில் பாரதீய ஜனதாக் கட்சியை சார்ந்த ஒருவர் அல்லாமல் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் இப்பதவியை கைப்பற்றுவாரேயானால் பாரதீய ஜனதாக்கட்சி புதிய நெருக்கடிகளை எதிர் கொள்ளக்கூடிய சூழ்நிலை தோன்றியிருக்கும் இதனைத் தவிர்ப்பதற்காகவும் பாரதீய ஜனதாக்கட்சி கையாண்ட ஒரு அரசியல் சித்து விளையாட்டே அப்துல் கலாமை சனாதிபதி வேட்பாளராக நிறுத்தியமையாகும்.

பெரும் மதிப்புக்குரிய விஞ்ஞானியான அப்துல் கலாமை குடியரசுத்தலைவர் பதவிக்கு நிறுத்துவதன் மூலம் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியை நெருக்கடிக்குள்ளாக்கி அக்கட்சியையும் அப்துல்கலாமிற்கு ஆதரவளிக்கச் செய்து தனது விருப்பினை நிறைவு செய்து கொண்டுள்ளது.

அத்தோடு ஒரு முஸ்லிமான அப்துல்கலாமை தனது வேட்பாளராக நிறுத்தியதற்கூடாக தமது கட்சி ஒரு முஸ்லிம்களிற்கு எதிரான ஒரு நிலைப்பாட்டைக் கொண்ட கட்சியல்ல என்று காட்டிக்கொள்ளவும் பாரதீய ஜனதாக்கட்சி மதசார்பற்ற கட்சியுமல்ல என்றும் காட்டிக் கொள்ளமுனைகின்றது.

இந்திய அரசியலில் காலத்திற்கு காலம் தமது நெருக்கடிகளை தணித்துக் கொள்ளவதற்காக முஸ்லிம்களாக இருக்கின்ற சிலருக்கு சனாதிபதி பதவியையோ அல்லது உப சனாதிபதி பதவியையோ வழங்கிவருகின்ற ஒரு போக்குக் காணப்படுகின்றது

இந்த நிலையில் தற்போதுள்ள நெருக்கடி நிலை யை தவிர்த்துக் கொள்ள இந்திய அரசியல்வாதிகளுக்கு கிடைத்தவர் இந்தியாவின் மிகப் பெரிய சொத்தாக கருதக்கூடிய ஒரு விஞ்ஞானி என்பதே வேதனைக் குரிய விடயம்


அரசியல் வெற்றிக்களிப்பில் சனாதிபதி

அத்தோடு மிகவும் இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் பேண வேண்டிய ஒரு விஞ்ஞா னியை பொது இடங்களில் தோன்ற வேண்டிய ஒரு பதவிக்கு கொண்டு வந்துள்ளமையினால் அவரது பாதுகாப்பு கேள்விக்குறியா கியுள்ளது.

அத்தோடு அப்துல்கலாமிற்கு முஸ்லிம் தீவிரவாதிகளினாலும் அயல் நாடுகளின் இரகசிய கூலிப் படைகளினாலும் ஆபத்துக்கள் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந் நிலையில் அப்துல் கலாமை இந்தியாவின் சனாதிபதியாக கொண்டு வருவதன் மூலம் பாரதீய ஜனதாக்கட்சி ஒரு மூன்றாம் தர அரசியல் நடத்துவதையே தோலுரித்துக் காட்டுகின்றது. ✸

---

✪ எஸ்.வி.ஆர் கஜன்

# கிழக்கில் ‘ஏ5’ நெடுஞ்சாலை திறப்பு மற்றுமோர் வரலாற்றுப் பதிவு...

**35பாலங்களையும், 98 வரையிலான மதகுகளையும் கொண்ட இவ் நெடுஞ்சாலை சடுதியாக மூடப்பட்டதனால் மட்டக்களப்பிற்கு வரும் மலையக மக்களும், மலையகத்திற்குச் செல்லும் கிழக்கு பிராந்திய மக்களும் வேறு வழியூடாக நெடுந்தூரம் சுற்றியே தங்களது பயணத்தை தொடர வேண்டியிருந்தது.**



புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்பு இடம் பெற்றுள்ள A 9 பாதை திறப்பின் பின்னான மாற்றங்கள் என்பது ஒரு விதமான பதிவு

இவ்வுடன் படிக்கையின் பின்பு தென் தமிழீழமான கிழக்கு பிராந்தியத்தில் இடம்பெற்றுள்ள A 5 பாதை திறப்பானது வரலாற்றில் மற்றுமொரு பதிவினையும், மாற்றத்தையும் ஏற்படுத்தி இறுக்கத்திற்குள்ளாகியிருந்த மக்களுக்கு சற்று தளர்வினையும் ஏற்படுத்தியுள்ளது.

செங்கலடி பதுளை வீதியான இந்த A 5 நெடுஞ்சாலை கடந்த 15ம் திகதி வைபவ ரீதியாக இருதரப்பினரது ஒத்துழைப்பாலும் திறக்கப்பட்டிருப்பதானது A9 வீதி திறப்பின் போது வன்னி யாழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்ததொரு உணர்வு வெளிப்பாடு கிழக்கு பிராந்திய, மலையக தமிழ், சிங்கள மக்களுக்கும் பூரிப்பை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தென் தமிழீழத்தையும் மலையகத்தையும் இணைக்கும் இந் நெடுஞ்சாலை 1995ம் ஆண்டிற்கு முன்னர் இயல்பாக இயங்கிக் கொண்டிருக்கையில் கிழக்கிற்கும் மலையகத்திற்குமிடையேயான தொடர்புகளில் சிரமமின்றி மக்கள் தங்களது கல்வி, சுகாதார, பொருண்மிய, மற்றும் வாழ்வாதார செயற்பாடுகள் பலவற்றையும் கிரமமாக மேற்கொண்டு வந்தனர்.

1995 மார்ச் மாதம் வீதி அபிவிருத்தி நிறுவனத்திற்கு சொந்தமான வாகனமொன்று தொடர்பாக ஏற்பட்ட பிணக்கொன்றையடுத்து ஸ்ரீலங்கா படையினரால் செங்கலடி பதுளை வீதியான இந்த A-5நெடுஞ்சாலை முற்றாக பொதுப் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டது.

இலங்கைத் தீவிலுள்ள 36 ஏ தர வீதிகளில் இதுவும் ஒன்று வடகிழக்கு மாகாணத்தில் மிகவும் பழைமை வாய்ந்த வீதியான இவ்வீதி முன்னர் ஆங்கிலேயரால் கிழக்கிலிருந்து நெல் உற்பத்தியினையும், மலையகத்திலிருந்து பெருந்தோட்டத்தையும் இணைக்கும் கூரிய நோக்கில் அமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. அரச படைகளின் இவ் நெடுஞ்சாலை மூடப்பட்டதை அடுத்து கிழக்கிற்கும் மலையகத்திற்குமிடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட நிலையை அடைந்தது.

இதனால் இப்பகுதி மக்கள் துரித தொடர்புகள் எதுவுமின்றி வாழ்வாதார அடித்தளம் சீரழிந்து பல துன்பங்களை கடந்த சில வருடங்களாக அனுபவித்து வந்தனர்.

இவ் வீதியை தங்களின் பூரண கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக படையினர் மரப்பாலம், கரடியனாறு போன்ற இடங்களில் மட்டுமல்லாது மேலும் பல இடங்களையும் ஆக்கிரமித்து முகாமிட்டிருந்தனர். இதனால் இப்பகுதியில் வாழ்ந்த பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தங்களது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

35பாலங்களையும், 98 வரையிலான மதகுகளையும் கொண்ட இவ் நெடுஞ்சாலை சடுதியாக மூடப்பட்டதனால் மட்டக்களப்பிற்கு வரும் மலையக மக்களும், மலையகத் திற்குச் செல்லும் கிழக்கு பிராந்திய மக்களும் வேறு வழியூடாக நெடுந் தூரம் சுற்றியே தங்களது பயணத்தை தொடர வேண்டியிருந்தது.

A .9 சாலை மூடப்பட்டிருந்த போது தென்பகுதிக்கு செல்லும் வன்னி மக்கள் தம்பனையூடாக சென்று வந்து அனுபவித்த அதே நிலையை A. 5சாலை மூடப்பட்டிருந்த போது மட்டு, மலையக மக்களும் அனுபவித்தே வந்துள்ளனர்.

இது வடக்கு தெற்கு தமிழீழ மக்களுக்கு ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டிருந்த வாழ்வியல் நசுக்கம் என்றே கூறலாம்.

மீனவ சமூகத்தினரை அதிகமாகக் கொண்டுள்ள மட்டக்களப்பிலிருந்து மீன் வளத்தை மலையகத்திற்கு கொண்டு செல்வதற்கும், மலையகத்தின் உற்பத்திப் பொருட்களான பிரதானமாக மரக்கறி வகைகளை கிழக்கிற்கு கொண்டு வருவதிலும் ஏற்பட்டிருந்த தடை பொருண்மிய பக்கங்களில் மக்களை மிகவும் நலிவடையவே செய்திருந்தது.

இவ்வாறு பல்வேறு கோணங்களில் இன்னல்களை ஏற்படுத்தி வந்த இந் நெடுஞ்சாலை திறக்கப் படுவதற்கான உறுதிப்பாடுகள் இருதரப்பாலும் தெரிவிக்கப்பட்டு இரு பகுதிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடிகள் அகற்றும் பணி இரு தரப்பாலும் துரிதமாக செயற்படுத்தப்பட்டது.


இச் செய்தி அறிந்த மக்கள் திருப்தி அடைந்து இருதரப்பினருக்கும் நன்றி தெரிவித்து குதூகலித்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புரிந்துணர்வு உடன் பாட்டின் பின்பு தமிழீழத்தில் நிகழ்ந்த இரண்டாவது “ஏ”தர நெடுஞ்சாலை திறப்பினை அரசியலாளர்கள், சமூகவியலாளர்கள் பலரும் பாராட்டி இரு தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

கடந்த 15ம் திகதி செங்கலடி கறுத்த பாலத்தில் “ஏ” 5 வீதியின் வைபவரீதியான திறப்பு நிகழ்வு இடம் பெற்றது. இந் நிகழ்வில் கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன், கொள்கை திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிசாகிர மௌலானா, கிழக்கு மாகாண இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், மட்டக்களப்பின் 23-3வது கட்டளை அதிகாரி அன்ரனீஸ், அரச அதிபர் சண்முகம் மற்றும் கண்காணிப்பு குழு பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந் நெடுஞ்சாலை திறப்போடு விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசமான புல்லுமலை வரை சென்ற அதிகாரிகளோடு போராட்ட வடுக்களால் 8-10 வருடங்களாக பிரிந்திருந்த தமிழ் நண்பர்களை சந்திப்பதற்கு சிங்கள மக்களும் கூடவே சென்று தங்களது தமிழ் நண்பர்களை ஆரத்தழுவி உறவின் உணர்வுகளை மீட்டுக் கொண்டனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டில் உள்ளவாறான பல விடயங்கள் நடந்தேறாதிருக்கும் இவ்வேளையிலும் கூட இடையிடையே மக்களின் நலனுக்காக வெளிப்படுகின்ற இவ்வாறான செயற்பாடுகள் மனதிற்கு ஓரளவு திருப்தியளிப்பினும் இதனூடே நிரந்தர, உண்மை சமாதான ஒளிக்கீற்று தென்பட வேண்டும் என்பதே மக்களின் அவா. ▲



# இளையநாதம்

## புகழ்ந்தாரைப் போற்றிவாழ்

அக்பரின் மெய்க்காவலர் களில் குபேர் என்றொருவர் இருந்தார். அவர் மிகவும் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். இருப்பினும் கண்ணியம் மிக்க வராகவும், தொழில் மேல் பற்று உள்ளவராகவும் இருந்து வந் தார். அவர் கடமையிலிருந்து அவர் தவறியதே இல்லை.


இது அவருடன் பணியாற்றிய மற்றவர்களுக்கு எரிச்சலாக இருந்தது. எனவே அக்பர் வெறுக்கும் செயல் ஒன்றைக் குபேர் இல்லாத சமயத்தில் செய்து விட்டு அரசனிடம் அது குறித்துப் புகார் செய்தார்கள்.

இந்தச் செயலை செய்தது யார்? என்று அரசர் கேட்ட போது அவர்கள் அனைவரும் குபேர் பெயரையே சொன்னார் கள். ஆகவே அக்பரும் அது பற்றி விசாரிக்காமலேயே அவரை வேலை நீக்கம் செய்து விட்டார்.

குபேருக்கு இது தெரிந்தவுடன் இடி விழுந்தது போலானார். தன் ஏழைக்குடும்பத்தை இனி எப்படிக் காப்பாற்ற முடியும்? என்று பெரிதும் அதிர்ந்து போனார். எனவே அவர் நேராக பீர்பாலை சந்தித்துத் தனக்கு உதவும்படி கேட்டுக்கொண்டார்.

பீர்பால் சற்று ஆலோசனை செய்துவிட்டு இது குறித்து நீர் கலங்கத்தேவையில்லை. நான் சொல்வதைப் போய் நீர் செய்யும் அரசர் உம்மை மறுபடியும் வேலையில் சேர்த்துக் கொள்ளுவார் என்று கூறினார்.

குபேர் அவர் கூறியதைக் கவனமாகக் கேட்டுக் கொண் டார். அடுத்த நாள் சூரிய்ன் உதயமாகும் முன்னரே அரண்மனைக்குச்



சென்றார்.

அரண்மனை தலை வாயிலில் நின்றுகொண்டார்.

குபேர் இந்த வெள்ளிக் கிழமை உங்கள் அரண்மனைத் தலைவாயிலில் நிற்கிறார். உத்தரவு கிடைத்தால் உள்ளே வருவேன், இல்லாவிட்டால் அரண்மனையை விட்டும், அரசரை விட்டும் நிரந்தரமாகப்பிரிகிறேன் என்று உரக்கக் கூறினார்.

இப்படி அடிக்கடி கூவிக் கொண்டே இருந்தார் அக்பருக் குத் தகவல் பறந்தது. குபேரை உடனடியாக உள்ளே அழைத்துவர உத்தரவிட்டார் அக்பர்.

குபேர் உள்ளே நுழைந்து அரசரைக் கண்டவுடன் அவரை வணங்கி, அவர் கேள்வி எது வும் கேட்குமுன் முன்சொன்ன வாக்கியத்தைத் தெளிவாகக் கூறினார்.

குபேர் என்பது குபேரனைக் குறிக்கும் சொல்! செல்வத்தின் அதிபதி அவன் என்று இந்துப் புராணங்களில் வர்ணிப்பதை அக்பர் அறிவார்.

வெள்ளிக்கிழமை எல்லா மதத்தினருக்கும் புனித நாள்! அன்று இப்படிப்பட்ட சொல்லா? என்று அக்பர் சிந்தித்தார், அவர் மனதில் உவகை மூண்டது.

இப்படிப்பட்ட சாதுர்யமான சொல் வன்மையினை பீர்பால் ஒருவரால் மட்டுமே சொல்லித் தர முடியும் என்று அக்பருக் குத் தெரியும். ஆகவே குபே ரைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.


குபேர், நீர் வாழ்நாள் முழு வதும் இங்கேயே இருக்க வேண்டும்! என்னை விட்டோ என் அரண்மனையை விட்டோ என் நாட்டை விட்டோ போகக் கூடாது என்று கூறினார்.

குபேர் முன்னைவிட பெரிய பதவியில் இப்போது அமர்த்தப் பட்டார்.

எனவே புகழோடு வாழக் கூடிய பெரியவர்களை மதித்து அவர்கள் போதித்த நெறிப்படி வாழ வேண்டும்.


☐ ஆத்திசூடியில் ஔவையார்

## வழி காட்டுங்கள்




சிலந்தி வலையில் ஓர் ஈ மாட்டிக்கொண்டது. பசியோடிருக்கும் சிலந்தி, ஈயைப் பிடிக்க வேண்டும். எந்த வழியே சென்றால் அது ஈயைப்பிடிக்கும்?

## என்ன தவறு ?



## செய்து பாருங்கள் ?




6"x 6" அளவான வண்ணத்தாள் ஒன்றை எடுத்து படத்தில் காட்டியவாறு மடித்துப்பாருங்கள்

## வரலாற்றில் தடம் பதித்த விஞ்ஞானிகள் வரிசையில்...

### வில்லியம் பிறீசி கிரீன்

"இண்டைக்கு 'மினி'யில நல்ல சண்டைப்படமாம். வாறீங்களே போய் பார்ப்பம். பக்கத்து வீட்டு அமுதாக் காவின் நச்சரிப்பு இது. அது என்ன 'மினி'யிலை எண்டதும் எல்லாரும் விழுந்தடிச்சுக் கொண்டு ஓடுகினம் அங்கை எண்டால் ஏதும் விசேசமே என்ன!

விசேசம் தான் பாருங்கோ அங்கை பெரிய திரையிலை யெல்லோ படம் போடுகினம். அது தான் எல்லாரும் கைவேலையைக் கூட விட்டுவிட்டு ஓடக்காரணம். சரி திரையிலை படம் எண்டதும் போய் பார்க்கின்றீர்கள் இந்த திரை படம் எல்லாம் என்னெண்டு வந்ததெண்டு உங்களுக்கு தெரியுமே? அதுக்குத் தான் பாருங்கோ ஒரு கதையே இருக்குது.

அது என்னண்டா ஒரு நாள் லண்டன் மாநகரிலை சரியான சன நெருக்க டியான ஒரு இடத்திலை காவல்துறை க்காரன் ஒருத்தர் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாராம். அப்ப ஒருத்தர் ஓடி வந்து அவரின்ரை கையைப் பிடிச்சு இழுத்துக் கொண்டு என்னோட ஒருக்கா வாங்கோ ஒரு அதிசயம் காட்டுறன் எண்டு கூப்பிட் டாராம். திகைச்சுப் போன காவல் துறைக்காரன் 'இது என்னடா கரைச்சல் விசர் போலகிடக்குது' என்று நினைச்சுக் கொண்டு அவரோடை போக மறுத்து விடவே அந்த மனிதரும் விடாப்பிடியாக இருக்கவே அவருடன் சென்றாராம் காவல்துறைக்காரன். இருவரும் சென்ற அந்தக் கட்டிடம் உள்ளே இருட்டாக இருக்கவே 'ஏய்! என்ன இது என்னிடமா உன் விளையாட் டைக் காட்டுகிறாய் என்று அம் மனிதரின் மேல் பாயவும். அந்த அதிசயம் நிகழ்ந்தது பளிச்சென்று ஒளி எதிரே திரையிலை மனிதர்களின் நடமாட்டத்தைக் கண்ட



காவல்துறைக்காரன் என்ன இது என்று திரையை நோக்கி ஓடிப்போனாராம் சடாரென்று மீண்டும் இருட்டுஅறை முழுவதும். அப்பொழுது அந்த மனிதர் இது தான் ஒளிப்படம் நான் கண்டுபிடிச்சது. என்று சொன்னாராம் காவல் துறைக்காரனால் நம்பவே முடியவில்லையாம். இந்த மாதிரி திரையிலை படம் பார்க்கி றதிற்கு எங்களுக்கு ஒழுங்கு செய்து தந்தவர் தான் இந்த வில்லியம் பிறீசி கிரீன் .

சொல்ல மறந்து போனேன் இவர் தான் பாருங்கோ இந்த வீடியோ கமராவையும் கண்டுபிடிச்சவராம். சரியான மண்டைக்காய் போல் கிடக்குது. என்ன! இவர் முதலில் கமெராவுக்கு படச்சுருளைப் போட்டு படம் எடுக்காமல் நீண்ட காகிதச் சுருள்களை பயன்படுத்தினாராம் 'சுத்த பைத்தியம் படம் வருமே' என்ன பிறகுதான் படச்சுருளைப் போட்டு படங்களை எடுத்து தள்ளியே விட்டாராம். இப்ப நீங்களும் எடுத்துக்கொண்டு இருக்கின்றீர்கள். வேறொன்றுமல்ல படத்தைத்தான் உங்களுக்குப் படம் பார்க்கவும் படம் எடுக்க கமெராவையும் காட்டின இவர் தான் தன் திருப்திக்கு ஒரு சில படத்தைக் கூட முழுமையாக பார்க்காமலேயே இறந்துவிட்டாராம். பாவம் என்ன.

- கல்யாணி

## ரதனும் சுதனும்



**ரதன்:-** செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழமுடியுமா?

**சுதன்:-** செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழ்வதற்கான சாத்தியக்கூறு இருக்கலாம் என்று நம்பப்படுகிறது மனிதன் வாழ்வதற்கு காற்றும் நீரும் அவசியம் செவ்வாய் கிரகத்தில் நீர் இருந்ததற்கான ஆதாரம் இருப்பதாக ஐயம் எழுந்துள்ளது. அண்மையில் நாசா நிறுவனம் அனுப்பியுள்ள பாத் ஃபைண்டர் எனும் இயந்திர மனிதன் செவ்வாய் கிரகத்தின் மேல் நடந்து சென்று எடுத்த ஒளிப்படங்களில் வற்றிய நீரோடை இருப்பதற்கான ஆதாரம் உண்டு என அறிவியலாளர் நம்புகின்றனர்.

## வாரம் ஒரு குறள் அறிவோம்



மனிதர்களாகிய நாம் அனை வரும் கல்வி அறிவுள்ளவராக இருக்கவேண்டும்.
படிக்க படிக்க அறிவு வளரும் படித்தால் மட்டும் போதாது எதுவானாலும் தெளிவு பெற குற்றம் நீங்க ஆராய்ந்து கற்பதே சிறந்தது.
தெளிவுபெறக் கற்றால் மட்டும் போதாது அதன் வழி ஒழுக வேண்டும்.
கல்வியே நமது கண்ணாகும்.
ஏழேழு ஜென்மத்திற்கும் தொடர்ந்து வருவது கல்வியே
இதனையே திருவள்ளுவர் பின்வரும் குறளில்

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக

என்ற குறளில் எளிமையாக விளக்கியுள்ளார்.




# குதூகலம்



## கடன்காரரிடம் ஷெரிடன்

ஆங்கில எழுத்தாளர் ஷெரிடன் ஒருவரிடம் கொஞ்சம் பணம் கடன்வாங்கியிருந்தார். அதனைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று எவ்வளவுதான் விரும்பினாலும் அதற்கான வசதியே பலகாலம் அவருக்கு ஏற்படவில்லை. இந்நிலையில் அவரால் செய்ய இயன்றதெல்லாம் கடன்காரர்களுக்கு 'டிமிக்கி' கொடுப்பது ஒன்றுதான். தப்பித்தவறிக்கூட ஷெரிடன் கடன்காரர்களின் கண்ணில் பட்டுவிடமாட்டார். அவர்களைத் தொலைவில் வைத்துப் பார்த்ததுமே ஏதாவது ஒரு சந்தில் பொந்தில் நுழைந்துவிடுவார்

அன்று அவர் ஏதோ ஒரு சிந்தனையாக நடந்துகொண்டிருந்தவர் தாம் நிமிர்ந்து பார்த்தார்.எதிரிலே அவருக்கு கடன் கொடுத்தவர் ஒருவர் குதிரையில் வந்துகொண்டிருந்தார். எப்படியாவது நழுவிவிடலாமா என்று அங்குமிங்கும் பார்த்தார். பக்கத்தில் ஒரு சந்து,பொந்து ஒன்றும் தென்படவில்லை. அவரிடமிருந்து தப்பவேண்டும் என்றால் ஓடுவது ஒன்றுதான் வழி. நடுத்தெருவில் நான்குபேர் பார்க்க எப்படி ஓடுவது? அதுவும் பிரபல ஆங்கில எழுத்தாளர் ஷெரிடன் எப்படி ஓடமுடியுமா?.

இதற்குள் கடன் கொடுத்தவரும் அருகில் வந்துவிட்டார். ஷெரிடனுக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. 'பாவி மனிதன் நடுத்தெருவில் வைத்து மானத்தை வாங்கிவிடுவாரோ ' என்று நடுநடுங்கிப் போய்விட்டார் ஷெரிடன் ' அவருக்கு ஏற்பட்ட பதற்றத்தில், "ஐயா! நீங்கள் ஏறிவரும் குதிரை மிகவும் அழகாக இருக்கிறது" என்றார் அந்தக் கடன்காரரைப் பார்த்ததும்

'அப்படியா' என்று அளவற்ற மகிழ்ச்சியுடன் கேட்டார் அவர், தன் புரவியைப் புகழ்ந்ததில் அவர் அப்படியே பூரித்துப் போய்விட்டார்.

"ஆமாம், உண்மையைத்தான் சொல்லுகிறேன். ஓட்டத்தில் எப்படி? என்றார் ஷெரிடன்.

"ஓட்டத்தில் ஒன்றும் குறைந்ததல்ல. நீரே பாரும்" என்று கூறிவிட்டு ஒதர் அழுத்து அழுத்தினாரே பார்க்கலாம். குதிரை பிய்த்துக்கொண்டு பறந்தது.

'அப்பாடா!'என்று ஆறுதல் பெருமூச்சு விட்டார் ஷெரிடன். அப்போதைக்கு அவர், கடன்காரரிடமிருந்து தப்பிக்கொண்டார் அல்லவா?

## பழிக்குப் பழி



ஒருமுறை மார்க்ட்வெய்ன் ஏதோ வேலையாகத் தம் அடுத்த வீட்டுக்காரரிடம் சென்றிருந்தர். அவரிடம் அவ்வளவு நல்ல புத்தகங்கள் இருக்குமென்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. அவற்றை வாங்கி வந்து தம் வீட்டிலே வைத்துப் படிக்க வேண்டும்போல் தோன்றியது அவருக்கு. "என்ன நமக்குக் கொஞ்சம் இந்த நூல்களில் சிலவற்றைத் தந்துதவ முடியுமோ? படித்து விட்டு தந்து விடுகிறேன்."என்றார் தம் அண்டை வீட்டுக் காரரைப் பார்த்து. "தயவு செய்து கோபித்துக் கொள்ளக் கூடாது.வேண்டுமானால் என் நூல் நிலையத்திக்கு வந்து படித்துக் கொள்ளுங்கள். என்னடா இப்படிச் சொல்லுகிறார் என்று எண்ணி விடாதீர்கள். என் வீட்டை விட்டுப் புத்தகங்களை வெளியே விடுவதில்லை என்று நான் ஒரு விதி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிவிட்டார் அந்த மனிதர்.

மார்க்ட்வெய்ன் ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல் திரும்பி வந்து விட்டார்.

சில வாரங்கள் சென்றன. ஒரு நாள் அதே வீட்டுக்காரர் "நலம் தானே" என்று கேட்டுக் கொண்டே வந்தார். "என் புல்அரியும் இயந்திரம் கெட்டுப்போய் விட்டது. தங்களுடையதைக் கொஞ்சம் தந்துதவினால் தேவலை".

மார்க்ட்வெய்னுக்குப் பழிக்குப் பழி வாங்கிக் கொள்ளப் பொன்னான வாய்ப்பு கிடைத்து விட்டது. "என் புல்அரியும் இயந்திரத்தைத் தங்களுக்கு தந்துதவுவதில் எனக்கு மகிழ்ச்சி தான். ஆனால் நான் ஒரு விதி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன். என் புல்அரியும் இயந்திரம் என் வீட்டுப் புல் வெளியை விட்டு வெளியே போகக் கூடாது என்பதுதான் அது.அதனாலே நீங்கள் வேண்டுமானால் அதனை இங்கேயே பயன் படுத்திக் கொள் ளுங்கள்.அது பற்றி எனக்கு ஓர் ஆட்சேபனையும் கிடையாது".

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி

## புறந்தள்ளப்படும் மக்களின் கோரிக்கைகள்

'பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள படையினர் அதனை விட்டு வெளியேற மாட்டார்கள்'

'தென்மராட்சி பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்கள் உடன்மீளக் குடியேறுதல் சாத்தியமில்லை.'

இவ்வாறு சிறிலங்காவின் பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோ அறிவித்துள்ளார்.

இவை இரண்டும் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு எதிரான செயற்பாடுகளாகும் இயல்புநிலை என்பதன் அர்த்தம் மக்கள் தமது வாழ்விடங்களில் மீளக் குடியேறி சுயாதீனமாக தமது வாழ்வை வாழ்வதை அடித்தளமாகக் கொண்டதாகும்.

தமிழ் மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து, அவர்களது வளங்களைச் சிதைத்து, வாழ்வியல் சுதந்திர உரிமைகளை புறக்கணித்து பாதுகாப்பு நிலைகளை விஸ்தரிப்பதையும் முக்கிய இலக்காகக் கொண்டு, ஆக்கிரமிப்பு பகுதிகளை தம்மிஸ்டப்படி உயர்பாதுகாப்பு வலயங்கள் எனப் பிரகடனம் செய்து கொண்டு கண்மூடித்தனமாக செயற்படும் படையினருக்கு அனுசரணையாக இயங்கும் அரசு சமாதானம் குறித்து உலகளாவிய ரீதியில் பிரச்சாரம் செய்து வருவது வேடிக்கையாக உள்ளது.

போர் காரணமாக தமது வாழ்விடயங்களை விட்டு வெளியேறியமையையும் வெளியேற்றப்பட்டமையையும் தமக்கு அநுகூலமாக்கிக் கொண்டு அந்த மக்களின் வாழ்விடங்களை ஒரு அந்நியநாட்டை கைப்பற்றும் ஆக்ரேஷத்துடன் கைப்பற்றி அவர்களின் வீடுகளை, பாடசாலைகளை, மதவழிபாட்டு மையங்களை, பொதுஇடங்களை முகாம்களாக்கி நிலைகொண்டு நிற்கும் ஒரு ராணுவம் அம்மக்களுக்குரிமையான பிரதேசத்தையே உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறிக்கொண்டு நிரந்தரமாக நிலைகொள்ள முனைவது ஒரு மிக மோசமான மனித அடிப்படை உரிமை மீறலாகும்.

இதனை எந்தப்படை செய்தாலும் அந்தப்படையை பாதுகாப்புப்படை என்று கூறுவது அபத்தமாகும்.

இந்தப்படைக்கு எந்தஅரசு வக்காலத்து வாங்கினாலும் அந்த அரசு மக்கள்விரோத, அமைதிக்கு எதிரான, சமாதானத்தில் அக்கறையற்ற அரசேயாகும்.

இந்த மாதிரியான செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்க முனைவதென்பது மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரிக்கும் செயலாகவே கருதப்படும்.

மக்கள் தமது சொந்த இடங்களைவிட்டு ஏதிலியராக அலைந்து கொண்டிருக்க இடம்பெயர்ந்தும், புலம்பெயர்ந்தும், இன்னல் சுமந்தவராக அலைய, அந்த இடங்களை ஆக்கிரமித்துள்ள படையினர், அந்த மக்கள் தமது சொந்த இடங்களை சென்று பார்க்கவே அச்சுறுத்தி மிரட்டும் நிலையில், அந்தப்படையினர் அங்கிருந்து அகலமறுக்கும் செயலை அங்கீகரித்து அநுசரிக்க முயலும் அரசு சமாதான நகர்வுகளில் விசுவாசமாகச் செயற்படும் என்பதை எவராலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

மக்களின்-அதுவும் பாதிக்கப்பட்ட, அவர்களாலேயே ஏதிலியராக்கப்பட்டு பல ஆண்டுகாலமாக அல்லல்பட்டு அலையும் பொதுமக்களின் அமைதியான வாழ்வுக்கு அனுமதியளிக்க மறுக்கும், ஓர் அரசு அந்தமக்களின் வாழ்வியல் உரிமைகளை நியாயபூர்வமான முறையில் வழங்கும் என எப்படி நம்பமுடியும்?

சில நூற்றுக்கணக்கான படையினர் இருப்புக்காக பல ஆயிரக்கணக்கான மக்களின் இருப்பினை நிராகரிக்கும் ஆட்சி, அந்த மக்களின் இழப்புகளுக்கு நியாயபூர்வமான முறையில் தீர்வொன்றை வழங்க முன்வரும் என்று எவ்வாறு நம்பமுடியும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை என்பதன் அர்த்தமே நம்பிக்கையை பரஸ்பரரீதியில் ஆத்மார்த்தமான உணர்வுடன் கூடிய செயற்பாடுகளின் மூலம் கட்டியெழுப்புவதேயாகும்.

பித்தளைக்கு தங்க முலாம் போட்டு ஏமாற்றும் செப்படிவித்தைக்கான தடமாக புரிந்துணர்வை அரசு கருதக் கூடாது.



அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அலட்சியம் காட்டுவது மக்களது எதிர்பார்ப்புகளை புறந்தள்ளுவதாகவே அமையும் என்பதுடன் மக்களுக்கு அரசு அளித்துள்ள வாக்குறுதிகளையும் மறந்து செயற்படுவதாகவே அமையும்.

இது அமைதியையும், சமாதானத்தையும் நாடும் அரசின் நகர்வுகளாக ஒரு போதும் இருக்காது.

✱✱

- அமைச்சர் சந்திரசேகரனின் உறுதிமொழியையடுத்து-

# மட்டு-சிறைக்கைதிகளின் உண்ணாவிரதம் தற்காலிகமாக இடைநிறுத்த முடிவு

(மட்டக்களப்பு)



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மட்டு. சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த புதன்கிழமை முதல் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதம் அமைச்சர் சந்திரசேகரன் வழங்கிய உறுதி மொழியையடுத்து தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

சகல தமிழ் அரசியல்க் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த புதன் கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மட்டக்களப்பு சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் நேற்று நண்பகல் முதல் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

அமைச்சர்பெ.சந்திகேசரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் சிறைச்சாலைக்குச் சென்று அளித்த உறுதிமொழியை அடுத்து இந்தப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 27 கைதிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தாகவும் இதில் மூன்று அரசியல் கைதிகள் அம்பாறை மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணைக்காக ஆஜர் செய்யப்பட்ட போது விடுதலை செய்யப்பட்டதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்..

நேற்று சிறைச்சாலைக்கு விஜயம் செய்த அமைச்சர் அரசியல் கைதிகளைச் சந்தித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் அவருடன் இது பற்றிப் பேசவுள்ளதாகவும்.

இருவார காலத்துக்குள் இது பற்றி ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என்றும் உறுதி மொழி வழங்கி கைதிகளை உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுமாறு கோரினார்.

கடந்த காலங்களில் அமைச்சர்கள் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை உறுதி மொழிகளை வழங்கியும் பல தடவைகள் தாம் ஏமாற்றப்பட்ட சம்பவங்களை அமைச்சருக்கு கவலையுடன் தெரிவித்தனர்.

அமைச்சரும் ஒரு கட்டத்தில் அரசியல் கைதியாக இருந்தவர் என்பதை நினைவுபடுத்தி அவர் மீதான நம்பிக்கை காரணமாக உண்ணாவிரதத்தைக் கைவிட இணங்கினர்.

குறிப்பிட்ட இருவார காலத்துள் சாதகமான முடிவு இல்லையெனில் அடுத்த கட்டப் போராட்டம் வாழ்வா? சாவா? என்ற இறுதிக் கட்டமாக இருக்கும். அந்நேரம் எந்தவொரு அரசியல்வாதிகளும் தம்மை சந்திக்க வரக்கூடாதென அமைச்சரிடம் உண்ணாவிரதிகள் கூறினர்.

அரச தரப்பிலிருந்து தனக்குச் சாதகமான பதில் கிடைக்குமென்ற நம்பிக்கை இருப்பதாகவும் அந்த நம்பிக்கை சாத்தியமாகா விட்டால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வடக்கு கிழக்கு மட்டுமல்ல மலையகத்திலும் வெகுசனப் போராட்டங்களைத் தொடர்வேன் எனவும் இதற்காக அமைச்சர் பதவியைக் கூட துறக்க தயாராகவிருப்பதாகவும் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சர் சந்திப்பு

## தமிழ்க் கைதிகள் விவகாரம் தொடர்பாக பேச்சு

தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சட்டமா அதிபரையும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அவர்களையும் சந்தித்து தமிழ் அரசியல் கைதிகள் பற்றி பேசியுள்ளனர். இந்தக் கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரனும் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் எத்தனை தமிழ் அரசியல் கைதிகள் இருக்கிறார்கள். அவர்களை எந்த வகையில் விடுதலை செய்யலாம் எனவும் ஆராயப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அரச தரப்பில் நிரந்தர சமாதானம் ஏற்படும் பட்சத்தில்தான் அப்படியான ஒரு பொது மன்னிப்பு வழங்க முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாற்றீடாக பலவந்தமாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட வழக்குகளை நீக்குவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டது.

ஆனால் சில கைதிகள் முக்கியமான ஒரு சம்பவத்துடன் தொடர்புடையவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் எல்லோரையும் விடுவிக்க முடியும் என்று கூற முடியாது. ஆனால் வழக்குகளை பரிசீலித்து குறைந்த குற்றம் புரிந்தவர்களை விடுதலை செய்யலாம் எனவும் அரச தரப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

# விசேட உயர் நீதிமன்றம் கொழும்பில் அமைக்க ஏற்பாடு

சிறிலங்காவில் பயங்கரவாதத் தடைச்சட்டதின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களின் வழக்கினை விசாரிக்க விசேட மேல் நீதிமன்றம் ஒன்று கொழும்பில் அமைக்கப்பட வுள்ளது.


எதிர்வரும் ஓகஸ்ட் 12ம் திகதி முதல் இந் நீதிமன்றம் இயங்குமென சிறிலங்காவின் சமூக மேம்பாட்டுத்துறை அமைச்சரும் மலையக மக்கள் முன்னணித் தலைவருமான சந்திரசேகரன் நீதியமைச்சர் லொக்கு பண்டாரவினால் தனக்கு தெரிவிக்கப்பட்டதாக மட்டக்களப்பு சிறைச்சாலையில் தெரிவித்துள்ளார்.

இந்த நீதிமன்றத்தில் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் வழக்குகள் மட்டுமே விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படுவதோடு அரசியல் கைதிகளுக்கு இரண்டு வாரம் மட்டுமே வழக்குத்தவணை வழங்கப்படுமென்றும் தெரிவித்திருந்தார்.

# கொடிவாரம்

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க வருடாந்த கொடிவாரம் எதிர்வரும் 01-08-2002. தொடக்கம் 07.08.2002 வரை கிளிநொச்சி மாவட்டத்தில் அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஊனமுற்றவர்களின் நல்வாழ்விற்கு மாவட்ட நலன் விரும்பிகள் மனமுவந்து உதவிகள் நல்கிடும் வண்ணம் கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க திட்ட இணைப்பாளர் அருட் சகோதரி லூட்ஸ் யோசெப் வேண்டுகை விடுத்துள்ளார்.(சோ)

# சமாதான முயற்சிகள் குறித்து ரணில் — புஷ்ஷிடம் விளக்கம்



அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ். டபிள்.யூ.புஷ்சை சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சந்தித்து பதினைந்து நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கையின் சமாதான முயற்சிகள் மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் குறித்து சனாதிபதி புஷ்ஷிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுருக்கமாக விளக்கமளித்துள்ளார்.



இந்தச் சந்திப்புக்குறித்துபிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர் மத்தியில் தெரிவிக்கையில், இலங்கையின் சமாதான முயற்சிகளின் பின்னணியில் நின்று முழு அளவில் ஒத்துழைப்பு வழங்குவதற்கு அமெரிக்க சனாதிபதி உறுதியளித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறிலங்காவின் பொருளாதார அபிவிருத்திக்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று உறுதியளித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோடு அமைச்சர் மிலிந்த மொறகொட உட்பட பிரதமரின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிகால் ரொட்ரிக்கோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.இந்தச் சந்திப்பின் பின்னர் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலையும் சந்தித்து விரிவான பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

# நறுக்கென..



## சந்திரிகா எதிர் எஸ்.பி.திஸ்ஸநாயக்கா ... சரியான போட்டி

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவுக்கு இப்போது அதிக சினத்தையும், தலையிடியையும் கொடுத்து வருபவர்களில் மிகவும் முக்கியமானவர், அவருக்கு மிகவும் நெருக்கமான சகாவாக ஒருகாலத்தில் விளங்கியவரான 'சுசாந்திகா' விவகாரம் புகழ் சமுர்த்தி அமைச்சரான எஸ். பி. திஸநாயக்கதான்.

இப்போது ஐ.தே. முன்னணியிலும் அமைச்சராக ஒட்டிக்கொண்டுள்ள எஸ். பி. பொ. ஐ. முன்னணியை விட்டு வெளியேறும் போது சந்திரிகா வின்பலங்கள் அதைவிட அவரது பலவீனங்கள் அனைத்தையும் அறிந்து கொண்ட ஒருவராகவே சந்திரிகாவை சந்திக்கு கொண்டுவரும் ஒருவராகவே வெளியேறினார்.

சந்திரிகா இந்தச் 'சண்டித்தன' அரசியல்வாதியை வைத்துக் கொண்டே அப்போதெல்லாம் தனது அரசியல் எதிரிகளை அச்சுறுத்தி அடக்கிவந்தார். அதுஒரு பெரிய சரித்திரம்.

இப்போது அவர் கட்சி மாறிவிட காட்சியும் மாறிவிட்டது.

ஒருகாலத்தில் சிறிலங்காவின் ஒலிம்பிக் ஓட்டவீராங்கனையான 'சுசாந்திகா' சம்பந்தப்பட்ட விவகாரத்தில் அந்தப் பெண்ணுக்கு நியாயம் வழங்காது மௌனம் காத்தார் சந்திரிகா.

அப்போது எஸ். பி. அவருடைய நண்பர், ஆலோசகர் மதியூக மந்திரியும் கூட.. எஸ்.பி. கும்பல் சுசாந்திகா பாலியல் ரீதியாக அவமானப்படுத்திய போது சந்திரிகாவுக்கு அவரை குற்றவாளியாகத் தெரியவில்லை. அந்தப் பிரச்சினை அப்படியே அமுக்கப்பட்டு விட்டது.

இப்போது சுசாந்திகா ஒருவாறு தன்னை உலகரீதியாக நிலைப்படுத்தி தட்டிக் கொண்டுவிட்டார்.

சந்திரிகா மாட்டுப்பட்டுக் கொண்டார்.

அமைச்சர்களை பதவி நீக்க சனாதிபதி முயன்றால் அவருக்கு ஒதுக்கப்பட்ட நிதி இடைநிறுத்தப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் எஸ்.பி.

ஒருகாலத்தில் நிதி அமைச்சரான ஜனாதிபதிக்கு அவரின் பிரதி உள்நாட்டு நிதியமைச்சர் விடுத்துள்ள எச் சரிக்கை பொருத்தமானது தான்.

'சபாஷ் சரியான போட்டி'என்று கூறலாமல்லவா. ❖



## தமிழ் கைதிகளும், சிங்கள அரசுகளும்

மீண்டும் களுத்துறை - மட்டக்களப்பு சிறைச்சாலைக் கைதிகள் நியாயம் கோரி, உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துவிட்டார்கள்.

பெருமளவில் ஊழல்மோசடிகள் செய்துள்ள அமைச்சர்கள் அரசியல் வாதிகள்...

அப்பாவி முஸ்லீம்களை உடத்தலவின்னவில் காட்டுமிராண் டித்தனமாக படுகொலைசெய்த முன்னாள் பிரதி அமைச்சர் ரத்வத்தைபோன் றோர்கள்.. மீண்டும், பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களாக பொது வாழ்வில் பிரமுகர்களாக நடமாடவிட்டுள்ள அரசு தமிழ் கைதிகளை மட்டும் வருடக்க ணக்கில் பிணை விடுதலையோ, நீதி விசாரணைகளோ எதுவுமின்றி சிறையில் பயங்காரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அடைத்து வைத்து அவமதிப்பது எந்த வகையான ஜன நாயகத்துள் அடங்கு கிறது என்பது தெரியவில்லை.

இதுஒரு உளவியல் ரீதியிலான தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமிட்ட நடவடி க்கை என்றுதான் கூறவேண்டும்.

பொ.ஐ.முன்னணியோ, ஐ.தே. முன்னணியோ தமிழ்க் கைதிகள் விவகாரத்தில் அப்பட்டமான மனித உரிமை மீறல் செயற்பாடுகளையே தொடர்ந்து வருகிறது.

எரியும் பிரச்சினைக்கு அறிக்கை விட்டு, வாக்குறுதியளித்து தற்காலிகமாக தனித்துவிட முயலும் அமைச்சர் களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்க் கைதிகள் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் செய்யப் போவதில்லை என்பது தெளிவாக உள்ளது.

'தமிழ்க் கைதிகளை அரசாங்கம் விடுதலை செய்யும் நிலையில் இப்போது இல்லை' என்ற உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் வார்த்தைகள் தமிழ்க் கைதிகளுக்கு சிறிலங்கா அரசாங்காத்தாலோ, நீதி மன்றங்க ளினாலோ நீதி எதுவும் வழங்கப்பட மாட்டாது என்பதையே கோடி காட்டுகிறது.

அரசு அவர்களை விடுதலை செய் வதற்கு அவர்கள் என்ன சந்திரிகாவின் மாமன்மார்களா? மச்சான் மார்களா..? ❖



## செங்கோலும் கொடுங்கோலர்களும்

சிறிலங்கா பாராளுமன்றத்தில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர் கள் மோதல் ஆரம்பித்துவிட்டு பனிப்போர் நிலையில் - முறுகல் நிலையில் இருந்த ஆத்திர உணர்வும் கோபமும், வெறுப்பும் கைகலப்பு நிலைக்கு வந்துவிட்டது.

அப்போது அவர்கள் வசம் கற்களோ, கைக்குண்டுகளோ இருந் திருக்கவில்லை, புத்தகங்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளார்கள். அந்த அரசியல்வாத அறிவு ஜீவிகள்(!?)

சந்திரிகாவின் மில்லியன் ரூபாய் கள் பெறுமதியானதென்று கூறப்படும் கைப்பை விவகாரம் கைக்லப்பில் போய் முடிந்துள்ளது.

பாராளுமன்றத்தின் செங்கோலைக் கைப்பற்ற •கொடுங்கோல் முறைகளை கையாண்ட எதிர்க்கட்சியினர் பாராளு மன்ற அலுவலர் ஒருவரை காயங்களுக்குள்ளாக்கியுமுள்ளனர். சிறிலங்காவில் ஜனநாயகம் எந்தளவு கெலிக்கூத்தாகி வருகிறது என்பதற்கு இந்த நிகழ்வு ஒருசிறந்த உதாரணமாகும்.

இனிவரும் பாராளுமன்ற அமர்வுகள் இப்படித்தான் இருக்கப் போகிறது என்பதற்கு இது கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. ஜனாதிபதிக்கும், ரணிலின் அரசாங்கத்திற்கும் இடையேயான முரண்பாடுகளும் மோதல்களும் சமாதான நடவடிக்கைகளை குழப்பும் செயற்பாடுக ளாகவே அமையப்போகின்றது. ஆக.. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே எவராவது தலையிட்டு ஒருபுரிந்துணர்வு உடன்படிக்கையை(!?) ஏற்படுத்தாதவரை பாராளுமன்றத்தில் இப்படியான சுவாரஸ்யமான செய்திகள் தொடரத்தான் போகிறது...

இதனைத்.தான் ஜனாதிபதி விரும்புகிறார். இது அவரது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சியைக் கலைக்க அவருக்கு உதவுமல்லவா...! ❖

## அதிசய இரட்டையர்



தலையோடு ஒட்டிப்பிறந்த இரட்டையர்களான பதி னொரு மாத வயதுடைய மரியதிரேசாவும், மானாடி ஜீசஸ் அல்வரசும் அவர்களின் தாயான லெட்டிசீயா அல்பாவும் படத்தில் காணப்படுகின் றனர். கௌதமா லாவைச் சேர்ந்த இந்த பிள்ளைகளை பிரித்தெடுப்பதற் கான சத்திரசிகிச்சை இம் மாதம் நடைபெறவுள்ளது.

## வறுமையின் கொடுமை



இந்தோனேசியாவில் வறுமை காரணமாக தெரு வீதிகளில் பிச்சை எடுக்கும் சிறுவர்களின் தொகை அதிகரித்து வருவதாக செய்திகள் கூறு கின்றன. 1997ற்கு பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரையில் சுமார் 17மில்லியன் சிறுவர்கள் தெருவோரபிச்சைச்காரர் களாக மாறியுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

## மோப்பநாயும் கண்ணிவெடியும்



சரசாலைப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த மொசாம்பிக் நாட்டவர் ஒருவர் மோப்பநாயின் உதவியுடன் கண்ணிவெடியகற்றும் பிரிவில் ஈடுபட்டுள்ளார்.

## சந்திப்பு



அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் அவர்களும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டசும் அண்மையில் புதுடில்லியில் சந்தித்து பேசிய போது எடுக்கப்பட்ட படம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002 ம் ஆண்டு யூலை மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது